சர்வதேச புலனாய்வு வார இதழ்

03-12-2017

# பரபரப்பு

ஆசிரியர்: ரிஷி

## புலிகளைத் தாக்க ராணுவத்துக்கு வந்த ஆயுதங்களைத் திசை திருப்பிய



## நோர்வே உளவுத்துறை!





## 'றோ'வின் உளவாளி இலங்கை அரசுக்கு எதிராகத் திரும்பிய

# ரகசியம்!

ஒருமுறை படித்துப் பாருங்கள்... வாராவாரம் நீங்களே தேடி வாங்குவீர்கள்!

## தீவிரவாத பைனான்சியர் மணமகன் கோலத்தில் வசமாகச் சிக்கினார்!

# சி.ஐ.ஏ.க்கு அடித்த அதிஷ்டம்!

இமிகிரேஷன் மற்றும் கடற்படை உளவுப்பிரிவினர், தெற்கு பிலிப்பீன்ஸ் நகர் ஒன்றில் தீவிரவாத அமைப்பின் இரு முக்கியஸ்தர்களைக் கைது செய்திருப்பதாக அறிவித்துள்ளனர். இவர்களில் ஒருவர் தீவிரவாத அமைப்பின் பிரதான பைனான்சியர் எனவும் கூறுகின்றது உளவுப்பிரிவு. கைது செய்யப்பட்டுள்ள இருவருமே மலேசியப் பிரஜைகள்.

பிலிப்பீனோ பெண் ஒருவரைத் திருமணம் செய்ய மணமகன் கோலத்தின் நின்றிருந்த நேரத்திலேயே, கைது செய்யப்பட்டிருக்கிறார், தீவிரவாத பைனான்சியர்.

கைது செய்யப்பட்டுள்ள இருவரது பெயர்களும், அப்துல் உஸ்மான், ஓமர் அபு என்று கூறுகின்றது உளவுப்பிரிவு. இவர்கள் இருவரும் பிலிப்பீன்ஸில் மாதக்கணக்கில் வசித்திருக்கின்றார்கள். இவர்கள்மீது எப்படி முதலில் சந்தேகம் ஏற்பட்டது?

அது தற்செயலாக நடைபெற்றது என்பதுதான் சுவாரசியம். இவர்கள் இருவரும் தமது விசாவைப் புதுப்பிக்காததை அவதானித்த இமிகிரேஷன் உளவுப்பிரிவு, இவர்களைக் கண்காணித்தபோதே, இவர்களது தீவிரவாதத் தொடர்புகள் தெரியவந்திருக்கின்றன.

அதன்பின் இவர்களது நடமாட்டங்களைக் கண்காணிக்கும் வேலையை, பிலிப்பீன்ஸ் கடற்படையின் உளவுப்பிரிவு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றது.

50 வயதான ஒஸ்மான், பிலிப்பீன்ஸில் பேசப்படும் பாஷைகள் எதுவும் தெரியாத நிலையில், அந்நாட்டுப் பெண் ஒருவரைத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்வதும் தெரியவந்திருக்கின்றது. குறிப்பிட்ட பிலிப்பீனோ பெண்ணின் குடும்பத்தினருக்கு உஸ்மான் பெருமளவில் பண உதவிகள் செய்யத் தொடங்கவே, இவருக்குப் பணம் எங்கிருந்து வருகின்றது என்ற விபரங்களைத் துருவத் தொடங்கியது பிலிப்பீன்ஸ் உளவுப்பிரிவு.

அப்போதுதான், தீவிரவாத அமைப்பு ஒன்றின் பணம், உஸ்மான் ஊடாக வந்து போவது தெரியவந்திருக்கின்றது.

உளவுப்பிரிவின் அதிகாரி மரியா மான்குரோடாங், “எமது ஆரம்ப விசாரணைகளில் இவர்களுடைய தீவிரவாதத் தொடர்புகள் பற்றித் தெரியவந்துள்ளது. அவர்கள் சம்மந்தப்பட்ட தீவிரவாத அமைப்புப் பற்றிய ஆழமான விடயங்களை அறிய நாம், வெளிநாட்டு உளவுத்துறைகளின் உதவியைக் கோரவுள்ளோம்” என்கிறார்.

இந்த விபரங்களுக்காக, மலேசிய மற்றும் அமெரிக்க உளவுத்துறைகளைத் தொடர்புகொண்டது பிலிப்பீன்ஸ் உளவுத்துறை. இந்த இடத்தில் ஒரு திருப்பம்!

இந்தக் கைதில் தொடர்புடைய இமிகிரேஷன் பிரிவு, இவர்கள் மீது குடிவரவுச் சட்டத்திலேயே குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது. அனுமதி இல்லாமல் நாட்டில் தங்கியிருந்தது என்பதே அவர்களது குற்றப் பத்திரிகையில் காண்பிக்கப்பட்டுள்ள பிரதான குற்றச்சாட்டு. இந்த நடைமுறை, ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எப்படியென்றால், குடிவரவுச் சட்டத்தை மீறியது மாத்திரம்தான் இவர்கள் மீதான குற்றமாகப் பதிவு செய்யப்பட்டால், ஒரு நீதிபதி இவர்களை நாடுகடத்தும்படி உத்தரவிட முடியும்.அதன்பின், இவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதாக கைகழுவிவிடமுடியும்.

எவ்வித சட்டச் சிக்கலும் இல்லாமல், இவர்களை சி.ஐ.ஏ.யிடம் ஒப்படைத்துவிடலாம். சி.ஐ.ஏ., வெளிநாடுகளிலுள்ள தமது விசாரணை முகாம்கள் ஏதாவது ஒன்றுக்கு இவர்களைக் கொண்டு சென்றுவிடும்.

அப்படிச் செய்யாமல், இவர்கள்மீது தீவிரவாதக் குற்றச்சாட்டில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தால், இவர்களது வழக்கு பிலிப்பீன்ஸில் பதிவு செய்யப்பட்டுவிடும். நாளைக்கே இந்த விடயத்தில் மனித உரிமை அமைப்புகள் தலையை நுழைத்தால், அவர்களுக்கு இவர்கள் இருவரையும் காண்பிக்க வேண்டிய நிலை பிலிப்பீன்ஸ் அரசுக்கு ஏற்படும். இது தீவிரவாத அமைப்பு ஒன்றின் நிதி வழங்கல் விவகாரம் என்பதால், சி.ஐ.ஏ.க்கு மிக முக்கியமான விடயம். அவர்கள் இப்படி அகப்படுபவர்களை, தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்தே விசாரிப்பது வழக்கம்.

அதற்கான செட்டப்பே, இவர்கள் மீது வெறும் குடிவரவு வழக்குகள் பதிவு செய்திருப்பது!

மலேசியா, பிலிப்பீன்ஸ் ஆகிய இரு நாடுகளையும் தாண்டி, இந்த விஷயம் ஆழமானது. கைது செய்யப்பட்டுள்ள உஸ்மானின் பின்னணியில் இருந்தே இது புரிகிறது. அப்படி, அவரது பின்னணி என்ன?

இந்த உஸ்மான், அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்றவர். (1996 1999 காலப்பகுதியில் அமெரிக்காவின் டெனஸ் பல்கலைக்கழகத்தில்). வெளிநாடுகளில் தீவிரவாத அமைப்புகளுக்குச் சேகரிக்கப்படும் நிதியைக் கையா ளும் ஆட்கள் அமெரிக்காவில் கைதாகத் தொடங்க, சிக்காத ஆட்கள் அமெரிக்காவிலிருந்து வெளியேறிவிட்டனர். இவர்களில் பலர் ஆசிய நாடுகளுக்குத் தமது தளங்களை மாற்றிக் கொண்டனர்.

உஸ்மானும் அப்படி, தனது தாயகமான மலேசியாவுக்குத் திரும்பினார். ஆனால், அவர் மலேசியாவில் உளவுப் பிரிவினரின் கண்காணிப்பு வளையத்துக்குள் சிக்கிக் கொள்ளவே, அங்கிருந்தும் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், மலேசியாவிலிருந்து பிலிப்பீன்ஸ் நாட்டுக்குள் அடிக்கடி சென்று வந்தார்.

பிலிப்பீன்ஸ் இமிகிரேஷன் வைத்துள்ள தகவல்களின்படி உஸ்மான், பிலிப்பீன்ஸ் நாட்டுக்குள் ஜோலோ, சூலூ ஆகிய நுழையவாயில்களின் ஊடாக அடிக்கடி வந்து போயிருக்கின்றார். ஒருகட்டத்தில் மலேசியாவுக்குச் செல்வதையே நிறுத்தி, பிலிப்பீன்ஸிலேயே தங்கிவிட்டார்.

சில மாதங்களுக்குமுன், பிலிப்பீன்ஸ் உளவுத்துறை விடுத்த அறிக்கை ஒன்றில், பெயர் குறிப்பிடாத தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய ஐந்து முக்கிய நபர்கள், தமது நாட்டின் தென் பகுதி நகரங்களில் மறைந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது என்று கூறப்பட்டிருந்தது. உளவுப்பிரிவு இவ்வாறு அறிவித்த பின்னரும், அவர்களில் யாரையும் கைது செய்ய முடியவில்லை.

இப்போது மலேசியரான பைனான்சியர் உஸ்மான் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீங்களே சொல்லுங்கள், இவரைத் தம்வசம் எடுத்து விசாரிக்க சி.ஐ.ஏ., விரும்புமா? விரும்பாதா?

### பரபரப்பின் அறிவித்தல்!

இவ்வார இதழில் இடமின்மை காரணமாக வெளிநாடுகளில் மேற்படிப்பு பற்றிய தொடர் இடம்பெறவில்லை. அந்தத் தொடர் அடுத்த இதழில் இடம்பெறும். வாசகர்களின் சிரமத்துக்கு மன்னிப்புக் கோருகிறோம்.

பரபரப்பு வார இதழில் வெளியாகும் ஆக்கங்கள் எதையும் மறு பிரசுரம் செய்வதோ, ஒலிபரப்பு, ஒளிபரப்பு செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. கட்டுரைகளில் எழுதியவர் பெயர் இடம்பெறாவிட்டால், அந்தக் கட்டுரைகளை எழுதியவர் பரபரப்பு வார இதழின் பிரதம ஆசிரியரே. பரபரப்பு வார இதழில் வெளியாகும் விளம்பரங்களின் பொருளடக்கத்துக்கு விளம்பரதாரர்களே முழுப் பொறுப்பாளர்கள்.

**தொடர்புகளுக்கு**
இலங்கை தலைமை அலுவலக முகவரி: 46 மாவடி வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய், இலங்கை.
தொலைபேசி: 021 225 5678 அல்லது 021 225 6830
மின்னஞ்சல்: info@paraparapumedia.com

**Sri Lankan Head Office**
**Address:** 46 Mavadi Lane, Suthumalai South, Manipay
**Phone:** 021 225 5678 / 021 225 6830
Email: info@paraparapumedia.com

**Our Management Team**
**General Manager Marketing**
Mr. S.Mathusan (mathusan@paraparapumedia.com)
Phone: 076 461 1774

**Marketing Executives**
Ms. S.Sharmini (sharmi@paraparapumedia.com)
Ms. Sinthuja Srikantharasa (sinthu@paraparapumedia.com)
Mr. P.Sathees Kumar (sathees@paraparapumedia.com)

**பிரதம ஆசிரியர்**
ரிஷி
**Editor-in-Chief**
Rishie
Phone: 077 965 5636
Email: rishie@paraparapumedia.com

**அத்தியாயம் பதின்மூன்று**

இந்த ரயில் கொள்ளையில் பிளாக்மெயிலும் உண்டு!
இதோ வந்துவிட்டது அதற்கான நேரம்!!

சப் அன்ட் சன்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் லாரன்ஸ் கொஞ்சம் தயங்கினார். அவருடைய நிறுவனம், மிகப்பெரிய வங்கிகளுக்கும் பாதுகாப்புப் பெட்டகங்கள் செய்து கொடுக்கும் நிறுவனம். அநேக வங்கிகள், தமது வங்கிகளில் பயன்படுத்தும் பாதுகாப்புப் பெட்ட கங்களை மற்றையவர்கள் பார்ப்பதை விரும்புவதில்லை. அதற்காகச் சில வங் கிகள், வழமையாக எல்லோராலும் வாங்கக்கூடியதாகவுள்ள மொடல்களில் உள்ள பாதுகாப்புப் பெட்டகங்களைப் பயன்படுத்தாமல், தமது வங்கிக்கென்றே பிரத்தி யேகமாகத் தயாரிக்கச் சொல்வார்கள்.

இதனால்தான் சப் அன்ட் சன்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் லாரன்ஸ், பாது காப்புப் பெட்டகங்களின் மொடல்கள் அடங்கிய கட்லொக்கை மட்டும் காட்டி, அதி லிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி மிஸ் மரியத்திடம் கூறியிருந்தார்.

இருப்பினும் மிஸ் மரியம் 'கவர்ச்சியான' புன்னகையுடன் வற்புறுத்தவே, லாரன்ஸ் அரை மனதுடன் சம்மதித்தார். "சரி. உங்களை அழைத்துச் சென்று காட்டுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. அங்குள்ள பாதுகாப்புப் பெட்டகங்கள் எதையும் நீங் கள் கைகளால் தொடக்கூடாது"

"நான் எதற்காகத் தொடப்போகின்றேன்? என் கைகளால் தொடப்படும் பாக்கியம் பெற்றவை, பாதுகாப்பு பெட்டகங்கள் அல்ல. அதற்கு வேறு ஆட்கள் உள்ளார் கள்" என கிறக்கமான பார்வையுடன் கூறிய மிஸ் மரியம், "கண்களால் பார்த்தால் போதும்" என்றார்.

தேன் குடித்த நரிபோல மாறிய லாரன்ஸ், மிஸ் மரியத்தை உள்ளேயிருந்த தொழிற்சாலைக்குள் அழைத்துச் சென்றார். லாரன்சைத் தொடர்ந்து தொழிற்சா லைக்குள் நுழைந்தார் மிஸ் மரியம்.

உள்ளே வெவ்வேறு அளவுகளில் இரும்புப் பெட்டகங்கள் இருந்தன. சில திறந் திருந்தன. சில மூடியிருந்தன. சிலவற்றில் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். "இதோ இதைப் பாருங்கள். ஒரு சதுர அடி அளவுள்ள பெட் டகம். இரண்டு லேயர்களால் ஆனது. இரும்பின் தடிப்பம் பதினாறு அங்குலம். யாராலும் உடைக்க முடியாது. இந்த அளவு உங்களுக்குச் சரியாக இருக்குமா"

மிஸ் மரியம் உதட்டைப் பிதுங்கினார். "இதைவிடப் பெரியதாக வேண்டும். இந்த அளவு எங்களுக்குப் போதாது"

"சரி. இதைப் பாருங்கள். அதைவிடப் பெரியது. நான்கு சதுரஅடி பரப்பளவு. இரண்டு சாவிகள். அருமையான தயாரிப்பு"

"என்னுடைய கணவர் ஒரு கோடீஸ்வரர் என்று சொன்னேன். ஞாபகமில்லையா. எங்களிடம் இருக்கும் பணம், நகை எல்லாவற்றையும். இதற்குள் வைக்க முடி யாது. இதைவிடப் பெரிய பெட்டகத்தை எதிர்பார்க்கிறேன்"

"அப்படியா, சரி. என்னைத் தொடர்ந்து வாருங்கள். அடுத்த அறையில் வேறு சில பெட்டகங்கள் இருக்கின்றன. பார்க்கலாம்"

இதற்கிடையே, மிஸ் மரியம் தேடிச்சென்ற பாதுகாப்பு பெட்டகம் அதே அறையின் ஒரு மூலையில் இருப்பது அவரது கண்களில் பட்டுவிட்டது. அது என்னவென்று சொல்லாமலேயே நீங்கள் புரிந்து கொள்வீர்கள். ஆம். ரயிலில் தங்கப் பாளங்கள் வைக்கப்படும் அதே பாதுகாப்புப் பெட்டகம்தான்.

"பொறுங்கள். இதோ இந்தப் பெட்டகம் சரியான சைசில் இருக்கிறது. இப்படி யான ஒன்றைத் தான் நான் தேடுகிறேன். நான்கு சாவிகள் போட சாவித் துவா ரங்கள் இருக்கின்றன. பாதுகாப்பாக இருக்கும்"

"இந்தப் பெட்டகம்..." லாரன்ஸ் தயங்கினார். "எமது தயாரிப்புக்களில் முதன்மை யான பெட்டகம்தான் இது. ஆனால்

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



இது விற்பனைக்கல்ல. ஏற்கனவே விற்றுவிட்டோம். இப்போது வருடாந்தப் பராமரிப்புக்காக வந்திருக்கின்றது. ஹட்டில்ட்சன் அன்ட் பிராட் போர்ட் வங்கியின் தங்கப் பாளங்களை இதில் வைத்துத்தான் ட்ரெயினில் பிரான்சுக்கு அனுப்புவார்கள்" என்றார் பெருமையாக.

இதோ பந்தை மிகவும் ஈசியாகப் போட்டுத் தருகிறார் லாரன்ஸ்... விடாமல் அடியுங்கள் மிஸ் மரியம். "உங்களது தயாரிப்புகளில் முதன்மையானது என்கிறீர்கள். ஆனால் பழுதாகி திரும்ப வந்திருக்கிறதே. இவ்வளவுதானா உங்களது பெட்டகங்களின் தரம்?"

"பழுதாகி வந்தது என்று யார் சொன்னது? வருடம் ஒருமுறை பராமரிப்புக்காக நாங்கள் விற்கும் எல்லாப் பெட்டகங்களையும் இங்கே எடுத்துவந்து எல்லாம் சரியாக வேலை செய்கின்றனவா என்று பார்த்து அனுப்புவோம். அதற்காகத்தான் இது வந்திருக்கிறது"

ஆஹா... இதோ அருமையான சந்தர்ப்பம். இதைத் தவறவிடாதீர்கள் மிஸ் மரியம்... அடுத்த கேள்வியை வீசுங்கள். "ஓகோ அதுவும் அப்படியா? வருடம் ஒருமுறை இரும்புப் பெட்டகங்களை பராமரிப்புக்காக உங்களிடம் அனுப்ப வேண்டுமா? அப்படியானால் வருடம் ஒருமுறை அதன் பூட்டுக்களை மாற்றி புதிய பூட்டுக்கள் பொருத்திக் கொடுப்பீர்கள். அப்படித்தானே"

"பூட்டுக்களை மாற்றுவதா?" சிரித்தார் லாரன்ஸ். நாங்கள் தயாரிக்கும் பூட்டுக்கள் 100 வருடங்களுக்கு அசையாது. பூட்டுக்களை மாற்றமாட்டோம். அவற்றிற்கு எண்ணெய் போட்டுக் கொடுப்போம். அவ்வளவுதான்"

மிஸ் மரியம்... இதோ தகவலை நீங்கள் உறுதி செய்யவேண்டிய நேரம் வந்து விட்டது. விடாதீர்கள்... கேளுங்கள்... "அப்படியானால், இந்தப் பெட்டகத்துக்கும் எண்ணெய் மட்டும் போட்டுக் கொடுக்கப் போகிறீர்களா?"

"ஆம். அவ்வளவுதான். வெறும் ஒரு நாள் வேலை"

இது போதுமே... இந்தத் தகவலைப் பெறுவதற்காகத்தானே மிஸ் மரியம் வந்தார்! கவர்ச்சிப் புன்னகை வீசினார்!!

"மிகவும் நல்லது. உங்களது இரும்புப் பெட்டகங்கள் என்னைப் பிரமிக்க வைக்கின்றன.

நாளை எனது கணவரையும் அழைத்து வருகிறேன். அவரும் ஒருமுறை பார்த்துவிட்டால், உடனே வாங்கிவிடலாம்"

"தாராளமாக அழைத்து வாருங்கள். நாங்கள் உங்களைப் போன்றவர்களுடன் வர்த்தகம் செய்யக் காத்திருக்கிறோம்"

மிஸ் மரியம் எட்வார்ட்டின் மாளிகைக்குத் திரும்பினார். வங்கிக்காரர்கள், இரும்புப் பெட்டியின் பூட்டுக்களை மாற்றுவதற்காக சப் அன்ட் சன்ஸ் நிறுவனத்துக்கு அனுப்பவில்லை என்ற 'நல்ல சேதி'யைத் தெரிவித்தார்.

இனியும் தாமதிக்கக்கூடாது. தாமதிக்கத் தாமதிக்க வேறு இடையூறுகள் வந்தாலும் வரலாம் என்று எட்வார்ட் தீர்மானித்தார். ஏற்பாடுகள் எல்லாம் முடிந்த நிலையில் ட்ரெயின் கொள்ளைக்கான இறுதி திகதி குறிக்கப்பட்டது.

அந்த திகதி மே மாதம், 22ம் திகதி, 1855ம் ஆண்டு.

எல்லாம் சரியாக இருந்தும், அந்தத் திகதியில் திட்டமிட்டபடி கொள்ளையடிக்க முடியாமல் மற்றுமோர் இடைஞ்சல் வந்து சேர்ந்தது, ஒரு கடிதம் மூலமாக!

> மே 17, 1855
> திரு எட்வார்ட் பியர்ஸ்,
> நாங்கள் உங்களை அவசரமாகச் சந்திக்க வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. இது எங்கள் இருவருக்கும் மிக முக்கியமான விஷயம் என்பதால் சந்திப்பைத் தவிர்க்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.
>
> இப்படிக்கு,
> வில்லியம் வில்லியம்ஸ்

கடிதத்தை ராபர்ட்டிடம் காட்டினார் எட்வார்ட். கடிதத்தை எழுதிய வில்லியம் வேறு யாருமல்ல கிளீன் வில்லி! இவர்களால் சிறையிலிருந்து தப்புவிக்கப்பட்ட நபர். லண்டன் பிரிட்ஜ் ரயில்வே அலுவலகத்தினுள் இறங்கி, ராபர்ட்டுக்காக கதவை திறந்துவிட்ட அதே ஆள்.

"எதற்காக இந்தக் கடிதம்"

"நான் நினைப்பது சரியாக இருந்தால்.."

எட்வார்ட் யோசித்துவிட்டுச் சொன்னார். "கிளீன் வில்லி எங்களை பிளாக் மெயில் செய்யத் திட்டம் வைத்திருக்கலாம்"

திடீரென எட்வார்ட் கேட்டார், "கிளீன் வில்லிக்கு நாங்கள் ட்ரெயினைக் கொள்ளையடிக்கப்போகும் திட்டம் தெரியாது அல்லவா"

"தெரியாதுதான். ஆனால், நாங்கள் ரயில்வே அலுவலகத்தில் இருந்து சாவிகளைப் பிரதி பண்ணிய விஷயம் கிளீன் வில்லிக்குத் தெரியும்"

"அந்தச் சாவிகள் எதற்கான சாவிகள் என்பது கிளீன் வில்லிக்குத் தெரியாதே"


"தெரியாது. ஆனால் இந்தச் சாவிகள் பற்றி கிளீன் வில்லி போலீசுக்குச் சொன்னால், அவர்கள் புரிந்து கொள்வார்கள் திட்டம் என்னவென்று"

"இப்போது என்ன செய்யலாம்"

"கிளீன் வில்லியைச் சந்திக்க வேண்டியதுதான். அதைவிட வேறு வழியில்லை"

"ஆளின் கதையை முடித்து விடலாமா"

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



"முதலில் சந்திக்கலாம். பேசலாம். அதன் பிறகு என்ன செய்வதென்று முடிவு கட்டலாம்"

மறுநாளே சந்தித்தார்கள். எட்வார்ட் எதிர்பார்த்தது சரியாகத்தான் இருந்தது. கிளீன் வில்லி தயங்காமல் விஷயத்துக்கு வந்தார். பணம் கேட்டார். "பணமா? எதற்கு? நீங்கள் செய்த வேலைக்கு ஏற்கனவே பணம் கொடுத்தாகி விட்டதே"

"அது வேலை செய்ததற்கு. இது செய்த வேலை பற்றி வெளியே மூச்சு விடாமல் இருப்பதற்கு."

கிளீன் வில்லி நேரடியாக கேட்டு விட்டாலும் ஆளின் தோற்றத்தில் ஒரு பதட்டம் தெரிந்தது. இதற்கு முன் இப்படியான பிளாக் மெயில் எதுவும் செய்திருக்காத காரணத்தால் ஏற்பட்ட பதட்டமாக இருக்கலாம்.

எட்வார்ட் பதறவில்லை. பயப்படவும் இல்லை. "வில்லி... இதுபற்றி யாருடனாவது ஏற்கனவே பேசிவிட்டீர்களா"

நேருக்கு நேர் பார்க்காமல், "இருக்கலாம்" என்றார்.

"வெயிட். நான் கேட்பதற்கு நேரடியான பதில் தேவை. நீங்கள் ஏற்கனவே போலீசுக்குப் போயிருந்தால் நான் பணம் கொடுப்பதில் அர்த்தம் இல்லை. அவர்களுக்கு விஷயம் தெரிந்துவிட்டால், பிறகு நான் எதற்காகப் பணம் கொடுக்க வேண்டும்"

"நான் போகவில்லை. போலீஸ்தான் என்னை அணுகினார்கள்"

எட்வார்ட் கேலியாகச் சிரித்தார். "போலீஸ் உங்களை அணுகினார்களா? நீங்களே சிறையில் இருந்து தப்பி, தலைமறைவாக இருக்கிறீர்கள். போலீஸ் உங்களை அணுகியிருந்தால், முதலில் உங்களை கைது செய்திருப்பார்கள். இல்லையா"

"அவர்கள் என்னைக் கைது செய்வது பற்றிப் பேசவே இல்லை. என்னை நம்புங்கள். சிறையில் இருந்து தப்பிய பின்னர் நான் என்னென்ன வேலைகள் செய்தேன் என்பதைச் சொல்லச் சொன்னார்கள். அவ்வளவுதான். சிறையில் இருந்து தப்பியது பற்றி அவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை"

"என்னென்ன வேலைகள் செய்தீர்கள் என்று சொல்லிவிட்டீர்களா"

"இன்னும் இல்லை. இரண்டு நாட்கள் அவகாசம் கேட்டிருக்கிறேன். நீங்கள் பணம் கொடுங்கள். நான் யாருடைய கண்ணிலும் படாத இடத்துக்குப் போய்விடுவேன்"

"வந்த போலீஸ்காரர்கள் யார்?"

"மிஸ்டர் ஹரன்பி, மிஸ்டர் ஷார்ப் என்று பெயர் சொன்னார்கள்"

எட்வார்ட் யோசனையுடன் முணுமுணுத்தார்... "அவர்களா? ஸ்காட்லண்ட் யார்ட் துப்பறியும் இலாகா!" **(தொடரும்)**



# கப்பலில் கடத்தும் தில்லாடி வேலை இது!

கப்பல்களைச் சொந்தமாக வைத்துக்கொண்டு, கடத்தல் வேலைகள் செய்வது சுலபமா? அதுவும் ஆயுதக் கடத்தல்கள்? இதோ, இந்தக் கில்லாடித்தனமான தந்திர விளையாட்டைப் படித்துப் பாருங்கள்.

**சர்வதேச புலனாய்வு**

சமீபத்தில், ஹொங்கொங் கொடி பறந்துகொண்டிருந்த சரக்குக் கப்பல் ஒன்று தென்னாபிரிக்கத் துறைமுகமான டேர்பனில் நங்கூரம் பாய்ச்சியது. இது அந்தக் கப்பல் செல்லும் வழக்கமான பாதையல்ல. பாதையை மாற்றிக் கொண்டு அங்கு வந்த சரக்குக் கப்பல், துறைமுகத்தில் தரித்து நின்றது சுமார் ஒரு மணி நேரம் மட்டும்தான்.

அந்த ஒரு மணி நேரத்துக்குள் கப்பலில் ஏற்றப்பட்ட சரக்குத்தான் வில்லங்கமானது!

நீர்மூழ்கி ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லக்கூடிய பிளேடர்ரன்னர் 51 ரக வேகப் படகு ஒன்றுதான் கப்பலில் ஏற்றப்பட்டது. (பாரசீக வளைகுடா கடல் யுத்தங்களில் தாக்குதல் படகாகப் பயன்படுவது இந்தப் படகுகள்தான்!)

கப்பல் டேர்பனில் இருந்து கிளம்பிச் சென்றபோது கப்பலின் பெயர் கடல் ராணி (ஓஷன் குவீன்) என்று அதன் பக்கவாட்டில் எழுதப்பட்டிருந்தது. கப்பலின் ஆவணங்களின்படி, ஈரான் நாட்டுத் துறைமுகமான பாந்தருக்கு அந்தக் கப்பல் செல்கின்றது. ஸ்டேரி ஷைன் லிமிடெட் என்ற நிறுவனத்துக்கு கப்பல் சொந்தமானது.

கடல் ராணி என்ற பெயரும், அதன் உரிமை நிறுவனத்தின் பெயரும் நிஜமானவை அல்ல. 6 மாதங்களுக்கு முன்னர் இதே கப்பல் இரிசில் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமாக இருந்தது.

அப்போது இதே கப்பலின் பெயர் ஈரான் முபாதெஹ். இரிசில் என்ற நிறுவனத்தின் பெயரின் விரிவாக்கம் இஸ்லாமிக் ரிபப்ளிக் ஒஃப் ஈரான் ஷிப்பிங் லைன் என்பது. இந்த நிறுவனம் ஈரானிய அரசுக்குச் சொந்தமான நிறுவனம்.

டேர்பன் துறைமுகத்திலிருந்து கடல் ராணி கப்பல் தாக்குதல் படகை ஏற்றிச் சென்ற சில தினங்களின் பின்னரே அது பற்றி முழு விபரங்களையும் தெரிந்து கொண்டது அமெரிக்கா. ஆயுத ஏற்றுமதித் தடைகளை ஏமாற்றவே கப்பலுக்கு வேறு பெயரை இரிசில் மாற்றியிருக்கிறது என்றது அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.

அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. இந்தக் கப்பல் பற்றித் துருவத் தொடங்குகின்றது என்ற விஷயம் ஈரானுக்கும் தெரியவந்த உடனே, தி ஆம்பிளிஃபை கப்பலின் நிஜ உரிமையாளர் யார் என்பதை ஆவணங்களில் இருந்து அகற்றும் முயற்சியில் இரிசில் இறங்கியது. அதற்குள் அந்தக் கப்பல் ஈரானிய அரசுக்குச் சொந்தமான இரிசில் நிறுவனத்தின் கப்பல்தான் என்று

அடுத்த பக்கம் வாருங்கள் ➡





ஒரிஜினல் இரிசில்!

சி.ஐ.ஏ. தெரிந்துகொண்டது. மற்றைய உளவுத்துறைகளுக்கும் தகவல் கொடுத்தது.

2008ம் ஆண்டு இரிசில் மற்றும் அதற்குச் சொந்தமான கப்பல்களை அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் சேர்த்தது. இரிசில் நிறுவனத்தின் கப்பல்கள் ஈரானின் அணு சக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்களுக்குத் தேவையான பொருட்களை வெவ்வேறு நாடுகளில் இருந்து ஈரானுக்கு ஏற்றிச் சென்றதாலேயே இந்தக் கறுப்புப் பட்டியல் நடவடிக்கை அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே ஆயுதங்களை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று ஈரானுக்கு விதிக்கப் பட்டுள்ள சர்வதேசத் தடையை மீறி ஆயுதங்களைக் கடத்தியது தொடர்பாக இரிசில் நிறுவனத்தைக் குறிவைத்துப் பல்வேறு தடைகள் உள்ளன. அப்படியிருந்தும் தடைகளை உடைப்பதில் ஈரான் எவ்வாறு வெற்றி பெறுகிறது?

மிகவும் சிம்பிளான ஒரு விளையாட்டு அது!

இரிசில் நிறுவனத்தின் கப்பல்களின் கொடிகள் மற்றும் பெயர்களை மட்டும் மாற்றுவதோடு நின்றுவிடாமல், அதன் உரிமையாளர்கள், இயக்குடவர்கள், நிர்வாகிகள் ஆகியோரையும் ஈரான் அடிக்கடி மாற்றிவிடுகிறது. உளவுத்துறை வைத்திருக்கும் பதிவுகள் தலைகீழாக மாறிவிடுகின்றன.

இரிசிலின் 123 கப்பல்களில், 46 கப்பல்கள் மட்டுமே இரிசிலுக்குச் சொந்தமாக உள்ளதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மிகுதிக் கப்பல்கள் சர்வதேசக் கடல்களில் வேறு ஏதேதோ பெயர்களில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. அதைக் கண்டுபிடிப்பதிலேயே அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகளின் உளவுத்துறைகளின் நேரம் ஓடிவிடுகிறது.

கப்பல்களின் பெயர்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள் பற்றிய விபரங்களை ஆய்வு செய்யும் அமைப்பின் பெயர், ஐ.எச்.எஸ். பேர்பிளே. இந்த அமைப்பு ஒன்றும் தொழிலுக்குப் புதிய அமைப்பல்ல. முன்பு லாயிட்ஸ் ரிஜிஸ்டர் பேர்பிளே என்று அழைக்கப்பட்டு வந்த அமைப்புத்தான், தற்போது இந்தப் பெயரில் இயங்குகின்றது. பிரிட்டனைச் சேர்ந்த அமைப்பு இது.

இந்த நிறுவனத்தின் பதிவுகளை ஆராய்ந்தபோது கிடைத்த தரவுகளின்படி, இரிசில் நிறுவனத்துக்குச் சொந்தமானதாக இருந்த கப்பல்களில் 4 கப்பல்கள் வெவ்வேறு சம்பவங்களில் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. 73 கப்பல்கள் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாத நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்ற பதிவுடன் கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்த நிறுவனங்கள் ஈரானில் இருந்து வெகுதூரத்தில் உள்ள மால்டா, ஹொங்கொங், சைப்ரஸ், ஜேர்மனி, உட்படப் பல நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்.

ஆனால், அவற்றின் தாய் நிறுவனங்கள் என்ற பெயரில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட மூன்று ஈரானிய நிறுவனங்களால் அவை, நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஈரானிய நிறுவனங்களும் ஐ.எச்.எஸ். பேர்பிளே வைத்துள்ள ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இல்லை. அதற்குப் பதிலாக ஈரானியத் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இரிசில் நிறுவனத் தலைமைக் கட்டடத்திலேயே செயற்பட்டு வருகின்றன!

ரகசியங்கள் அனைத்தும் வெளியே தெரிந்துவிட்டதைப் புரிந்துகொண்ட ஈரான், அதற்கும் ஒரு மாற்று வழி கண்டுபிடித்தது.

திடீரென ஒருநாள் எங்கிருந்து வந்தது என்றே தெரியாமல் காற்றிலிருந்து தோன்றிய ஹபீஸ் தார்யா என்ற நிறுவனம், "இரிசிலின் கன்டெய்னர் கப்பல் தொழிலை இனி நாங்களே மேற்கொள்ளப் போகிறோம்" என்று அறிவித்தது.


ஈரானியக் கப்பல்துறை அதிகாரி ஒருவர், "ஹபீஸ் தார்யா, கப்பல் தொழிலுக்குப் புதிதாக வந்துள்ள சுதந்திரமான ஒரு தனியார் நிறுவனம். அதற்கும், ஈரானிய அரசுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது" என்று அறிவித்தார்.

ஒரே இரவில் ஹபீஸ் தார்யா நிறுவனம், 'உலகின் 23வது பெரிய கன்டெய்னர் கப்பல் நிறுவனம்" என்ற பெயரை, இரிசிலிடம் இருந்து எடுத்துக்கொண்டது. உலகின் முன்னணி 100 கன்டெய்னர் கப்பல் நிறுவனங்களின் பட்டியலில் இருந்து இரிசில் மாயமானது.

ஹபீஸ் தார்யா என்ற நிறுவனத்துடன், சொரோஷ் என்ற நிறுவனமும் கறுப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள 46 கப்பல்களை இயக்குகிறது. இந்தக் கப்பல்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன என ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

புதிய உரிமையாளர்கள் இரிசிலின் ஆதரவுடன் வந்தவர்கள் என்று சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். உதாரணமாக, ஏஸ்னா மற்றும் லான்ஸ்லன் கப்பல்களின் உரிமையாளர்களாக இரு சைப்ரஸ் நாட்டைச் சேர்ந்த நபர்களின் பெயர்கள்

தென்னாபிரிக்கத் துறைமுகமான டேர்பனின் கன்டெயினர் டேர்மினல்.
இப்படியான பெரிய டேர்மினல்களில் கடத்துவது மிகச் சுலபம்!



சட்டரீதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. யார் இந்த இருவர்?

இருவரில் ஒருவரான முகமது ஹாதி பாஜான்ட் லண்டனின் இரிசில் நிறுவனத்தின் பிராந்திய அலுவலகத்தில் வேலை செய்து வருகிறார்.

மற்றொருவரான அகமது சர்கான்டி யாரென்றால், சமீபத்தில் பிளாடர்ரன்னர் 51 தாக்குதல் அதிவேகப் படகைக் கடத்திய இரிசில் அதிகாரி என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ள அதே நபர்தான். மொத்தத்தில் கப்பல்களின் நிஜ உரிமையாளர் இரிசில்தான்!

இரிசிலின் கறுப்புப் பட்டியல் கப்பல்களைக் கண்டுபிடிப்பது எவ்வளவு கடினமோ, அதைவிடக் கடினமானது கறுப்புப் பட்டியலில் இல்லாத அவர்களது கப்பல்களைக் கண்டுபிடிப்பது.

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# உங்கள் காலடியில் கட்டுக் கட்டாகப் பணம்!

சர்வதேச வர்த்தகம்

ஆசியாவில் வெற்றிகரமாக வியாபாரம் செய்யும் சில விமான நிறுவனங்கள், சமீப நாட்களாக நகத்தைக் கடித்தபடி 'திக் திக்' பார்வை பார்க்கத் தொடங்கியிருக்கின்றன. ஆசிய மார்க்கெட்டில் தாங்கள் அமைத்து வைத்துள்ள வியாபார சாம்ராட்சியம் எங்கே தள்ளாடத் தொடங்குகின்றதோ என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

விஷயத்துக்குள் செல்லுமுன், உங்களிடம் ஒரு கேள்வி. எந்த விமான நிறுவனத்தில் வியாபாரம் கொடிகட்டிப் பறக்கிறது என்று தெரிந்து கொள்ள, நீங்கள் என்ன அளவுகோல் வைத்திருக்கிறீர்கள்?

ஒரு விமானத்தில் எத்தனை பயணிகளை ஏற்றிச் செல்கிறார்கள், என்ன விலைக்கு டிக்கட் விற்கிறார்கள் என்பதை வைத்து விமான நிறுவனத்தின் வியாபாரம் எப்படி நடக்கிறது என்று சொல்லிவிடலாம் என்று நீங்கள் நினைத்தால், விமான நிறுவன வியாபாரத்தின் நிஜ வர்த்தகம் தெரியாதவர் என்று அர்த்தம்.

பயணிகளை ஏற்றி இறக்குவதால் கிடைக்கும் வருமானத்தைவிட, ஒரு விமான நிறுவனத்துக்கு வருமானம் கிடைக்க வேறு வழிகளும் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் ஆச்சரியகரமாக இந்த "வேறு வழிகளில்" வரும் வருமானம், பிரதான வியாபாரத்தைவிட அதிகமாக இருக்கும்.

நீங்கள் ஆசியாவிலிருந்து குறிப்பிட்ட ஒரு விமானத்தில் பயணம் செய்யும்போது, அந்த விமானத்தில் பாதியளவு சீட்களில்கூட பயணிகள் இல்லாதிருப்பதைக் கண்டிருக்கலாம். அதன் அர்த்தம், குறிப்பிட்ட அந்த ரூட்டில், விமான நிறுவனத்துக்கு நஷ்டம் என்பதல்ல.

சிலவேளைகளில், அனைத்து சீட்களிலும் பயணிகளை நிரப்பிச் செல்லும் விமானத்தைவிட, இந்த விமானம் அதிக லாபம் சம்பாதிக்கலாம்.

விமான நிறுவனங்களுக்கு கூரையைப் பிய்த்துக் கொண்டு காசு கொட்டும் கார்கோ வியாபாரத்துடன் சம்மந்தப்பட்ட விவகாரம் இது. விமானத்தின் உள்ளே சீட்களில் பயணிக்கும் பயணிகள் மூலம் கிடைக்கும் லாபத்தைவிட, விமானத்தின் கீழ்ப் பகுதியில் ஏற்றப்பட்டிருக்கும் சரக்கு அல்லது கார்கோ அதிக லாபத்தைப் பெற்றுக் கொடுக்கும் ரூட்களும் உள்ளன.

அப்படியொரு ரூட்டில் காசு மழையில் குளித்துக் கொண்டிருந்த சில விமான நிறுவனங்கள்தான், தற்போது நகத்தைக் கடித்தபடி திக் திக் பார்வை பார்க்கத் தொடங்கியிருக்கின்றன. அதைத்தான் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டோம்.

எந்த ரூட் அது? சீனாவிலிருந்து வெளியே செல்லும் விமான ரூட்கள்!

ஆசியாவில் பிரதான வர்த்தகத்தை வைத்துள்ள சில விமான நிறுவனங்களின் கார்கோ அலுவலகங்களில், கடந்த மாதம் திடீர் கணக்குத் தணிக்கைகள் நடத்தப்பட்டன என்பது பலருக்கு தொரியாத விஷயம்.

ஜப்பான் ஏயார்லைன்ஸ், கத்தே பசிபிக் ஏயார்வேய்ஸ் (ஹொங்கொங்) சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ், நிப்போன் கார்கோ எக்ஸ்பிரஸ் (ஜப்பான்) கொரியன் ஏயார்லைன்ஸ், ஏசியானா ஏயார்வேய்ஸ் (தென்கொரியா) ஆகிய விமான நிறுவனங்களின் தலைமை கார்கோ அலுவலகங்களில் ஒரே நேரத்தில் கணக்குத் தணிக்கைகள் நடைபெற்றிருப்பது உறுதியாகியிருக்கிறது.

ஒரு விமான நிறுவனத்தில், குறிப்பிட்ட ஒரு நேரத்தில், கணக்குத் தணிக்கை நடைபெற்றால், அது பெரிய விஷயமே இல்லை. வழமையான நடைமுறைதான். ஆனால் ஒரே நேரத்தில் இவ்வளவு விமான நிறுவனங்களிலும் கணக்குத் தணிக்கை நடைபெற்றால், அதில் ஏதோ விவகாரம் இருக்கின்றது என்று அர்த்தம்.

சுமார் 5 வருடங்களுக்குமுன், மேலே குறிப்பிட்ட பட்டியலிலுள்ள எல்லா விமான நிறுவனங்களின் கார்கோ அலுவலகங்களிலும் ஒரே நேரத்தில் ஒரு சோதனை நடைபெற்றிருந்தது. அதை நடாத்தியது விமான நிறுவனங்களின் சர்வதேச அமைப்பான IATA (International Air Transport Association) என்று அப்போது கூறப்பட்டது.

ஆனால் என்ன காரணத்தாலோ, அந்தச் சோதனை வெளிப்படையான பாதிப்பு எதையும் இந்த விமான நிறுவனங்களுக்குக் கொண்டுவரவில்லை.

இப்போது அதே விமான நிறுவனங்கள் மீண்டும் குறிவைக்கப்பட்டுள்ளன. இந்த விமான நிறுவனங்கள் அனைத்துக்கும் உள்ள ஒரு பொதுவான விஷயம் என்னவென்றால், இவர்கள் அனைவருமே தொடர்ந்து காட்டிக் கொண்டிருக்கும் லாபக் கணக்கில் பெரும்பகுதியை கொண்டு வருவது, "சீனா ஒப்பரேஷனில்" இருந்து வரும் பணம்.

அதுவும் கார்கோ ஏற்றுமதி, இறக்குமதியிலிருந்து வரும் பணம்.

சிவில் ஏவியேஷன் அட்மினிஸ்ட்ரேஷன் ஒஃப் சைனா (CAAC) கடந்த மாதம் வெளியிட்ட புள்ளிவிபரத்தின்படி கடந்த 5 வருடங்களாக சீனாவிலிருந்து நடைபெறும் (விமானம் மூலமான) ஏற்றுமதி இறக்குமதிகள் வருடத்துக்கு 18.4 சதவீதம் அதிகரித்திருக்கிறது. அடுத்த 3 வருட காலப்பகுதியில் 125 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வளர்ச்சி, சீனாவின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைவிட மிக அதிகமானது. அதாவது, பொருளாதாரத்தையும் ஜி.டி.பி.யையும் மேலே இழுத்துச் செல்வதில் அவர்களது விமான மூலமான ஏற்றுமதி இறக்குமதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சர்வதேச அளவில் புகழ்பெற்ற வர்த்தக ஆலோசனை நிறுவனமான புரொஸ்ட் அன்ட் சுலைவன் நிறுவனம் கணித்திருப்பதன்படி, கடந்த வருடம் 4.6

அடுத்த பக்கம் வாருங்கள் ➡




லோட் பண்ணப்படுவது, 100 சதவீத கார்கோ விமானம் (பயணிகள் இல்லை).

பில்லியன் டொலர் மதிப்புள்ள ஏற்றுமதி இறக்குமதிகள் சைனாவின் விமான நிலையங்களினூடாக நடைபெற்றிருக்கின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட விமான நிலையங்களின் வருடாந்த லாபக் கணக்குகளில் கணிசமான சதவீதம் கார்கோ வியாபாரத்தில் வருவதாகப் பதிவாகியுள்ளது. அதிலும் பெரும்பகுதி வருவது, சீன ஏற்றுமதிகளில்தான். இந்த விமான நிறுவனங்கள் சீனப் பொருட்களைத் தமது நாடுகளுக்கு மாத்திரம் எடுத்துச் செல்வதில்லை, தமது நாட்டின் ஊடாக வட அமெரிக்க, மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் எடுத்துச் செல்கின்றன.

இதிலுள்ள அடுத்த வியாபார முரண்பாடு என்னவென்றால், சீனப் பொருட்கள் சீனாவிலிருந்து ஐரோப்பாவுக்குச் செல்லும்போது, அந்த வர்த்தகத்தின் பெரும்பகுதி சீன விமான நிறுவனங்களுக்கோ, ஐரோப்பிய விமான நிறுவனங்களுக்கோ கிடைப்பதில்லை. மாறாக, மேலே குறிப்பிடப்பட்ட ஆசிய விமான நிறுவனங்களே அடித்துக்கொண்டு போகின்றன.

அதாவது பொருள் ஏற்றுமதியாகும் நாட்டின் விமான நிறுவனங்களுக்கும் வியாபாரம் கிடைப்பதில்லை, இறக்குமதியாகும் நாடுகளின் நிறுவனங்களுக்கும் கிடைப்பதில்லை! இடையில் சம்மந்தப்படாத நாட்டு விமான நிறுவனங்கள் பணத்தை வாரிக் குவிக்கின்றன.

இதெல்லாம் சரி. இப்படியான வர்த்தகம் சீனாவில் இருந்தால், சீன விமான நிறுவனங்கள்தானே பணத்தை வாரிக் கொண்டு போகவேண்டும்? அதை விடுத்து, மற்றைய விமான நிறுவனங்கள் எப்படி லாபத்தை அடித்துக் கொண்டு போகின்றன?

அங்கேதான் இருக்கிறது பிரச்சனையே.

சீனாவிலும் பெரிய விமான நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றில் மிகப் பெரியது எயார் சைனா. மற்றயவை சைனா ஈஸ்டேர்ன் ஏயார்லைன்ஸ், சைனா சதேர்ன் ஏயார்லைன்ஸ் என்று சைனாவின் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் உரிய விமான நிறுவனங்கள் இருக்கின்றன.

இவை எல்லாமே சீன அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்கள்தான். ஆனால், வெளிநாட்டு விமான நிறுவனங்கள் இந்த சீன விமான நிறுவனங்களை அண்டர்கட் பண்ணித்தான் பணத்தைக் குவிக்கின்றன.

இதை எப்படிச் செய்கிறார்கள் என்பதை கொஞ்சம் விலாவாரியாகச் சொன்னால்தான் புரியும். அதற்கு விமான கார்கோ வியாபாரத்தின் சில அடிப்படைகளை முதலில் சொல்லவேண்டும்.

நீங்கள் ஒரு விமானத்தில் ஏறி ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு போகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். விமானத்தில் உங்களது சீட்டில் இருந்து எழுந்து சுற்றும் முற்றும் பார்த் தால், அது ஒரு போயிங் 767 ரக விமானமாக இருந்தால், 220 இலிருந்து 232 பயணிகள்தான் அதிக பட்சம் இருப்பார்கள்.

232 டிக்கட்களில் ஒரு டிக்கட்டுக்கு 300 டொலர் லாபம் கிடைத்தாலும், சுமார் 70 ஆயிரம் டொலர் லாபம் கிடைக்குமே என்று மனதுக்குள் ஒரு கணக்குப் போட்டிருப்பீர்கள்.

அது சரிதான். (இப்போதெல்லாம் ஒரு சீட்டுக்கு 300 டொலர் லாபம் கிடைத்தால், பெரிய விஷயம்தான்)

ஆனால் லாபக் கணக்குப் போட்டுப் பார்த்த உங்களுக்கு, உங்கள் சீட்டுக்கு கீழே அதைவிட அதிக பணம் இருப்பது சில வேளை தெரிந்திருக்காது.


பயணிகள் விமானத்தில் கீழ்ப் பகுதியில் கார்கோ லோட் பண்ணப்படுகிறது

சீற்றுக்கு கீழே என்றால், குனிந்து பார்க்காதீர்கள். நாங்கள் சொல்வது விமானத்தின் கீழ்ப்பகுதியில் இருக்கும் கார்கோ ஏற்றுமிடம். போயிங் 767 என்றால் கீழே 4 எல்.டி.-9 ரக கண்டெய்னர்களும் 8 எல்.டி.-8 ரக கண்டெய்னர்களும் அதிகபட்சம் லோட் பண்ணப்பட்டிருக்கலாம்.

எல்.டி.-9 கண்டெய்னர் ஒன்றில் 4500 கிலோ வரையும், எல்.டி.-8களில் ஒவ்வொன்றிலும் 2200 கிலோ வரையிலும் கார்கோ அதிகபட்சம் ஏற்றப்படலாம். இவற்றில் பொதுவாக 2 எல்.டி.8 கண்டெய்னர்களில், அதே விமானத்தில் பயணிக்கும் பயணிகளின் சூட்கேஸ்கள் ஏற்றப்படுவது வழக்கம். மிகுதி முழுவதும் கார்கோ. அதிக பட்ச அப்லிஃப்ட் 30,000 கிலோ!

மேலேயுள்ள பயணிகளின் டிக்கட்மூலம் கிடைக்கும் பணத்தை விட, கிழேயுள்ள கார்கோ மூலம் கிடைக்கும் பணம் அதிகம் என்பதுதான் இதிலுள்ள விசேஷம்.

இது புரிந்துவிட்டால், அடுத்தது கார்கோ கட்டணங்கள் பற்றி சொல்கிறோம்.

பயணிகளின் விமானக் கட்டணங்கள் போலவே, நிர்ணயிக்கப்பட்ட கார்கோ கட்டணங்களை IATA வைத்திருக்கின்றது. இந்தக் கட்டணங்கள்தான் விமான நிறுவனங்களால் வசூலிக்கப்பட வேண்டும் என்பதுதான் சட்டம்.

ஆனால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 2 சதவிகித கார்கோகூட போகாது.

மிகுதியெல்லாம், கிராமச் சந்தையில் கையில் துணியைப் போட்டு மாட்டு வியாபாரத்தில் பேரம் பேசுவதுபோல, ரகசியப் பேரத்தில் உருவாகும் கண்ட்ராக்ட் ரேட்கள்.

அனுப்பப்படும் பொருளின் அளவையும் முக்கியத்துவத்தையும் பொறுத்து IATA வால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட 20 இலிருந்து 60 சதவிகிதம் குறைவது ஒன்றும் பெரிய ரகசியமல்ல. விமான கார்கோ வியாபாரத்துடன் சம்மந்தப்பட்ட எல்லோருக்குமே இது தெரியும்.

இதுவும் புரிந்துவிட்டால், இனி சீனாவின் கார்கோ விவகாரத்துக்கு வரலாம்.

சீன அரசு உத்தியோகபூர்வமாக வைத்திருக்கும் பணமதிப்பு, அன்னிய செலாவணி மாற்றீடு விகிதம் எல்லாமே செயற்கையாக நிர்ணயிக்கப் பட்டவை. இவர்களது பொருளாதார வளர்ச்சிக்கு இந்த செயற்கையான குறைந்த பணமதிப்பீடும் ஒரு வகையில் உதவுகிறது.

சும்மாவே கார்கோ கட்டணங்களில் ஒழிவுமறைவு. அதற்கும் மேலாக சீனாவின் நாணய மதிப்பீட்டிலும் தில்லுமுல்லு. இந்தச் சூழ்நிலையில் எந்த விமான நிறுவனம் எவ்வளவு கட்டணம் வசூலிக்கிறது, யார் யாரை அண்டர்கட் பண்ணுகிறார்கள் என்பதையெல்லாம் கண்டு பிடிப்பது தலை சுற்றும் விஷயம் என்பதை இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள், இல்லையா?

இவற்றையெல்லாம் துருவுவதற்கே, ரெகுலேட்டரி கமிஷன்கள் விமான நிறுவனங்களின் அலுவலகங்களில் கணக்குத் தணிக்கைகள் நடத்தியதாகவே விமான வர்த்தக வட்டாரங்களில் பேச்சு.

முன்பு இதே விமான நிறுவனங்களை குறிவைத்து நடாத்தப்பட்ட ரெய்ட்கள், பின்னர் அமெரிக்க, ஐரோப்பிய விமான நிறுவனங்களுக்கும் விஸ்தீகரிக்கப்பட்டன. ஒருகட்டத்தில் ரெய்ட் செய்யப்பட்ட விமான நிறுவனங்கள் அதை ஒப்புக் கொண்டுமிருந்தன. இந்தச் சர்வதேச வர்த்தகத்தில் தெரிய வேண்டிய விஷயங்கள் அதிகமாகவே உள்ளதால், அடுத்த இதழில் கட்டுரையை முடிக்கலாம்.

# தலைமன்னாருக்குக் கப்பலேறிப் போயாச்சு!

கடந்த அத்தியாயத்தில், "குதிரை குதிரை" என்று சொன்ன கல்லாப் பெட்டி சிங்காரத்தைப் பார்த்து முறைந்த மாணவி சுகந்தியை ஒரு வழியாக தாஜா பண்ணி பஸ்ஸூக்குள் கொண்டு போய் ஏற்றிவிட, பஸ் மீண்டும் கிளம்பியது. இந்த பஸ்ஸில் மதுரை போய், அங்கிருந்து ட்ரெயின் எடுத்து ராமேஸ்வரம் போய், கப்பலேறித் தலை மன்னார் போகும் பயணத்தின் ஆரம்பப் பயணம்தான் இந்த பஸ் பயணம்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பஸ் மதுரைக்குள் நுழைந்தது. மதுரை ரெயில்வே ஸ்டேஷனில் பஸ் நிற்குமா என்று நடத்துனரிடம் கேட்டதில், நிற்காது என்று சொல்லிவிட்டார். திருவள்ளுவர் பஸ் ஸ்டான்டில் இறங்கினால், மதுரை ஸ்டேஷன் அருகில்தானாம். மூன்று நிமிடத்தில் நடந்து போய்விடலாம் என்றார் நடத்துனர்.

இருள் வருவதற்கு முன்னரே திருவள்ளுவர் பஸ்நிலையம் வந்துவிட்டது. ராமேஸ்வரம் செல்லும் ட்ரெயின் கிளம்புவது கிட்டத்தட்ட நள்ளிரவு நேரத்தில். எக்கச்சக்க நேரம் கைவசம் இருந்தது. திருவள்ளுவர் பஸ் நிலையத்துக்கு வெளியே வந்து பார்த்தால் மதுரை முற்றிலும் வித்தியாசமான நகரமாகத் தெரிந்தது. ஆட்களின் நடமாட்டமும் அதிகம். சத்தமும் அதிகம்.

முதலில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு போகலாம். டிக்கட் எல்லாம் எடுத்த பின்னர் மதுரையை ஒரு ரவுன்ட் அடிக்கலாம். அங்கிருந்த ஒரு ஆளிடம் விசாரித்தேன், "ஏனுங்க, மதுரை ரெயில்வே ஸ்டேஷனுக்கு எந்தப் பக்கம் போகணுமுங்க"



"ஜங்ஷனுங்களா?"

"இல்லீங்க, ஸ்டேஷன்"

"அதுதாங்க ஜங்ஷன்"

"ஜங்ஷன்தான் ஸ்டேஷனா?

"ஸ்டேஷன்தான் ஜங்ஷன். இப்படியே நேரே போங்க. ஒரு வளைவு வருமுங்க. இங்கிலீஷ் படம் ஓடுற தியேட்டர் வருமுங்க. அதைத் தாண்டினால் இடது பக்கம் ஜங்ஷன் வருமுங்க"

அவர் காட்டிய பாதையில் நடக்கத் தொடங்கியபோது உள்ளே ஒரு சந்தேகம் இருந்தது. இந்த ஆள் சரியாகத்தான் இடம் காட்டியிருக்கிறாரா? நாங்கள் ஸ்டேஷனுக்கு போகவேணும் என்றால் இவர் ஜங்ஷனுக்கு போக வழி சொல்கிறார். கேட்டால் ஜங்ஷன்தான் ஸ்டேஷன் என்கிறார். இவர் காட்டிய ரூட்டில் போனால் கோப்பாய் ஜங்ஷன் போன்ற ஒரு சந்தியில் போய்ச் சேருவோம் போலிருக்கு. அந்தச் சந்தியிலிருந்து ஸ்டேஷனுக்கு எப்படி போவது?

எதற்கும் போய்ப் பார்க்கலாம். கைவசம் நிறைய நேரம் இருக்கிறதே. அண்ணன் காட்டிய பாதையில் ஐந்து பேரும் நடந்து போனால் அவர் கூறியது போல ஒரு வளைவு வந்தது. தாண்டிச் சென்றால் இடது பக்கம் இங்கிலீஷ் படம் ஓடும் ஒரு தியேட்டரும் வந்தது. சரிதான். ஆள் ஒழுங்காகத்தான் பாதை சொல்லியிருக்கிறார்.

தியேட்டரைத் தாண்டினால் இடதுபுறம் ஜங்ஷன் வரவேண்டும். தாண்டிப் பார்த்தால் ஜங்ஷன் வரவில்லை... சாட்சாத் ரெயில்வே ஸ்டேஷனே வந்து விட்டது.

அப்ப, ஜங்ஷன் எங்கே? அடுத்த நிமிடமே அதற்குப் பதில் தெரிந்து விட்டது. ரெயில்வே ஸ்டேஷனில் மேல் பெரிதாக மதுரை ஜங்ஷன் என்று எழுதியிருந்தது. ஓகோ இவர்கள் ரெயில்வே ஜங்ஷன் என்பதைத்தான் ஜங்ஷன் என்று சொல்கிறார்கள். அப்போ, நான்கு ரோட் சந்திக்கும் சந்தியை எப்படி அழைப்பார்கள்?

வீதியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த போதே, ஒரு குரல் கேட்டது. "சார் டிக்கட் வேணுங்களா"

"என்ன டிக்கட்" என்று கேட்டதற்கு, "ஜங்ஷனிலே வெச்சு சினிமா டிக்கட் பத்தியா கேட்பாங்க. ட்ரெயின் டிக்கட் தானுங்க"

"அதுக்குத்தானுங்களே ஸ்டேஷனுக்கு உள்ளே டிக்கட் கௌன்டர் இருக்கே. நீங்க என்ன நடமாடும் டிக்கட் கௌன்டருங்களா"

"என்னங்க சார், தமாஷ் பண்ணீட்டு. கௌன்டரிலே டிக்கட் குடுக்க மாட்டாங்க"

"ரெயில்வே ஸ்டேஷன் டிக்கட் கௌன்டரிலே டிக்கட் கொடுக்காம, பின்னே அங்கே என்னங்க தயிர்சாதமா கொடுக்கிறாங்க"

"அதெல்லாம் பத்து நாளைக்கு முன்னாடியே முன்பதிவு முடிஞ்சு போயிருமுங்க"

"இப்ப போனா டிக்கட் கிடைக்காதுங்களா?"

"கிடைக்குமுங்க. ஆனா பத்து நாளைக்கு அப்புறம் போற டிக்கட்தான் கிடைக்குமுங்க" ஸ்டேஷனுக்கு வெளியே குறுக்கிட்ட நபர் ஒருவருடன் நான் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த மூன்று வனிதையர்களும் திரு திரு.

"ஐயோ. பத்து நாளைக்கு டிக்கட் கிடைக்காதா. அப்ப கோயம்புத்தூரிலேயே இருந்திருக்கலாமே" என்றார் சுகந்தி பதட்டத்துடன்.

"இந்த ஆள் சும்மா. ட்ரெயினிலே போற எல்லோரும் பத்து நாளைக்கு முன்பே பிளான் பண்ணியா போவாங்க? திடீரெனப் போக முடிவு செய்ய மாட்டார்களா?"

"இருந்தாலும் இவர் சொல்லுறாரே. டிக்கட் கிடைக்காது போலத்தான் இருக்கு" என்றார் மாலதி.

"பாப்பா சொல்லுறது சரிதானுங்க" என்றார் நடமாடும் ரெயில்வே டிக்கட் வியாபாரி.

"பாப்பாவா? எந்தப் பாப்பா"

"நம்ம பாப்பாதானுங்க. அவுங்களே சொல்லீட்டாங்களே டிக்கட் கிடைக்காது என்று"


"அடப்பாவி! இது உங்களுக்கே நியாயமாப்படுதா? இவுங்க பாப்பாவா"

"நம்ம ஊர்ல காலேஜ் பொண்ணுங்களை பாப்பா என்றுதானுங்க சொல்லுறது வழக்கம் ஹி.. ஹி.."

"அப்ப கின்டர்கார்டன்ல படிக்கிற பொண்ணுங்களை எப்படி கூப்பிடுவீங்க? இவுங்க பாப்பா என்றால் அவுங்களை 'பா' என்றா சொல்லுவீங்க?"

ஒரு வழியாக டிக்கட் வியாபாரியிடம் இருந்து தப்பி ஸ்டேஷனுக்குள் நுழைந்தோம். எதிரே பெரிய போர்ட் ஒன்று இருந்தது. எத்தனை மணிக்கு என்ன ட்ரெயின் புறப்படும் என்று எழுதியிருந்தது.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



இதுதானுங்க மதுரை ஜங்ஷன்!



போட்ட துண்டு இருக்கிறதா என்று ட்ரெயினுக்குள் எட்டிப் பார்க்கும், துண்டு போட்ட போட்டர்!

# ரிஷியின் டயரி!

அதற்கு அருகே மற்றுமோர் போர்ட். பிக்பாக்கட், ஜோப்டி திருடர்கள், முடிச்சு மாறிகள் ஜாக்கிரதை' என்றிருந்தது. இடதுபுறம் டிக்கட் கௌன்டர் தெரிந்தது.

"நீங்கள் எல்லாரும் இங்கேயே நில்லுங்கோ. சூட்கேஸ் எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளுங்கோ. நான் போய் டிக்கட் இருக்கா என்று கேட்டுவிட்டு வர்ரேன். திருட்டுப் பயம் அதிகமான இடம் போல இருக்கு. ஸ்டேஷனிலே பெரிய எழுத்தில் அறிவிப்பே இருக்கு" சொல்லிவிட்டு கௌன்டரை நோக்கிக் கிளம்பினேன்.

"நானும் டிக்கட் கௌன்டருக்கு வரட்டா" என்றார் மாலா. "வாங்க பாப்பா"

டிக்கட் கௌன்டரில் நாலைந்து பேர்தான் நின்றார்கள். அந்த லைனில் நின்று கௌன்டரை அணுகினோம்.

"ராமேஸ்வரத்துக்கு போகணுமுங்க. டிக்கட் முன்பதிவு பண்ணலாமுங்களா"

"பண்ணலாமுங்களே. அதுக்கு நீங்க முன்பதிவு கௌன்டருக்கு போகணுமுங்க"

"அது எங்கே இருக்கு"

"அடுத்த பில்டிங்குங்க. காலைல 9 மணிக்கு திறந்துரும்"

"ஆனா ட்ரெயின் இன்னிக்கு நைட் கிளம்புதே சார்"

"அதுக்கு நீங்க நேரத்துக்கே வந்திருக்கணும். 24 மணி நேரத்துக்கு முன்னாடிதான் முன்பதிவு" என்றார் அவர் மிக ரிலாக்ஸாக

"அதுவும் அப்படீங்களா? நீங்க என்ன சார் விக்கிறீங்க இந்தக் கௌன்டரிலே?" என்று கேட்டதற்கு, "இதுவும் டிக்கட்தான். முன்பதிவு இல்லாத டிக்கட்"

"இதை வாங்கி என்னங்க செய்யலாம்" என்ற கேள்விக்கு "முன்பதிவு பண்ணாத கம்பார்ட்மென்டிலே போகலாம். அல்லது ட்ரெயின் வந்ததுக்கப்புறம் முன்பதிவு செய்ய முடியுமான்னு பார்க்கலாம்"

இலங்கையில் இருந்து முதல் தடவை இந்தியா சென்ற எனக்கு அந்த சிஸ்டமே புரியவில்லை.

24 மணி நேரத்துக்கு முன்னால்தான் முன்பதிவு என்கிறார். ஆனால் அவரிடம் டிக்கட் வாங்கினால் ட்ரெயின் வந்த பிறகும் முன்பதிவு செய்யலாம் என்கிறார். வெளியே லுங்கி அணிந்த ஆசாமி ஒருவர் டிக்கட் வேணுமா என்று கேட்கிறார். அவர் வைத்திருப்பதும் இவர் விற்பதும் ஒரே டிக்கட்டா? எதுவுமே புரியவில்லை.

ராமேஸ்வரத்துக்கு 5 டிக்கட் கொடுங்க சார்" என்று வாங்கிக் கொண்டோம். ட்ரெயின் வரட்டும், பார்க்கலாம்.

மதுரை ரெயில்வே ஸ்டேஷன் ஒரு தனி உலகம். கோவில் பட்டியில் இருந்து கட்டுசாத மூட்டை பலாப்பழம் சகிதம்வந்து இறங்கும் கிராமவாசி முதல், கொப்பன்ஹெகனில் (டென்மார்க்) இருந்து வரும் டூரிஸ்ட்வரை எல்லோரும் எல்லாத் திசையிலும் தென்பட்டார்கள்.

ரெயில்வே பிளாட்போர்மில் குளிப்பவர்களையும் பார்க்க முடிந்தது. அங்கிருந்த பைப்பில் துணி துவைப்பவர்களையும் பார்க்க முடிந்தது. சிலர் பிளாட்போர்மில் தினத்தந்தி பேப்பரை விரித்துவிட்டு ஆனந்தமாக தூங்கிக் கொண்டிருந்தார்கள். சுவரில் இருந்த போர்ட்டில் ராமேஸ்வரம் போகும் ட்ரெயின் ஏழாவது பிளாட்போமிலிருந்து புறப்படும் என்று போடப்பட்டிருந்தது. அதற்கு நிறைய நேரம் இருந்தது. போர்ட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது மற்றொருவர் வந்து பேச்சுக் கொடுத்தார். "எந்த வண்டி சார்" என்று கேட்டார்.

இந்த ஆள் யார் புதிதாக வருகிறார்? "என்னங்க கேட்டீங்க?"

"நமக்கு எந்த வண்டீங்க?"

"உமக்கு எந்த வண்டி என்று எனக்கு எப்படித் தெரியுமய்யா?" இவர் யார்? திடீரெனத் தோன்றி அவருக்கு எந்த வண்டி என்று என்னை ஏன் கேட்கிறார்? வண்டி என்று எதைச் சொல்கிறார்? மாடா? குதிரையா?

அவருடன் பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில் அவர் வண்டி என்று சொல்வது ட்ரெயினை என்று புரிந்தது. மதுரைப் பக்கத்தில் "நமக்கு எந்த வண்டி" என்று அவர் கேட்டால் நான் எந்த ட்ரெயினில் போகப் போகிறேன் என்று அர்த்தமாம். சிம்பிளாகச் சொன்னால், 'நமக்கு' என்றால், 'உங்களுக்கு'!

"ராமேஸ்வரம் ட்ரெ... வண்டீங்க"

"ரிசர்வேஷன் இருக்கா" என்று அக்கறையாகக் கேட்டதால் சொன்னேன், "அதுக்கு 24 மணி நேரத்துக்கு முன்னாடி வந்திருக்கணும்னு சொல்றாங்களே"

வந்த நபர் குரலைத் தாழ்த்திக் கேட்டார், "நமக்கு முன்பதிவு வேணுங்களா"

"வேணும். ஆனா முன்பதிவு கௌன்டர் நாளைக்கு காலைல 9 மணிக்கல்லவா திறக்கும்"

"அது ரயில்வே டிப்பார்ட்மென்ட் கம்பியூட்டர் ரிசர்வேஷனுங்க"

"வேணுமா என்று நீங்க கேட்டது என்ன ரிசர்வேஷன்?"

"துண்டு ரிசர்வேஷன்"


இதென்ன புதிதாக? இவர்களுடைய லோக்கல் பரிபாஷை புரிவதற்குள் ட்ரெயின் வந்துவிடும் போலிருக்கே? அதற்கும் இந்த ஆளையே விளக்கம் கேட்கலாம்... அவருடைய பாணியிலேயே.

"நமக்கு மதுரை ரயில்வே ஸ்டேஷன் துண்டு ரிசர்வேஷன் அலுவலகத்திலேதான் வேலையா?"

"கிண்டல் பண்ணிறீங்களா"

"சத்தியமா நீங்க சொல்லுற துண்டு முன்பதிவு என்றாலே என்ன என்று புரியலீங்க. இதுக்கு 24 மணி நேரம் தேவையில்லையா? துண்டு துண்டா ரிசர்வ் பண்ணுறீங்களா அல்லது துண்டு சீட்டிலே எழுதிக் குடுக்கிறீங்களா?"

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



'தூங்கா நகரம்' என்று அழைக்கப்படும் மதுரை இது




"நம்ம போட்டர் இருக்கார் இல்லீங்களா?"

"நம்ம போட்டர் என்றால் உங்களுக்குத் தெரிஞ்ச போட்டர்.... ஓகே. மேலே சொல்லுங்க இப்பதான் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியுது"

"அவரிடம் தலைக்கு பத்து ரூபா பணம் கொடுத்தா துண்டு போட்டுக் கொடுத்துருவாருங்க"

"தலையிலேயா"

"இல்லே. சீட்டிலே"

"தலைக்கு என்று சொன்னீங்க"

"தலைக்கு 10 ரூபா"

"கொடுத்தா... சீட்டிலே துண்டு?"

"அதே தானுங்க"


நம்ம வண்டி!

இந்த உரையாடல் நீங்கள் தமிழகத்துடன் பரிச்சயமுடைய ஆளாக இருந்தால் புரிந்திருக்கும். ஆனால் தமிழகத்துக்கு புதிதான எனக்கு அன்று மதுரை ஜங்ஷனில் புரியவே இல்லை. தலை என்கிறார் துண்டு என்கிறார் 10 ரூபா என்கிறார். 'நம்ம போட்டர்' என்று உரிமையும் கொண்டாடுகிறார்.

பிற்பாடு அவரிடம் விசாரித்ததில் விஷயம் புரிந்தது. கதை என்னவென்றால், தலைக்கு 10 ரூபா என்றால் ஆளுக்கு பத்து ரூபா. துண்டு போடுவது என்றால், ட்ரெயின் பிளாட்போர்முக்கு வரும் முன்னரே 'நம்ம' போட்டர் சில சீட்களில் டவல் மாதிரி அழுக்கான வஸ்து ஒன்றை விரித்து ரிசர்வ் பண்ணி வைத்திருப்பார்.

ட்ரெயின் பிளாட்போர்முக்கு வந்தவுடன் அவரிடம் காசு கொடுத்து ரிசர்வ் செய்த பயணிகளிடம் சீட்டைக் கொடுத்துவிட்டு டவலை எடுத்துக் கொண்டு போயே போய்விடுவார். இதுதான் போட்டரிடம் தலைக்கு பத்து ரூபா கொடுத்தா துண்டு போட்டு முன்பதிவு செய்யும் அவர்களுடைய சிஸ்டம்.
"நீங்க எத்தனை பேருங்க"

"ஐந்து பேர்"

"ஐந்து பேரா? அப்ப தலைக்கு எட்டு ரூபா கொடுக்கிறீங்களா" அடடா, ஹோல்சேல் டிஸ்கவுன்ட்

"நான் ரெடிங்க. ஆனா மத்த நாலு 'தலை'களையும் கேட்டுத்தானுங்க முடிவு சொல்லணும்"

"அவுங்க எங்கே"

"அதோ அங்கே நிற்கிறாங்க பாருங்க. அவுங்கதான்"

"அட அது நம்ம பாப்பாங்களா?"

"நம்ம பாப்பாவா? கதை கந்தல்! சத்தமாக சொல்லாதீர். நீர் சொல்லும் 'நம்ம பாப்பா' அர்த்தம் அவுங்களுக்கு வேறு மாதிரிப் புரிஞ்சா, நீரும் நானும் இந்த இடத்திலேயே பஸ்பம். வாரும் போய் கேட்கலாம்.. இந்த துண்டு ரிசர்வேஷனைத் தாங்கும் இதயம் அவர்களுக்கும் இருக்கிறதா என்று!" **(தொடரும்)**

# வாவ்... ஆதாரங்களை நாட்டுக்கு வெளியே ரகசியமாகக் கொண்டுவந்து விட்டார்களா?




**சி**ரியாவில் இருந்து அரசு ஆவணங்களை சிறிது சிறிதாக கடத்தி வந்த நடவடிக்கை ஒன்றில், போதியளவு ஆவணங்கள் நாட்டுக்கு வெளியே கொண்டுவரப்பட்டு விட்டன என சர்வதேச அமைப்பு ஒன்று இந்த வாரம் தெரிவித்துள்ளது. வெளியே தெரிவிக்கப்படாமல், கடந்த 3 ஆண்டு களாக இந்தக் கடத்தல் ஆபரேஷனைச் செய்துள்ளது அந்தச் சர்வதேச விசாரணை அமைப்பு.

ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் அரசு நடத்திய கொலைகள், சித்திரவதைகள், மனித உரிமை மீறல்கள் பற்றிய ஆவணங்களை ரகசியமாக சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்ட அமைப்பின் பெயர், CIJA (Commission for International Justice and Accountability). இந்த அமைப்பை, இதே சுருக்கப் பெயருடைய இஸ்ரேலிய யூத அமைப்பான CIJAயுடன் குழப்பிக் கொள்ளாதீர்கள். இஸ்ரேலிய CIJAயின் விரிவாக்கம், Centre for Israel and Jewish Affairs.

நாம் குறிப்பிடும் CIJA அமைப்பு, அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், கனடா உட்பட சில நாடுகளின் நிதியுதவியுடன், சிரிய அரசின் ஆவணங்களை நாட்டுக்கு வெளியே கடத்திவரும் ஆபரேஷனை 3 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது. இந்த அபாயகர ஆபரேஷனில் சுமார் 50 பேர் கொண்ட குழு இறக்கி விடப்பட்டது. இவர்கள்தான் கடந்த 3 ஆண்டுகளாக சிரியாவுக்குள் அரசு ஆவணங்களை ரகசியமாக கவர்ந்து, சிரிய அரசின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு அவற்றை சிறிது சிறிதாக நாட்டுக்கு வெளியே கொண்டுவந்தனர்.

மிகவும் அபாயகரமான ஆபரேஷன் இது. ஆவணங்களை கடத்திவரும் நபர்கள் சிரியாவின் பாதுகாப்பு படையினரிடமோ, உளவுத்துறையினரிடமோ அகப்பட்டுக் கொண்டால் அதோகதிதான் என்ற நிலை. இந்த ஆபரேஷனில் ஈடுபட்ட 50 பேரில் ஒருவர், சிரியா பாதுகாப்பு படையினரிடம் சிக்கி உயிரிழந்தார். மற்றொருவர், மிக மோசமான முறையில் காயமடைந்தார்.


எண்ணிக்கை குறிப்பிடப்படாத சிலர், பாதுகாப்பு படையினரிடம் சிக்கி, தற்போது சிரியாவில் சிறையில் உள்ளனர். மீதி எத்தனை பேர், சிரியாவில் இருந்து தப்பி, பத்திரமாக வெளியே வந்துவிட்டனர் என்ற எண்ணிக்கையும் CIJAயால் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதி பஷார் அல் அசாத், மற்றும் அவரது அரசில் உள்ள முக்கிய நபர்கள் 24 பேர் மீது குற்றம் சுமத்த போதுமான ஆவணங்கள் வெளியே வந்து சேர்ந்து விட்டன என்பதால், கடந்த 3 ஆண்டுகளாக ரகசியம் காக்கப்பட்ட இந்த ஆபரேஷன் தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது கைவசம் உள்ள ஆவணங்களை வைத்து, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஜனாதிபதி பஷார் அல்அசாத், மற்றும் அவரது அரசில் உள்ள முக்கிய நபர்கள் 24 பேர் மீது கொலை, ஆட்கடத்தல், சித்திரவதை, மனித உரிமை மீறல்கள் ஆகிய குற்றப்பிரிவுகளில் வழக்கு தொடர முடியும்.

ஆனால், ISIS இயக்கத்துக்கு எதிராக சிரியாவும் யுத்தம் புரிகிறது. அதே நேரத்தில், அமெரிக்காவும், வேறு அமெரிக்க நேச நாடுகளும் ISIS இயக்கத்துக்கு எதிராக சிரியாவில் யுத்தம் புரிகின்றன. இப்படியான நிலையில் சிரியாவின் ஜனாதிபதிக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்றைக் கொண்டுவர அமெரிக்கா விரும்புமா என்பது சந்தேகமே!

# இலங்கை மீது தாக்குதல் நடத்த இந்திய ராணுவத்தின் தாக்குதல் திட்டம்!



## இலங்கைக்கு எதிராக இந்தியா விளையாடிய சில ராணுவ ராஜதந்திர விளையாட்டுக்கள்!

**அத்தியாயம் ஐந்து**

கடந்த அத்தியாயத்தில், 1980களில் இருந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஈழ விடுதலை இயக்கங்களுக்கு இந்தியாவில் வைத்து ஆயுதப் பயிற்சி கொடுப்பது என ஏன் முடிவு எடுத்தார் என்று எழுதியிருந்தோம்.

ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்கும் ஏற்பாடுகளை இந்திய உளவுத்துறை 'றோ' செய்தது என பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது 'றோ' அல்ல, 'றோ' உளவுத்துறையை உருவாக்கிய அதன் முன்னாள் தலைவர் கே.என். காவ் என்பவரால் புதிதாக உருவாக்கப்பட்ட 'த தேர்ட் ஏஜன்சி' என்ற அமைப்புத்தான், ஈழ விடுதலை இயக்கங்களுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி கொடுக்கும் ஏற்பாடுகளை இந்திய மத்திய அரசின் சார்பில் மேற்கொண்டது என்பதையும் கடந்த அத்தியாயத்தில் விளக்கியிருந்தோம்.

'த தேர்ட் ஏஜன்சி'யில் யார் யார், எந்தெந்தப் பொறுப்புகளில் நியமிக்கப்பட்டிருந்தார்கள், அவர்களது பின்னணி என்ன என்பது பற்றியெல்லாம் கடந்த அத்தியாயத்தில் விரிவாகக் கொடுத்திருந்தோம். வழமையாக நாம் ஒவ்வொரு அத்தியாயம் எழுதும்போதும், கடந்த அத்தியாயத்தின் சுருக்கம் எழுதுவது வழக்கம். ஆனால், இது போன்ற தொடர்களில் அதைச் செய்ய முடியாதபடி, கடந்த அத்தியாயத்தில் எக்கச்சக்க விபரங்கள்.

எனவே, உங்களால் முடிந்தால், நீங்கள் பரபரப்பு வார இதழ் வாங்கும் வர்த்தக நிலையத்தில் கடந்த வார இதழை வாங்கிப் படித்துக் கொள்ளவும்.

சரி. ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆரம்பப் பயிற்சிக்காகக் கொடுக்கப்பட்ட ஆயுதங்கள், இந்திய ராணுவத்திடம் இருந்து பெறப்பட்ட ஆயுதங்கள் என பலர் நினைத்திருக்கிறார்கள். அதுவும் தவறு. ஆப்கான் முஜாஹிதீன் இயக்கம் ஒன்றிடம் இருந்து ரகசியமாக வாங்கப்பட்ட பழைய ஆயுதங்கள் அவை.

இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினருக்கு கூடத் தெரியாமல் இந்தியாவுக்குள் அவற்றை கடத்தி வந்தது, 'த தேர்ட் ஏஜன்சி'.

அப்படியானால், ஆப்கானிஸ்தான் நாட்டு முஜாஹிதீன் இயக்கம் ஒன்றிடம் இருந்து ஆயுதங்களை வாங்குவதற்கு பணம் எங்கிருந்து வந்தது? அந்தப் பணம் எந்த உளவுத்துறை பட்ஜெட்டிலிருந்தும் வரவில்லை. எப்படி வந்தது என்று கூறினால் ஆச்சரியப்படுவீர்கள்.

கள்ளக் கடத்தல் மூலம்!

இந்திய – பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லைகளில் நடைபெற்ற கள்ளக் கடத்தல் அது. பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் அந்த நாட்களில் மதுவுக்கு தடை இருந்த காரணத்தால், மதுவும் சிகரெட்டும் இந்தியாவில் இருந்து கடத்தப்பட்டன. அந்தக் கடத்தலைச் செய்தவர்கள் சில வட இந்தியக் கடத்தல்காரர்கள்.

'த தேர்ட் ஏஜன்சி' ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுப்பது என்று முடிவு எடுத்தபின், வட இந்தியக் கடத்தல்காரர்களின் பின்னணியில் இருந்து சில கடத்தல்களை இந்திய உளவுத்துறை 'றோ'வின் இரு ஏஜெண்ட்கள் நடத்திக் கொடுத்தார்கள்.

அதில் கிடைத்த லாபப் பணத்தில், ஆப்கானிஸ்தான் முஜாஹிதீன் இயக்கம் ஒன்றிடம் இருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் மூலமாகத்தான் ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆரம்பப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

டில்லியில் அரசு உயர் மட்டத்தில் மிகவும் ரகசியமாகப் போடப்பட்டிருந்த ரகசியத் திட்டம்தான் ஈழ விடுதலை இயக்கங்களுக்கு இந்தியாவில் வைத்து ஆயுதப் பயிற்சி கொடுக்கும் திட்டம். ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்கலாம் என இந்திய மத்திய அரசு எடுத்த முடிவு பற்றி முழுமையாகத் தெரிந்திராவிட்டாலும், ஓரளவுக்கு இப்படியொரு விஷயம் நடக்கிறது என்று தெரிந்த இருவர் அந்த ஆரம்ப நாட்களில் இருந்தார்கள்.

ஓரளவுக்கு என்றால், ஈழ விடுதலை இயக்கங்களுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சி கொடுக்கப் போகிறது என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் த தேர்ட் ஏஜன்சி என்ற அமைப்பு அதற்காக உருவாக்கப்பட்டது என்பதோ, ஆயுதப் பயிற்சியை எப்படிக் கொடுக்க போகிறார்கள் என்பதோ இவர்களுக்குத் தெரியாது. (ஆரம்ப நாட்களில்)

அப்படி விஷயம் தெரிந்த இருவர் யார் என்பதைப் பற்றியும் பார்த்துவிடலாம்.

நாங்கள் குறிப்பிடும் இருவரில் ஒருவர், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்த 'றோ'வின் உளவாளி. மற்றொருவர் கொழும்பு இந்தியத் தூதரகத்தில் பணிபுரிந்து விட்டு பின்னர் புது டில்லியிலுள்ள 'றோ'வின் தலைமையகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றொரு 'றோ' அதிகாரி. இதோ, இந்த இருவரைப் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள்.

இலங்கையில் இனக்கலவரம் தொடங்கிய ஜூலை 1983 காலப்பகுதியில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் அதிகாரியாக இருந்த ஒருவரின் பெயர் மாத்யூ ஆப்ரஹாம். தமிழக கேரள எல்லையில் உள்ள நாகர்கோவில் என்ற இடத்தில் சிறிது காலம் வசித்ததால், நன்கு தமிழ் பேசத் தெரிந்த, மலையாளி கிறிஸ்தவர்.

அந்த நாட்களில், இவரைத் தூதரக அதிகாரி என்று சிலர் கூறினார்கள். இந்தியாவின் அரசியல் ராஜதந்திரி என்று சிலர் கூறினார்கள். இந்தியாவிலிருந்து இலங்கை கஸ்டம்ஸ் செக்கிங் எதுவும் இல்லாமல் டிப்ளமேட்டிக் பார்சல்கள் இவரது பெயருக்கு அடிக்கடி வந்துகொண்டிருந்தன. இவரும் அடிக்கடி கொழும்பில் இருந்து டில்லிக்கு பறந்து சென்று திரும்பிக் கொண்டிருந்தார்.

மொத்தத்தில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் மிக ஆக்டிவ்வாக இருந்தார்.

இந்த மாத்யூ ஆப்ரஹாம் தூதரக அதிகாரியுமில்லை, ராஜதந்திரியுமில்லை, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் அன்டர்–கவராக இருந்த ஒரு 'றோ' உளவாளி.

இலங்கையில் 1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தையடுத்து இந்தியா இலங்கை அரசுக்கு எதிராகத் திரும்பி ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் கொடுத்ததற்கு பல காரணங்கள். அந்தக் காரணங்களில் 'அணில் கல்லு போட்ட' கதை போல இந்த மாத்யூ ஆப்ரஹாமும் ஒரு காரணம்.

இதிலுள்ள மற்றுமோர் விஷயம், இவர் 'றோ'வை இலங்கை அரசுக்கு எதிராக திருப்பி விட்டதற்குக் காரணம் என்ன தெரியுமா?

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

இவருக்கு
சிங்களவர்கள் மீது
இருந்த 'தனிப்பட்ட ரீதியிலான'
ஒரு கோபம்!

கொழும்பில் இனக் கலவரம் தொடங்கிய தினத்தில் இந்தியத் தூதரகத்தின் வாகனத் தரிப்பிடத்திலிருந்து ஒரு கார் கிளம்பி கொழும்பில் உள்ள காலி வீதியில் (Galle Road) சென்று கொண்டிருந்தது. காரைச் செலுத்தியவர் இந்த மாத்யூ ஆப்ரஹாம்.

கலவரம் தொடங்கி விட்டது என்ற தகவல் இந்தியத் தூதரகத்துக்கு வந்தபோது, என்ன நடக்கிறது என்பதை நேரில் பார்த்து டில்லிக்கு அறிக்கை அனுப்புவதற்காகவே மாத்யூ ஆப்ரஹாம் தூதரகத்துக்கு வெளியே அனுப்பப்பட்டிருந்தார். வீதியில் அவரது கார் சென்று கொண்டிருந்தபோது, வீதியின் இரு புறமும் சிங்கள வன்முறையாளர்கள் கடைகளை அடித்து உடைப்பதையும், தீ வைப்பதையும் பார்த்துவிட்டு, மறுபடியும் இந்தியத் தூதரகத்தை நோக்கித் திரும்பியபோது தான்...

அவர் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது!

வன்முறையில் ஈடுபட்டிருந்த கும்பல் ஒன்று அவரது காரை வழிமறித்தது. அவரை காரிலிருந்து கீழே இறங்கும்படி மிரட்டலாகக் கூறியது.

மாத்யூ ஆப்ரஹாம் திகைத்துப் போனார். இந்தியத் தூதரக அதிகாரி என்ற ரீதியில் போகும் தன்னை யாரும் தடுக்க மாட்டார்கள் என்று நினைத்துத்தான் அவர் இனக்கலவரம் நடப்பது தெரிந்த பின்னரும் வீதியில் இறங்கியிருந்தார்.

வன்முறையாளர்கள் இறங்கச் சொன்னவுடன் காரை விட்டு கீழே இறங்கிய மாத்யூ சிங்களவர் அல்ல, இந்தியர் என்பது வன்முறையாளர்களுக்கு நன்றாகவே புரிந்து விட்டது. ஆனால், அவர் ஒரு இந்தியத் தமிழர் என்று நினைத்து அவரைத் தாக்க முயற்சித்தனர்.

தாம் இந்தியர் என்றாலும், தமிழன் அல்ல. அதுவும் இந்தியத் தூதரக அதிகாரி என்று இவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். காரின் லைசென்ஸ் பிளேட்டில் இந்திய அரசின் முத்திரை இருப்பதை காட்டிப் பார்த்தார். ஊகும். வீதியில் நின்ற ஆட்கள் படிக்காத ஆட்கள். அவர்களுக்கு இவர் கூறியது புரியவில்லை. முதலில் அவர் வந்த இந்திய தூதரக காரை பெட்ரோல் ஊற்றி எரித்தார்கள். அடுத்து அவரைத் தாக்கத் தொடங்கினார்கள். கடுமையான தாக்குதல்.

பாதி உயிருடன் காலி வீதியில் வீழ்ந்து கிடந்தவர் ஒருவழியாக உயிர் பிழைத்துக் கொண்டார். கார் முழுமையாக எரிந்து போனது. வீதியில் வைத்து அவரை தாக்கிய வன்முறையாளர்களுக்கு அப்போது ஒரு விஷயம் தெரிந்திருக்கவில்லை.



அது என்னவென்றால், இந்த மாத்யூ ஆப்ரஹாம் கொழும்பு வீதியில் தமது உயிர் கிட்டத்தட்ட போய் மீண்ட சம்பவத்தை மறக்கப் போவதில்லை. இலங்கை அரசை பழி வாங்காமலும் அவர் விடப் போவதில்லை என்பதை, வீதியில் நின்றிருந்த வன்முறையாளர்களுக்கு அப்போது தெரிந்திருந்தால், மாத்யூ ஆப்ரஹாமில் கைவைத்திருக்க மாட்டார்களோ, என்னவோ. உயிர் தப்பிய மாத்யூ ஆப்ரஹாம் அந்த சம்பவத்தின் பின் கொழும்பில் இருந்து தலைமையகத்துக்கு அனுப்பிய உளவு அறிக்கைகள் எல்லாமே இலங்கை அரசுக்கு எதிரான அறிக்கைகள்!

அவருக்கு டில்லி 'றோ' தலைமையகத்தில் இருந்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

அதில், "கொழும்பில் நடைபெற்ற வன்முறையில் நீங்கள் நேரடியாக பாதிக்கப்பட்டதால், நீங்கள் இலங்கையில் இருந்து வெளியேறி, வேறு பாதுகாப்பான நாடு ஒன்றில் 'றோ'வின் உளவாளியாக பணிபுரிய விரும்புகிறீர்களா? அல்லது, புது டில்லியிலுள்ள 'றோ'வின் தலை மையகத்தில் பணிபுரிய விரும்புகிறீர்களா?" என்று 'றோ'வின் டில்லி தலைமையகம் அவரைக் கேட்டது.

இலங்கையிலிருந்து கிளம்ப அவர் மறுத்துவிட்டார். இதன் பின்னர் உளவுத்துறை 'றோ'வின் இலங்கை விவகார நிபுணராகி விட்டார் மாத்யூ ஆப்ராஹாம்.

'றோ'வைப் பொறுத்தவரை இலங்கை விவகாரத்தில் தனித்துவமாக இயங்கி நிபுணத்துவம் பெற்றவர் இவர். இவரது இலங்கை தொடர்பான சிந்தனைகளே டில்லியிலுள்ள 'றோ'வின் தலைமையகத்தில் சீரியசாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

கொழும்பிலிருந்து 'றோ'வின் தலைமையகத்துக்கு ஆப்ரஹாம் அனுப்பிவைத்த அனைத்து உளவு அறிக்கைகளுமே இலங்கை அரசுக்கு எதிராக இருக்க...

அந்த அறிக்கைகள் 'றோ'வின் அப்போதைய தலைவர் சக்ஸேனாவுக்கும், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.என்.காவ்வுக்கும் போய்ச் சேர...

இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக கடுமையாக்கியது. ஈழவிடுதலை இயக்கங்களுக்கு ஆயுதமும் பயிற்சியும் கொடுக்கப்பட்டதற்கு இருந்த ஆயிரம் காரணங்களில் இதுவும் ஒரு காரணமாகிப் போனது.

ஈழ விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்கலாம் என இந்திய மத்திய அரசு எடுத்த முடிவு பற்றி முழுமையாகத் தெரிந்திராவிட்டாலும், ஓரளவுக்கு விஷயம் தெரிந்த இருவர் அந்த ஆரம்ப நாட்களில் இருந்தார்கள் என இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் எழுதியிருந்தோம் அல்லவா? அந்த இருவரில் ஒருவர், இப்போது நாம் குறிப்பிட்ட மாத்யூ ஆப்ராஹாம்.

சரி. அப்படியானால், இரண்டாவது நபர் யார்?

மாத்யூ ஆப்ரஹாம் விவகாரம் ஒரு பக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்க, வேறு ஒரு வழியில் மற்றொரு விஷயமும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது புது டில்லியிலுள்ள 'றோ'வின்



தலைமையகத்துக்கும் கொழும்பில் இருந்த ரகசிய தொடர்பாளர் ஒருவருக்கும் இடையிலான மற்றொரு ரகசிய விவகாரம்.

அதில்தான் இந்த இரண்டாவது நபர் வருகிறார்.

நாம் குறிப்பிடப்போகும் நபர், இலங்கையில் இருந்து பெற்றுக் கொடுத்த சில 'உள்வீட்டுத்' தகவல்கள் காரணமாக, இலங்கை மீது தாக்குதல் நடத்தும் ராணுவத் திட்டத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு, ராஜதந்திர மற்றும் உளவுத்துறை விவகாரங்களைத் தொடங்கியது இந்தியா.

அதைத் தொடரின் அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்... **(தொடரும்)**

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# பிரீஃப் கேஸுடன் நட

## சி.ஐ.ஏ.யை விட்டுவிட்டு மொசாத்தின் உளவாளியை

கடந்த வாரம்....

1984ம் ஆண்டு லெபனானில் சுமார் 30 அமெரிக்கர்கள் கடத்தப்பட்டனர். இந்த நிலையில், அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.யின் லெபனானுக்கான தளத் தலைவர் வில்லியம் பக்லி கடத்தப்பட்டு கொல்லப்பட்டார். அவரை எப்படியாவது விடுவிக்க சி.ஐ.ஏ. முடிவு செய்தது. அதற்காக அவரைக் கடத்தியவர்களுடன் பேரம் பேசவும், கேட்பதைக் கொடுக்கவும் தயாராக இருந்தது சி.ஐ.ஏ. இந்தச் சம்பவம் நடந்தபோது, சி.ஐ.ஏ.யின் தலைவராக இருந்தவர் வில்லியம் கேசி.

கடத்தல்களைச் செய்தது, ஹெஸ்பொல்லா இயக்கம் என்பதை சி.ஐ.ஏ. தெரிந்து கொண்டது. அந்த இயக்கத்துக்கும் ஈரானுக்கும் இடையே இருந்த தொடர்பும் சி.ஐ.ஏ.க்குத் தெரியும்.

வில்லியம் பக்லி கடத்தப்பட்ட பின், மேலும் ஏழு அமெரிக்கர்கள் கடத்தப்பட்டனர். இவர்கள், வில்லியம் பக்லியால் நியமிக்கப்பட்ட சி.ஐ.ஏ. உளவாளிகள்.

இவர்களை எப்படியாவது விடுவிக்க வேண்டும் என அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரேகன் முடிவெடுக்கிறார். அதை எப்படிச் செய்வது? லெபனானில் அமெரிக்க அதிரடிப் படையை வைத்து அதிரடியாகத் தாக்குதல் ஒன்றை நடத்துவது உட்பட பல திட்டங்கள் விவாதிக்கப்பட்டன. ஆனால், அவையெல்லாம் வெற்றிகரமாக இருக்காது என்று தெரிந்து கைவிடப்பட்டன.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியும், அவருடைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் மக்பார்லேனும் இதுபற்றிப் பேசிக்கொண்டு இருந்தபோது, ஜனாதிபதி ரேகன் வில்லங்கமான முடிவு ஒன்றை எடுத்தார் எனக் கடந்த அத்தியாயத்தை

முடித்
யாயத்

ஆணி

“தெரி
வருகி

“அது
செய்ய
மிடில்

“அது



ஒலிவர் நோர்த்

டேவிட் கிம்சீ

ஜனாதிபதி ரொனால்ட் ரேகன்

# நடமாடும் உளவாளி

## ாளியை வைத்து அமெரிக்கா செய்த ரகசிய ஆபரேஷன்!

ந்த தொடர்பும்

கடத்தப்பட்டனர்.
ள்.

அமெரிக்க ஜனா
? லெபனானில்
றை நடத்துவது
வெற்றிகரமாக

துகாப்பு ஆலோ
து, ஜனாதிபதி
அத்தியாயத்தை

முடித்திருந்தோம். அந்த வில்லங்க முடிவுதான் என்ன? இதோ, இந்த அத்தியாயத்தில் படியுங்கள்.


### அத்தியாயம் இரண்டு

அமெரிக்க ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் மக்பார்லேன் ஒரு விஷயத்தை சுட்டிக்காட்டினார். "மிஸ்டர் பிரசிடென்ட்... லெபனானில் வைத்து இந்த ஏழு அமெரிக்கர்கள் கடத்தப்பட்டாலும், அவர்களைக் கடத்தியது ஒரு ஹெஸ்பொல்லா இயக்கம் என்றிருந்தாலும், இந்தக் கடத்தலின் ஆணி வேர் லெபனானில் இல்லை"

"தெரியும். ஹெஸ்பொல்லா இயக்கத்துக்கு சகல உதவிகளும் ஈரானில் இருந்துதான் வருகின்றன"

"அது மாத்திரமல்ல. ஈரான் உத்தரவிட்டால், ஹெஸ்பொல்லா இயக்கம் எதையும் செய்யும். செய்தேயாக வேண்டும். இல்லாவிட்டால் ஹெஸ்பொல்லா இயக்கத்தால் மிடில் ஈஸ்ட்டில் இயங்கவே முடியாது"

"அதுவும் உண்மைதான்"



கிம்சீ

"நாங்கள் ஹெஸ்பொல்லா இயக்கத்தை விட்டுவிடுவோம். ஈரானை பிடித்துக் கொள்வோம். ஈரானுக்கு அழுத்தம் கொடுத்தால் ஏழு அமெரிக்கர்களையும் விடுவித்துவிட முடியும்."

"அழுத்தம் கொடுக்கலாம். அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுப்பதற்கு நீண்ட நாட்களாகும். பணயக் கைதிகள் ஹெஸ்பொல்லா இயக்கத்தினரின் கைகளில் இருக்கும்போது அது மிகவும் ரிஸ்க்கானது"

"ஈரான் மீது தாக்குதல் நடத்துவது போன்ற ராணுவ ரீதியாக அழுத்தம் கொடுப்பது, அதைவிட ரிஸ்க்"

"சரி. இதை வேறு விதமாக டீல் பண்ணலாம்" என்று கூறிய ரேகன், "ஈரானியர்களுக்கு இன்றைய திகதியில் மிக மிக அவசியமாகத் தேவைப்படுவது என்ன?" என்று கேட்டார்.

"ஆயுதங்கள். ஈராக்கைத் தாக்குவதற்கு"

ரேகன் சில விநாடிகள் மௌனமாக இருந்தார். பின்னர் சொன்னார், "அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களை நாமே ரகசியமாக கொடுத்துவிடலாம். ஆயுதங்களுக்கு பிரதிபலனாக, ஏழு அமெரிக்கப் பணயக் கைதிகளையும் ஹெஸ்பொல்லா இயக்கத்தினர் விட்டுவிட வேண்டும் என்று ஈரானுக்கு நிபந்தனை விதிக்கலாம்."

இதைக்கேட்டு மக்பார்லேன் திகைத்துப் போய்விட்டார். ரேகன் கூறுவது ஒரு அதிரடியான முடிவு மாத்திரமல்ல, ஆபத்தான முடிவும் கூட. அத்துடன் அரசு உயர் மட்டத்திலேயே பலரும் எதிர்க்கக்கூடிய முடிவு.

ஆனால் இதைவிட வேறு வழியில்லை என்பதில் ஜனாதிபதி ரேகன் பிடிவாதமாக இருந்தார்.

அன்று மாலையே ரேகனும் மற்றைய அரசு உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்ட அவசரக் கூட்டமொன்றில் இந்த விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. எதிர்பார்த்தது போலவே எதிர்ப்பு அதிகமாக இருந்தது. சி.ஐ.ஏ.யின் தலைவராக ஜனாதிபதி ரேகனால் நியமிக்கப்பட்டிருந்த வில்லியம் கேசிகூட இதை எதிர்த்தார். அமெரிக்க ராணுவத் தளபதிகளும், ஈரானுக்கு ஆயுதம் கொடுப்பதை விரும்பவில்லை.

அன்றைய அவசரக் கூட்டத்தில் ரேகன் கேட்டார், "ஈரானுக்கு ஆயுதங்கள் கொடுப்பதால் ஆபத்து யாருக்கு?"

"உடனடியான ஆபத்து ஈராக்குக்கு. ஆனால் நாளைக்கே, அந்த ஆயுதங்கள் அமெரிக்காவுக்கு எதிராகவும் திரும்பலாம்."

"நாளைக்கு திரும்பலாம் என்ற ஊகத்தில், இன்றைக்கு ஆபத்திலிருக்கும் ஏழு பணயக் கைதிகளையும் கைவிட்டுவிட முடியுமா?"

அமெரிக்கப் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு ஈரானுக்கு ஆயுதம் கொடுப்பது தான் ஒரே வழி என்பதில் ரேகன் பிடிவாதமாக இருந்தார். அத்துடன் அந்த ஆலோசனை முடிந்தது. ஈரானுக்கு, ரகசியமாக ஆயுதம் கொடுப்பது என்று அமெரிக்க ஜனாதிபதி தீர்மானித்துவிட்டார்.

ஆனால், ஆயுதங்களை எப்படி ஈரானுக்கு அனுப்ப போகின்றார்கள் என்ற விபரம் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லை.

அமெரிக்காவின் ரகசிய ஆயுத சப்ளைகளை வழமையாக உளவுத்துறை சி.ஐ.ஏ.தான் செய்வது வழக்கம். காரணம் ரகசியமாக, வெளியே யாருக்கும் தெரியாதபடி செய்யப்பட வேண்டிய திரைமறைவு வேலை இது. அதற்கு அவர்கள்தான் சரியான ஆட்கள்.

ஆனால் ஈரானுக்கு ரகசியமாக ஆயுதம் சப்ளை விஷயத்தில், சி.ஐ.ஏ.யின் தலைவர் வில்லியம் கேசியிடம், ஆயுதங்களை ரகசியமாக எப்படி ஈரான்வரை அனுப்புவது என்று ரேகன் ஆலோசிக்கவில்லை.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

## பரபரப்பின் அறிவித்தல்!

பரபரப்பு வார இதழின் 1வது இதழில் இருந்து வாங்காமல், 11வது 12வது இதழ்களை வாங்கிய வாசகர்கள் பலர் பரபரப்பு வார இதழின் பழைய இதழ்களை வாங்குவதற்காக வர்த்தக நிலையங்களுக்கு நேரில் செல்கிறார்கள். பழைய இதழ்கள் வர்த்தக நிலையங்களில் இருக்காது. நீங்கள் பரபரப்பின் பழைய இதழ்களை வாங்க விரும்பினால், கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும். அல்லது, நீங்கள் வழமையாக பரபரப்பு வார இதழை வாங்கும் பத்திரிகை விற்பனை நிலையத்தில் எந்தெந்த இதழ்கள் தேவை என்பதைத் தெரிவிக்கவும். அடுத்த வார இதழுடன் நீங்கள் தவறவிட்ட இதழ்களையும் அனுப்பி விடுவோம். நீங்கள் அங்கு செல்லும்போது தவறவிட்ட இதழ்களை வாங்கலாம்.

பழைய இதழ்களையும் வாசகர்கள் தேடி வாங்கும் வார இதழ் பரபரப்பு என்பதில், பெருமையடைகிறோம். பழைய இதழ்களை அனுப்புவதற்கு ஒருவரையும் எமது அலுவலகத்தில் நியமித்திருக்கிறோம். உங்கள் அபிமானத்துக்கு நன்றி.

**நேரடித் தொடர்புகளுக்கு: 076 367 2842**


ரகசிய ஆயுத சப்ளை செய்வது என்று ஜனாதிபதி முடிவு செய்த பின்னரும், அதுபற்றி தம்முடன் ஆலோசிக்கவில்லை என்ற நடைமுறை, சி.ஐ.ஏ.யின் தலைவர் வில்லியம் கேசிக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கலாம்.

ஆனால் அவர் எதுவும் பேசவில்லை. சி.ஐ.ஏ.க்கே தெரியாமல் வேறு வழியில் ஆயுத சப்ளை நடத்த ரேகன் திட்டமிட்டு இருக்கிறார் என சி.ஐ.ஏ.யின் தலைவர் நினைத்திருக்கலாம்.

உண்மையில், அப்படி ஒரு ரிஸ்கியான திட்டத்தைதான் ரேகன் போட்டிருந்தார். ரேகன், சி.ஐ.ஏ.வை அன்டர்கட் பண்ணிவிட்டு இந்த ரகசிய காரியத்தை யாரிடம் ஒப்படைத்தார் தெரியுமா? அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த கேர்னல் ஒலிவர் நோர்த் என்ற தனி மனிதரிடம்!

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் மக்பார்லேனும், ஜனாதிபதி ரேகனும் இந்த ரகசிய ஆயுத சப்ளை விவகாரத்தில் சி.ஐ.ஏ.யைச் சேர்த்துக் கொள்வதில்லை என்று ஏற்கனவே முடிவு எடுத்திருந்தார்கள்.

அதனால்தான் சி.ஐ.ஏ.யின் தலைவர் கலந்து கொண்ட கூட்டத்தில் எப்படி ஆயுத சப்ளை நடைபெறப் போகின்றது என்பது பற்றி வாயே திறக்கவில்லை.



ஏன் அப்படி முடிவெடுத்தார்கள்? அதுதான் இன்றுவரை யாருக்கும் புரியவில்லை.

பின்னாட்களில் இந்த விவகாரம் வெளியே தெரியவந்து அமெரிக்காவில் பல சர்ச்சைகள் ஏற்பட்ட போதும், இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க செனட் சபையில் நடைபெற்ற விசாரணையின்போதும், இதே கேள்வி எழுப்பப்பட்டது.

"எம்மிடம் உலகின் முதல் தர உளவுத்துறை (சி.ஐ.ஏ.) இருக்கிறது. அப்படியிருந்தும் அவர்களை விட்டுவிட்டு ஏன் இஸ்ரேலிய உதவி நாடப்பட்டது?" என்று கேள்வி எழுப்பினார் ஆர்க்கான்சா மாநில செனட் உறுப்பினர் மார்க் ஜெரலோவிக். அவருடைய கேள்விக்கு, "சந்தர்ப்ப சூழ்நிலைகள் அப்படி அமைந்து விட்டன" என்று மழுப்பலான பதிலே ரொனால்ட் ரேகன் தரப்பினரால் கொடுக்கப்பட்டது.

இந்தக் காரியத்துக்கு சரியான நபர் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த கேர்னல் ஒலிவர் நோர்த் என ஜனாதிபதி ரேகனிடம் பரிந்துரை செய்தவரே, ரேகனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் மக்பார்லேன்தான்.

ஒலிவர் நோர்த்தும் மக்பார்லேனும் வியட்னாம் யுத்த காலத்தில் ஒரே படைப்பிரிவில் ஒன்றாக யுத்தம் புரிந்த ஆட்கள். இரண்டு பேருக்கும் இடையே நல்ல அன்டர்ஸ்டான்டிங் உண்டு. வியட்னாம் போரில் இரண்டு பேருமே அதிரடியாக அலுவல் பார்க்கக் கூடிய ஆட்கள் என்று பெயரெடுத்தவர்கள்.

இந்தப் பழைய வியட்னாம் கனெக்ஷன் காரணமாகத்தான், இவ்வளவு பெரிய, அதி ரகசியமான காரியத்தைச் செய்ய ஒலிவர் நோர்த் சரியான நபர் என தேர்ந்தெடுக்க வைத்தது.

நோர்த்தும், மக்பார்லேனும் இதை எப்படி செய்யலாம் என ஆராய்ந்தார்கள். சி.ஐ.ஏ. இதைச் செய்திருந்தால், தமது அன்டர்கவர் ஏஜென்ட்களை வைத்து செய்திருப்பார்கள். ஆனால், ஒலிவர் நோர்த் கடற்படையில் பணிபுரிந்தாலும், இந்த காரியத்தில் கடற்படையினரை ஈடுபடுத்த முடியாது. ரகசியம் அவுட் ஆகிவிடும்.

மூன்றாவது பார்ட்டி ஒன்றின் ஊடாக ஈரானுக்கு ஆயுதம் கொடுப்பதே சிறந்த வழி என இருவரும் முடிவெடுத்தார்கள்.

"இந்த ரகசிய ஆயுத சப்ளைக்குள் இஸ்ரேலைக் கொண்டு வரலாம். அவர்கள்தான் ஏற்கனவே ஈரானுக்கு ரகசியமாக ஆயுதம் கொடுத்துக் கொண்டிருந்த ஆட்கள்" என்றார் ராபர்ட் மக்பார்லேன். அதை மற்றைய இருவரும் ஆமோதித்தார்கள்.

இஸ்ரேல், ஏற்கனவே ஈரானுக்கு ரகசியமாக ஆயுதம் கொடுத்தது என்று இவர் கூறியது உங்களுக்கு மகா ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஈரானின் லட்சியமே யூதர்களின் இஸ்ரேலை அழிப்பதுதான். அதேபோல, இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்த எப்போதும் தயார் நிலையில் உள்ள ஒரு நாடு.

அப்படியிருக்கும் நிலையில், இஸ்ரேல், ஈரானுக்கு ரகசிய ஆயுத சப்ளை செய்ததா என நீங்கள் திகைத்திருக்கலாம்.

ஆனால், அந்த ரகசிய ஆயுத சப்ளை உண்மையிலேயே நடந்தது.

அதைச் செய்து கொடுத்தவர், உளவுத்துறை வட்டாரங்களில் 'பிரீஃப் கேஸுடன் நடமாடும் உளவாளி' என்று அந்த நாட்களில் அறியப்பட்ட ஒருவர். இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத் ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் 1953ம் ஆண்டு சாதாரண உளவாளியாக இணைந்து, பின்னர் படிப்படியாக வளர்ந்தவர். ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் நடந்த மொசாத்தின் பல அதிரடி வேலைகளின் மூளை இவர்தான்.

ஆபிரிக்க நாடு ஒன்றில் இவர் கையில் ஒரு பிரீஃப் கேஸுடன் போய் இறங்கினால், அடுத்த ஓரிரு நாட்களில் அங்கே புரட்சி வெடிக்கும்! அரசாங்கம் தூக்கியெறியப்படும். புரட்சி தொடங்கியவுடன் தனது பிரீஃப் கேஸுடன் அங்கிருந்து கிளம்பிவிடுவார் இவர்.

இப்படி 'பிரீஃப் கேஸுடன் நடமாடும் உளவாளி' என அறியப்பட்ட நபரின் பெயர், டேவிட் கிம்சீ. இன்றுவரை மொசாத்தின் 'நட்சத்திர உளவாளி' என்று அழைக்கப்படுபவர், இவர்தான் (2010ம் ஆண்டு தமது 82வது வயதில் மரணமடைந்து விட்டார்).

பிரிட்டனில் பிறந்த டேவிட் கிம்சீ, அங்கிருந்து இஸ்ரேலுக்குக் குடிபெயர்ந்தார். இவரைப் பற்றிய மிகச் சுவாரசியமான தரவு எதுவென்றால், இஸ்ரேலுக்குக் குடியேறிய புதிதில், இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சில் வேலை செய்வதற்கு அனுமதிப் பரீட்சை எழுதி அதில் தேர்வாக வில்லை. இதில் என்ன சுவாரசியம்?

உளவுத்துறை மொசாத்தில் இணைந்து பல அதிரடி ஆபரேஷன்களை நடத்தியபின், இவர் தாமாகவே விரும்பிப் பணி மாற்றம் கோரி, இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சில் இணைந்து கொண்டார். வெளியுறவு அமைச்சில் பணிபுரிந்த காலத்திலேயே ஈரானுக்கு ஆயுதங்களை ரகசியமாகக் கொடுக்கும் ஆபரேஷனை இஸ்ரேலுக்காகவும் அமெரிக்காவுக்காகவும் செய்து கொடுத்தார்!

இஸ்ரேலிய அரசின் 'ஈரானுக்கு ரகசிய ஆயுத சப்ளை செய்யும் திட்டத்தை' நடத்திக் கொடுத்த காரணத்தால்தான், அமெரிக்கா இஸ்ரேலை இந்த ஆபரேஷ க்குள் கொண்டுவர முடிவு செய்தது.

ரகசிய ஆயுத சப்ளைகளை டேவிட் கிம்சீ எப்படிச் செய்தார் என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்...

(தொடரும்)

# விதியா? சதியா?



# அல்லது உளவு பார்த்தலா?

அத்தியாயம் நான்கு

தென் கொரியாவின் கொரியன் எயார்லைன்ஸ் விமானம் KAL007, சர்வதேச வான் பகுதியில் இருந்து ரஷ்ய வான்பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது என்பதுடன் கடந்த அத்தியாயத்தை முடித்திருந்தோம். இது நடந்த காலத்தில், அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் (அப்போது சோவியத் யூனியன்) இடையே வல்லரசுப் போட்டியில் பனிப்போர் நடந்துகொண்டிருந்தது.

அமெரிக்கா தமது போர்க் கப்பல்களை ஐரோப்பியக் கடற் பகுதிகளிலும், வடக்கு பசுபிக் கடலிலும் நிரந்தரமாகவே நிறுத்தி வைத்திருந்தது. அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன், ரஷ்யா மீது முதலாவது அணுகுண்டுத் தாக்குதலை நடத்தினாலும் நடத்தலாம் என்பதாக ஒரு பேச்சு இருந்தது.

ரஷ்யாவும், மிக மிகக் கவனமாகத் தமது எல்லைகளைப் பாதுகாத்துக்கொண்டு இருந்தது. எல்லையில் அமெரிக்காவை எதிர்பார்த்தும் இருந்தது!

அத்துடன் ரஷ்யா அப்போதுதான் Operation RYAN என்ற மெகா ஆபரேஷனை நடத்திக்கொண்டு இருந்தது. இந்த ஆபரேஷனில் RYAN என்பது உண்மையில் RYaN. அதன் விரிவாக்கம், Raketno-Yadernoe Napadenie. ரஷ்ய மொழியில் அர்த்தம், 'அணு ஆயுத ஏவுகணைத் தாக்குதல்'!

ஒருவேளை ரஷ்யா மீது அமெரிக்கா அணுகுண்டு போட்டால், ஏவுகணை மூலம் தமது அணுகுண்டை அமெரிக்காவுக்கு அனுப்பத் தயார் நிலையில் இருந்தது ரஷ்யா என்று அமெரிக்காவை எச்சரிக்கவே, இந்த ஆபரேஷன் RYAN அந்த நாட்களில் நடத்தப்பட்டது.

அமெரிக்காவும், ரஷ்யாவும், தத்தமது ஜனாதிபதிகள் அணுகுண்டுத் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொள்ளப் பாதாள நிலவறையெல்லாம் அமைத்துத் தயார் நிலையில் இருந்தார்கள். சுருக்கமாகச் சொன்னால், மகா டென்ஷனான காலம் அது. மற்றொரு உலக யுத்தம் தொடங்குவது போன்ற சூழ்நிலை!

பசுபிக் கடலின்மேல், கொரியன் எயார்லைன்ஸ் விமானம் பறந்த இந்த வான் பகுதியில் அமெரிக்க விமானப்படை விமானங்கள் அவ்வப்போது வரம்பு மீறிப் பறந்துகொண்டிருந்தன.

ரஷ்யாவின் ராணுவத் தளங்கள் இருந்த குரில் தீவுகளுக்கு (Kurile islands) மேலாக, அமெரிக்க விமானப்படை உளவு பார்க்கும் விமானங்கள் வெற்றிகரமாகப் பறந்துவிட்டுத் திரும்பின. அதையடுத்து, அந்த ராணுவத் தளத்தில் இருந்த தளபதிகள் அனைவரையும் டிஸ்மிஸ் செய்தது, ரஷ்ய ராணுவம்... அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தவில்லை என்ற குற்றச்சாட்டில் அனைவரும் டிஸ்மிஸ்!

இப்படியான சூழ்நிலையில் அமெரிக்காவில் (அலாஸ்கா) இருந்து புறப்பட்ட ஒரு விமானம், திசை மாறிச் செல்வதாக கூறிக்கொண்டு ரஷ்ய வான் பகுதியை நோக்கிச் சென்றால் என்னாகும்?

அலாஸ்காவில் இருந்து புறப்பட்டு, தனது பாதையில் இருந்து விலகிப் பறந்து கொண்டிருந்த கொரியன் ஏர்லைன்ஸின் KAL007 விமானம், UTC நேரம் சரியாக 15:51க்கு ரஷ்ய வான் எல்லைக்குள் பிரவேசித்தது.

நாம் குறிப்பிட்ட 'UTC' என்பது, Coordinated Universal Time என்ற சர்வதேச நேர அலகின் சுருக்கம். இதன் முதல் எழுத்துக்களை வைத்து 'CUT' என்றல்லவா அழைக்க வேண்டும்? ஏன் 'UTC' என்கிறார்கள்? எல்லாம், ஆங்கிலத்துக்கும், பிரெஞ்ச் மொழிக்கும் இடையிலுள்ள மோதல்தான். Coordinated Universal Time என்பதன் பிரெஞ்ச் மொழிபெயர்ப்பு, Temps Universel Coordonné. அதன் சுருக்கம், 'TUC'. 1960களில், இவர்கள் 'CUT' என்று கூற, அவர்கள் 'TUC' என்று கூற ஏகப்பட்ட குழப்பங்கள் ஏற்பட்டன. இறுதியில் "உங்களுக்கும் வேண்டாம், எங்களுக்கும் வேண்டாம்" என்று 'TUC' 'CUT' ஆகிய இரு சுருக்கங்களிலும் உள்ள அதே எழுத்துக்களை வைத்து, 'UTC' என்று மாற்றி விட்டார்கள். இன்றுவரை இதுதான் நிலைத்து நிற்கிறது.

திசை மாறிப் பறந்த கொரியன் எயார்லைன்ஸின் விமானம் ரஷ்யாவின் காம்சட்கா பகுதிக்கு மேல் இருந்த 'தடைசெய்யப்பட்ட' வான்பகுதியை (restricted airspace) நோக்கிப் பறக்கத் தொடங்கியது.

முதலில் கொரியன் எயார்லைன்ஸின் விமானம் ரஷ்ய வான்பகுதியின் 'எச்சரிக்கையுடன் அனுமதிக்கப்பட்ட' வான் பகுதிக்குள் பறக்கத் தொடங்கியது. இந்த 'எச்சரிக்கையுடன் அனுமதிக்கப்பட்ட' வான் பகுதியை ஆங்கிலத்தில் buffer zone என்பார்கள். எல்லா நாடுகளிலும் இது உள்ளது. இது எதற்காக என்றால், ஒருவேளை விமானம் நிஜமாகவே பாதை தவறி உள்ளே வந்துவிட்டால், இந்தப் பகுதியில் பறக்கும்போது, உடனே சுட மாட்டார்கள். விமானியை எச்சரிக்கை செய்வார்கள் "உடனே வெளியே போய் விடுங்கள்"

கொரியன் எயார்லைன்ஸ் விமானம், buffer zoneக்குள் நுழைந்ததை, ரஷ்ய தரைக் கட்டுப்பாட்டு மையங்கள் ஏதும் டிடெக்ட் பண்ணவில்லை!

(இந்த தென் கொரியா நாட்டு பயணிகள் விமானத்தில், அலாஸ்காவில் எரிபொருள் நிரப்பிய நேரத்தில் சிக்னல்களை ஜாம் செய்யும் டிவைஸ் ஒன்றை அமெரிக்க உளவுத்துறை பொருத்தியது என்பதாக, ரஷ்ய மீடியாக்கள் நீண்ட காலமாகச் சொல்லிவந்தன. அதனால்தான் விமானம் ரஷ்ய வான் பகுதிக்குள் பிரவேசித்தபோது, ரஷ்ய ரேடார்களில் விமானம் தென்படவில்லை என்பது, அவர்களது தியரி. ஆனால், இதற்கு ஆதாரம் ஏதுமில்லை)

ரஷ்யாவின் வான்பகுதியின் buffer zone, காம்சட்கா பகுதி கடற்கரையில் இருந்து 200 கி.மீ. தொலைவுவரை உள்ளது. அதற்குள் பறக்கத் தொடங்கிய நிலையில், இந்த விமானம் திசையை மாற்றி, மீண்டும் சர்வதேச வான் பகுதிக்குள் சென்றிருந்தால், ஒருவேளை தப்பித்து இருக்கலாம்.

ஆனால் அப்படிச் செய்யவில்லை. தொடர்ந்தும் ரஷ்ய வான் பகுதிக்குள் பறக்கத் தொடங்கியது KAL007 விமானம்.



அடுத்த பக்கம் வாருங்கள் ➡




1983ம் ஆண்டு செப்டெம்பரில் சர்வதேச மீடியாக்களின் தலைப்புச் செய்திகளில்... கொரியன் எயார்லைன்ஸ் விமானம்!

விமானம் காம்சட்கா பகுதி கடற்கரையில் இருந்து 130 கி.மீ. வரை நெருங்கிய போது, ரஷ்ய ரேடார்கள் இந்த விமானத்தை டிடெக்ட் பண்ணின. உடனடியாக, ஒரு MiG-23 போர் விமானமும், மூன்று Su-15 Flagon தாக்குதல் விமானங்களும், இந்த விமானத்தை மடக்க அனுப்பி வைக்கப்பட்டன.

இப்போது, இந்த விமானம் ரஷ்யாவின் வான்பகுதியின் buffer zoneக்குள் பறப்பதை ரஷ்ய விமானப்படை விமானங்கள் நேரில் கண்டுகொண்டன.


"All the News That's Fit to Print"

The New York Times

Late Edition

VOL.CXXXII ... No. 45,799 — NEW YORK, FRIDAY, SEPTEMBER 2, 1983

U.S. SAYS SOVIET DOWNED KOREAN AIRLINER; 269 LOST; REAGAN DENOUNCES 'WANTON' ACT

Begin's Party Chooses Shamir as New Leader

Flight of the Korean 747

A FRUITLESS SEARCH

President Calls Meeting of National Security Council for Today

...ds Explanation ...g Act of Violence"

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட தினத்துக்கு மறுதினம் (செப்டெம்பர் 3ம் திகதி, 1983ம் ஆண்டு) வெளியான நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் முகப்பு

KAL007 விமானத்தின் விமானி, இவர்களது விமானங்களைக் கண்டதாலோ, அல்லது தாம் தவறான பாதையில் பறப்பதை புரிந்து கொண்டதாலோ, உடனே விமானத்தை திசை மாற்றி மீண்டும் சர்வதேச வான் பகுதியை நோக்கி செலுத்தத் தொடங்கினார்.

இன்னும் சிறிது நேரத்தில், விமானம் ரஷ்யாவின் வான்பகுதியின் buffer zone-ஐ விட்டு வெளியே வந்து மீண்டும் சர்வதேச வான் பகுதிக்குள் சென்றுவிடும் என்ற நிலையில், இந்த விமானத்தை என்ன செய்வது என்று முடிவு எடுக்க வேண்டிய அவசர கட்டாயம், தரையில் இருந்த ரஷ்ய ராணுவத் தளபதிகளுக்கு ஏற்பட்டது.

அப்போது இந்தப் பகுதிக்கான வான் பாதுகாப்பு பிரிவின் (Soviet Far East District Air Defense Forces) தளபதியாக இருந்தவர், ஜெனரல் வாலெரி காமென்ஸ்கி. "இந்த விமானம் மீண்டும் சர்வதேச வான் பகுதிக்குள் சென்று விட்டாலும் சுட்டு வீழ்த்தலாம். ஆனால், அதற்குமுன் இந்த விமானம் பயணிகள் விமானம் அல்ல என்பதை உறுதி செய்ய வேண்டும்" என்ற முடிவை எடுத்தார்.

இவரது முடிவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், KAL007 விமானம், தப்பித்திருக்கும். காரணம், அந்த போயிங் 747 விமானம் பயணிகள் விமானம் என்று positive identification செய்யப்பட்டிருக்கும்.

ஆனால், இந்த தளபதியின் முடிவை ஓவர்ரைட் செய்தார், இவருக்கு மேலே பதவியில் இருந்த தளபதி.

அவர்தான் ஜெனரல் அனடொலி கொர்னுகோவ் (போட்டோ பார்க்கவும்). அப்போது அவர், சொகோல் வான்படைத் தளத்தின் தளபதியாக இருந்தார் (பின்னாட்களில் இவர், ரஷ்ய விமானப்படைக்கே தளபதியாக பதவியுயர்வு பெற்றார்).



கொரியன் எயார்லைன்ஸ் பயணிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்த உத்தரவிட்ட ரஷ்யத் தளபதி ஜெனரல் அனடொலி கொர்னுகோவ்

இந்த இரு தளபதிகளும் பேசிக்கொண்ட ரேடியோ உரையாடல்கள் பதிவாகியுள்ளன. சோவியத் யூனியன் துண்டு துண்டாக உடைந்து வெவ்வேறு நாடுகள் உருவானபின், சர்வதேச அழுத்தம் காரணமாக, அந்த இரு ரஷ்யத் தளபதிகளின் உரையாடல் அடங்கிய ஒலிப்பதிவு, சர்வதேச விமானப் போக்குவரத்து சபையான ICAO விடம் (International Civil Aviation Organization) ஒப்படைக்கப்பட்டது.

இதோ, அந்த உரையாடல்:

**(நேரம் 17:47) கொர்னுகோவ்:** (விமானத்தை) சிம்பிளாக அழித்து விடுங்கள். சர்வதேச கடலுக்கு மேல் பறந்து கொண்டிருந்தால்? அதாவது, விமானம் ரஷ்ய வான் எல்லைக்கு வெளியே சர்வதேச கடலுக்குமேல் பறந்துகொண்டிருந்தாலும் அழிப்பது என்று கேட்கிறீர்களா? ஆம், அழித்து விடுங்கள்!"

**காமென்ஸ்கி:** அழிப்பதற்குமுன் அந்த விமானம் யாருடையது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அது பயணிகள் விமானமாக இருந்துவிடப் போகிறது.. அல்லது கடவுளுக்குத்தான் தெரியும் அது சிவிலியன் (பயணிகள்) விமானமா என்று...

**கொர்னுகோவ்:** சிவிலியன் விமானமா? அது காம்சாட்காவுக்கு மேலாகப் பறந்திருக்கிறது. கடற்பகுதியில் இருந்து உள்ளே (ரஷ்ய வான் பகுதிக்குள்) தம்மை அடையாளம் தெரிவிக்காமல் வந்திருக்கிறது. விமானம் எல்லையை கடந்திருந்தால், அதைச் சுட்டு வீழ்த்தும்படி நான் உத்தரவிடுகிறேன்.

**காமென்ஸ்கி:** ஆனால்... சிவிலியன் விமானம் அல்ல என்பதை உறுதி செய்து கொள்ளாமலா?

**கொர்னுகோவ்:** விமானம் ரஷ்ய எல்லைக்குள் வந்ததா? சுட்டு வீழ்த்துங்கள். வெரி சிம்பிள். அவ்வளவுதான்.

இந்த உரையாடலின் முடிவில், KAL007 விமானத்தைச் சுட்டு வீழ்த்துவது என்ற முடிவு எடுக்கப்பட்டது.


விமானம் காம்சட்கா பகுதி கடற்கரையில் இருந்து 130 கி.மீ. வரை நெருங்கிய போது, ஒரு MiG-23 போர் விமானமும், மூன்று SU-15 Flagon தாக்குதல் விமானங்களும், இந்த விமானத்தை மடக்க அனுப்பி வைக்கப்பட்டன என்று எழுதியிருந்தோம் அல்லவா? இவற்றில் மூன்று SU-15 Flagon தாக்குதல் விமானங்களும் அருகில் இருந்த டொலின்ஸ்க், சொகோல் ஆகிய

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

விமானத் தளங்களில் இருந்து புறப்பட்டுச் சென்றிருந்தன. MiG-23 போர் விமானம், சிமிர்நிக் விமானத் தளத்தில் இருந்து சென்றிருந்தது.

கொரிய விமானத்தைச் சுடுவது என்று தரையில் முடிவு எடுக்கப்பட்ட நேரத்தில், இந்த 4 விமானங்களின் விமானிகளும், கொரியப் பயணிகள் விமானத்தை தமது கண்பார்வையில் தெளிவாகப் பார்க்கும் விதத்தில் பொசிஷன் செய்து வைத்திருந் தார்கள். தரையில் இருந்து உத்தரவு வந்தவுடன் சுடுவதற்குத் தயாராக இருந்தன அந்தப் பொசிஷன்கள்.

தரையில் இருந்து உத்தரவு வந்தது, "சுட்டு வீழ்த்துங்கள்"



விமானம் செப்டெம்பர் 1ம் திகதி சுட்டு வீழ்த்தப்பட்ட நிலையில், முதலில் அதை மறுத்த ரஷ்யா, செம்டெம்பர் 9ம் திகதிதான் தாம் சுட்டு வீழ்த்தியதை செய்தியாளர் மாநாட்டில் ஒப்புக் கொண்டது. அந்தச் செய்தியாளர் மாநாட்டில் மார்ஷல் நிக்கொலாய் ஒகார்கோவ்

இந்த உத்தரவு 4 விமானங்களின் ரேடியோக்களுக்கும் ஒரே நேரத்தில் கொடுக்கப் பட்டாலும், SU-15 போர் விமானங்களில் ஒன்றின் அடையாள இலக்கத்தை குறிப் பிட்டு, அந்த உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தது.

அதன் அர்த்தம் என்னவென்றால், குறிப்பிட்ட SU-15 போர் விமானம்தான், இந்த வான் தாக்குதலில் தலைமை தாங்கும் விமானமாகச் செயல்பட வேண்டும். அந்த விமானத்தைச் செலுத்திய விமானியின் உத்தரவுகளை, மற்ற 3 விமானங்களைச் செலுத்திய விமானிகளும் கேட்டுச் செயற்பட வேண்டும்.

தலைமை தாங்க உத்தரவு கொடுக்கப்பட்ட SU-15 விமானத்தை செலுத்திய விமானியின் பெயர், லெப்டினென்ட் கேர்னல் கெனாடி ஓசிபோவிச்.

இந்த விமானி, மற்றொரு விமானத்தைச் சுட்டு வீழ்த்துமுன் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை ஒன்றைப் பின்பற்றினார். இலக்கு வைக்கப்பட்ட விமானத்தின் (KAL007) கவனத்தை கவர்வதற்காக, எச்சரிக்கை வெடிகளை வானில் வெடிக்க வைத்தார்.

இந்த எச்சரிக்கை வெடிகள் என்பது, வீழ்த்தப்பட வேண்டிய விமானத்தின் மீது படாமல் அதற்கு வெளியே சுடுவது.

இதன்மூலம், விமானியின் கவனத்தை கவர்ந்து, அவரைத் தமது கட்டளைக்கு கீழ்ப்படிய வைக்க முடியுமா என்று பார்ப்பார்கள். அந்த விமானி, கட்டளைக்கு கீழ்ப்படியத் தயாராக இருந்தால், விமானத்தைச் சுட்டு வீழ்த்த மாட்டார்கள். தமது நாட்டுக்குள் கட்டாயத் தரையிறக்கல் (Forced Landing) செய்ய வைப்பார்கள்.

இந்த நடைமுறையின் மூலம், விமானத்தைச் சுட்டு வீழ்த்தாமல், விமானத்தையும் அதில் இருந்தவர்களையும் கைப்பற்ற முடியும்.



விமானத்தைச் சுட்டு வீழ்த்த உபயோகிக்கப்பட்ட K-8 ரக ஏவுகணையின் மாதிரி இதுதான்.



SU-15 விமானத்தைச் செலுத்திய விமானி கெனாடி ஓசிபோவிச் வெடித்த எச்ச ரிக்கை வெடிகளை, KAL007 பயணிகள் விமானத்தைச் செலுத்திய விமானிகள் கவனிக்கவில்லை.

அந்த நேரத்தில், அவர்கள் மற்றொரு அலுவலில் பிசியாக இருந்தார்கள். அது என்னவென்றால், அவர்களது விமானம் பாதை மாறிப் பறந்து, மீண்டும் சரியான பாதைக்குள் வந்துள்ள நிலையில், வழமையைவிட அதிக எரிபொருள் செலவாகியி ருந்தது. இதனால், எரிபொருள் பயன்பாட்டை குறைக்க வேண்டுமென்றால், விமா னத்தின் உயரத்தை அதிகரிக்க வேண்டும்.

SU-15 விமானம் எச்சரிக்கை வெடிகளை வெடித்த நேரத்தில், கொரிய விமானிகள், டோக்கியோ (ஜப்பான்) எயார் ட்ராபிக் கன்ட்ரோல் டவரைத் தொடர்பு கொண்டு பேசிக்கொண்டு இருந்தார்கள். தமது விமானத்தின் திலி (Flight Level) எனப்படும் பறக்கும் உயரத்தை அதிகரிக்க அனுமதி கேட்டுக்கொண்டு இருந்தார்கள் (அதிக உயரத்தில் பறந்தால், பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவு குறையும்).



சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் பாகங்கள் பரிசோதிக்கப்படுகின்றன.

டோக்கியோ டவரில் இருந்து அனுமதி கிடைத்தது. இதையடுத்து கொரியப் பய ணிகள் விமானம் அதுவரை பறந்து கொண்டிருந்த லெவலில் இருந்து, உயரத் தொடங்கியது. விமானம் உயர வேண்டுமானால், அதற்கு மேலதிக சக்தி தேவை. அந்த சக்தி விமானத்தின் வேக சக்தியில் இருந்து எடுத்துக் கொள்ளப்படும். அதா வது, விமானம் உயரும்போது, அது சென்று கொண்டிருக்கும் வேகம் குறையும்.

இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்த தயாராக பொசிஷன் பண்ணிவிட்ட நிலையில் பறந்து கொண்டிருந்த SU-15 விமானத்தைச் செலுத்திய விமானி கெனாடி ஓசி போவிச், தமக்கு முன்னால் பறந்து கொண்டிருந்த KAL007 விமானம், வேகம் குறைவதையும், உயரத்தை அதிகரிப்பதையும் பார்த்தார். (இதற்குள் KAL007 விமா னம், ரஷ்ய வான் பகுதியை விட்டு வெளியே வந்து சர்வதேச கடலின்மேல் பறக்கத் தொடங்கியிருந்தது).

விமானத்தின் உயரம் அதிகரிக்கப்படுவதைப் பார்த்த அவர், அந்த விமானம் தப்பிச் செல்வதற்காகவே உயரத்தை அதிகரிப்பதாக நினைத்தார் (இதைப் பின்னாட்களில் பேட்டி ஒன்றில் தெரிவித்தார் அவர்). இனியும் தாமதிக்காமல், சுட்டு வீழ்த்துவது என்ற முடிவை எடுத்தார்.

SU-15 விமானத்தில் இருந்து இரு ஏவுகணைகள், கொரியப் பயணிகள் விமா னத்தை நோக்கி ஏவப்பட்டன. இரு ஏவுகணைகளும் கலினின்கிராட் K-8 வானில் இருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைகள்.

அடுத்த சில விநாடிகளில் இந்த ஏவுகணைகள் கொரியன் எயார்லைன்ஸின் தடம் இலக்கம் KAL007 பயணிகள் விமானத்தை 18:26 மணிக்கு வானில் வைத்து சிதறடித்தன! விமானத்தில் இருந்த 269 பேருடன் ஜப்பானியக் கடலில் வீழ்ந்தது, அந்த போயிங் 747 விமானம். (முற்றும்)

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!



# புலிகளைத் தாக்க இலங்கை ராணுவத்துக்கு வந்த ஆயுதங்களைத் திசை திருப்பிய வெளிநாட்டு உளவுத்துறை!



ராணுவம் பயன்படுத்திய செக் தயாரிப்பு பல்குழல் ரொக்கெட் லோஞ்சர்கள் (RM70)

இறுதி யுத்தம் நடந்த காலப்பகுதியில், புதுக்குடியிருப்பைக் கைவிட்டுப் பின்வாங்கினால், புலிகளால் மீண்டும் புதுக்குடியிருப்பைக் கைப்பற்ற முடியாது என்பது, தீபனுக்குத் தெரியும் எனக் கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம். தீபனுக்கு மட்டுமல்ல, யுத்தமுனையில் இருந்த அனைவருக்குமே இந்த யதார்த்தம் தெரியும்.

ஏன் புலிகளால் மீண்டும் புதுக்குடியிருப்பைக் கைப்பற்ற முடியாது?

புலிகள் கைவிட்டுப் பின்வாங்கிய நகரங்களை, மீண்டும் புலிகள் திரும்பி வந்து கைப்பற்ற முடியாதபடி வைத்திருக்க ராணுவம் பயன்படுத்திய முக்கிய ஆயுதம், MBRL எனப்படும் பல்குழல் ரொக்கெட் லோஞ்சர்கள்.

MBRL என்பதன் விரிவாக்கம், Multi Barrel Rocket Launcher. அருகருகே உள்ள குளாய்களில் (பரல்களில்) இருந்து கடகடவென ரொக்கெட்டுகள் ஒரே நேரத்தில் சீறிப் பாயும். எதிர்த் திசையில் இருந்து புலிகள் முன்னேற முயன்றால், MBRLல் இருந்து வெளியேறும் ராக்கெட்டுகள் மழை போலப் பொழியும். ராணுவம் நடத்திய இந்த MBRL காரணமாகவே, புலிகளால் தாம் கைவிட்டுப் பின்வாங்கிய எந்தவொரு நகரத்துக்கும் மீண்டும் திரும்பி வந்து கைப்பற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

இறுதி யுத்தத்தின்போது, புலிகளை முன்னேற விடாமல், தொடர்ந்து பின்வாங்க வைக்க இலங்கை ராணுவம் பயன்படுத்திய MBRLகள் செக் குடியரசு நாட்டினால் வழங்கப்பட்டவை.

செக் குடியரசில் இருந்து இந்த MBRLகள் இலங்கைவரை வந்துசேர்ந்து, இறுதி யுத்தத்தின்போது பயன்படுத்தப்பட்டதற்கும் ஒரு பின்னணி உண்டு. இலங்கையில் யுத்தம் நடந்த நாட்களில் 'அதி ரகசியம்' என வைக்கப்பட்டிருந்தது இந்த விவகாரம். இப்போது இதில் ரகசியம் கிடையாது. எனவே, தொடரின் இந்தப் பகுதியில் அவற்றை தந்துவிடலாம். இல்லாவிட்டால், இவை தவறவிடப்பட்டு விடும்.

இந்த MBRL விவகாரத்தின் பின்னணியை சொல்கிறோம், பாருங்கள்.

இறுதி யுத்தத்தின்போது புலிகளின் விமானங்கள் வீழ்த்தப்பட்டது பற்றி ஏற்கனவே எழுதிவிட்டோம். அது நடப்பதற்கு சில வாரங்களுக்கு முன், கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

அந்தச் செய்தி – "புலிகளின் வான்புலிகள் பிரிவின் விமானங்களை தாக்கி அழிப்பதற்கு செக் குடியரசு ஆயுதங்களையும், இதர உதவிகளையும் வழங்குகின்றது."

சிங்களப் பத்திரிகை ஒன்றில் மிகச் சிறிய செய்திக் குறிப்பாக வெளிவந்த இந்தச் செய்திக்குப் பின்னால், அதி முக்கியமான அதே நேரத்தில் மர்மநாவல் போன்ற ஒரு விறுவிறுப்பான பின்னணி இருக்கும் என்று அந்தச் செய்திக் குறிப்பை வெளியிட்ட சிங்களப் பத்திரிகைக்கே தெரிந்திருக்குமோ தெரியாது.

இந்த விவகாரத்தை இலங்கையின் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு உள்ளேயும், இலங்கைக்கு வெளியேயுள்ள சில தொடர்புகளிலும் விசாரித்தபோது, தெரியவரும் விபரங்கள் ஆச்சரியமானவை. அதுமட்டுமன்றி, இந்த விவகாரத்தில் ஒரு வெளிநாட்டின் உளவுத்துறை சம்மந்தப்பட்டிருப்பதும் தெரியவருகிறது.

விபரங்களை முழுமையாகப் பார்க்கலாமா?

நாம் மேலே குறிப்பிட்ட செய்தி வெளியாகியது, லக்பிம என்ற சிங்களப் பத்திரிகையில். இலங்கை பாதுகாப்பு அமைச்சில் இருந்து ஏதோ ஒரு வகையில் லீக் பண்ணப்பட்ட தகவலின் அடிப்படையில் லக்பிம இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது. ஆனால், முழுமையான தகவல்களும் கிடைக்காத (அல்லது கிடைத்தாலும் பிரசுரிக்க முடியாத) காரணத்தால் சிறிய பெட்டிச் செய்தியாக வெளியானது.

லக்பிம பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டவுடன், மற்ற மீடியாக்களின் ராணுவ ஆய்வாளர்கள் இதுபற்றி விபரம் அறிய முயன்றபோதுதான், பாதுகாப்பு அமைச்சு விழித்துக் கொண்டது. உடனே வாயை இறுக மூடிக் கொண்டது. அத்துடன் லக்பிமவை தொடர்புகொண்ட பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியொருவர், அவர்களுக்கு இதுபற்றி மேலும் ஏதாவது தகவல் தெரியுமா என்று விசாரித்தார். இனி இதுபற்றி லக்பிமவில் செய்தி வெளியிட வேண்டாம் என்றும் கூறினார்.

அத்துடன் அப்போது அந்த விஷயம் அடங்கிப் போனது. இப்போது அதுபற்றிய முழுமையான தகவல்களைப் பார்க்கலாம்.

இந்த MBRL டீல், மற்றொரு 'பெரிய' நாடு ஒன்றால்தான் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. Þ¬ö 'ஒருவித அதிஷ்டமாக' இலவசமாகவே இலங்கைக்கு கிடைத்தன.

நாம் குறிப்பிடும் 'பெரிய நாடு' புலிகள் விமானங்களை பயன்படுத்துவதில் அப்செட் ஆகியிருந்தது. அதையடுத்து, வான்புலிகள் பற்றிய உளவுத்துறை அறிக்கை ஒன்றை இலங்கை அரசுக்கு கொடுத்தது, அந்த பெரிய நாட்டு உளவுத்துறை.

வான்புலிகள் பற்றி அந்த வெளிநாட்டு உளவுத்துறை கொடுத்த விலாவாரியான உளவு அறிக்கையில் எவ்வளவு துல்லியமாக விஷயங்கள் இருந்தன தெரியுமா? இதோ பாருங்கள் அந்த விபரங்களை (புலிகள் இயக்கத்துக்குள் இருந்து 'உள் வீட்டு' தகவல்கள் அந்த பெரிய நாட்டு உளவுத்துறைக்குப் போயிருக்க வேண்டும்):

• வான்புலிகளிடம் குறைந்தபட்சம் 2 முதல் அதிகபட்சம் 4 இலகு ரக விமானங்கள் இருக்கலாம். இவற்றில் இரு விமானங்களில் நிச்சயமாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட Bomb Racks பொருத்தப்பட்டுள்ளன, அல்லது தயாரிக்கப்பட்டு, பொருத்தப்படாத நிலையில் உள்ளன. (Payload அதிகமானால் Fuel Tank மட்டுப்படுத்தப்படும் என்ற காரணத்தால்)

• வான்புலிகளின் விமானங்கள் தாக்குதலுக்கு அனுப்பப்படும்போது, பெரும்பாலும் ஜோடியாக (இரண்டு விமானங்களாக) அனுப்பப்படுவதன் காரணம், ஒரு விமானம் வழிகாட்டியாகவும், மற்ற விமானம் குண்டுவீசும் விமானமாகவும் செயற்படுகின்றன.

இதிலிருந்து இந்த விமானங்களில் TIG (Target Identification System) கிடையாது அல்லது அதை உபயோகிப்பதில் வான்புலி விமானிகளுக்கு போதிய பயிற்சி இல்லை என்று எடுத்துக் கொள்ளலாம். (யுத்தம் முடிந்தபின் இது பற்றி தெரிய வந்த விபரத்தின்படி, வான்புலி விமானங்களில் TIG இருக்கவில்லை)

• வான்புலிகளின் முதலாவது தாக்குதலின் போது வழிகாட்டல் விமானத்தைச் செலுத்திய விமானி ஒரு, அவுஸ்திரேலியப் பிரஜை. அவுஸ்திரேலிய பிளையிங் கிளப் ஒன்றில் காலநிலை அபாய மீட்பு பறத்தல்களுக்காக வழிகாட்டும் Guiding Piloting பயிற்சி பெற்ற இவர் 2004ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இருந்து அவுஸ்திரேலியாவில் இல்லை. அவுஸ்திரேலியாவில் இருந்தவரை இவர் TIG பயிற்சி பெற்றதாக பதிவுகள் இல்லை.

• வான்புலிகளிடம் இருக்கும் இலகு விமானங்களில் அமைக்கப்பட்டுள்ள குண்டு வீசும் தொழில்நுட்பம், விமானத்தின் தயாரிப்பு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதல்ல – உள்ளூர் தயாரிப்பு. இதிலுள்ள குறைபாடு என்னவென்றால் இது ஒரு குண்டு தள்ளப்படும் (Bomb Ejecting) தொழில்நுட்பம் அல்ல. குண்டை வெளிப்படுத்தும் (Bomb Releasing) தொழில்நுட்பம். ஒரு விதமான ஹைட்ரோலிக் அற்ற லீவரினால் குண்டு ரிலீஸ் பண்ணப்பட்டு கீழே விழவைக்கப்படுகின்றன. அதாவது குறிப்பிட்ட இலக்கின்மீது குண்டு வீசப்படுவதில்லை. குறிப்பிட்ட இலக்கின் மேல் பறந்து, குண்டு உதிர வைக்கப்படுகின்றது.

• 2006ம் ஆண்டு இறுதியில் கிழக்கு ஐரோப்பிய நாடு ஒன்றில் வெளிநாட்டுத் தமிழர் ஒருவரால் Hydraulic Bomb Ejecting உபகரணங்கள் சில வாங்கப்பட்டன. அவை துபாய் ஊடாக, தென்கிழக்காசிய நாடு ஒன்றுக்கு, அனுப்பி வைக்கப்பட்டன. தென்கிழக்கு ஆசிய நாட்டில் இருந்து வன்னி சென்று சேர்ந்தனவா, அல்லது, கடலில் மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் ஆயுதக்

அடுத்த பக்கம் பாருங்கள் ➡

கப்பல்களுடன் மூழ்கடிக்கப்பட்டனவா என்பது தெரியவில்லை (தற்போது தெரிய வந்துள்ள தகவல்களின்படி, இந்த உபகரணங்கள், மூழ்கடிக்கப்பட்ட கப்பல் ஒன்றில் இருந்தன. கடலுக்கு அடியே சென்று விட்டன)

வெளிநாட்டு உளவு நிறுவனம் ஒன்றிடம் இருந்து மேற்படி விபரங்களுடன் உளவு அறிக்கை கிடைத்தவுடன், இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் உஷாராகியது. விமான நிலையத்திலும் துறைமுகத்திலும் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அதீத கவனம் செலுத்தத் தொடங்கியது. மேற்கொண்டு விமான உதிரிப் பாகங்கள் நாட்டுக்குள் வராமல் செய்வதுதான் இதன் நோக்கம்.

இலங்கை சுங்க இலாகாவுக்கு பாதுகாப்பு அமைச்சிலிருந்து அனுப்பப்பட்ட மெமோ ஒன்றில், இரும்பு, அலுமினியம், உருக்கிரும்பு அல்லது கடின பிளாஸ்டிக் பாகங்களை உடைய சகல எந்திர உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப் படும் போதும் பாதுகாப்பு அமைச்சினால் கிளியர் செய்யப்பட்ட பின்னரே கஸ்டம்ஸ் கிளியரன்ஸ் செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

வழமையாக துணி தயாரிப்பு எந்திர உதிரிப் பாகங்களுக்கு இப்படியான சந்தர்ப்பங்களில் விதிவிலக்கு கொடுக்கப்படும். இம்முறை அதுவும் கொடுக்கப்படவில்லை. இந்த உளவு அறிக்கையை இலங்கைக்கு கொடுத்த 'பெரிய நாட்டு' உளவுத் துறையிடம் இலங்கை அரசு வைத்த கோரிக்கை, "வான் புலிகளின் விமானங்களை வீழ்த்துவதற்கு ஆயுதங்களைத் தாருங்கள்"

அரசியல் காரணங்களுக்காக விமான எதிர்ப்பு ஆயுதங்களை இலங்கைக்கு தர முடியாது என கூறிவிட்ட அந்த நாடு, "ஆனால், உங்களுக்கு தேவையான ஆயுதங்களை எங்கே பெற்றுக் கொள்ள முடியும் என சொல்கிறோம். உங்களுக்காக நாங்களும் அவர்களிடம் பரிந்துரை செய்கிறோம். அவர்களிடம் கேளுங்கள், கிடைக்கும்" என்று வழியை காட்டியது.



புலிகள் பயன்படுத்திய பல்குழல் ரொக்கெட் லோஞ்சர்
(யுத்தம் முடிந்தபின் கரையமுள்ளிவாய்க்காலில் கிடைத்தவை)

பெரிய நாடு கைகாட்டிய மற்ற நாடுதான், – செக் குடியரசு!

இது, விமான எதிர்ப்பு ஆயுதங்கள் தொடர்பான விவகாரம் அல்லவா? இதற்கும், இலங்கை அரசு பயன்படுத்திய MBRL எனப்படும் பல்குழல் ரொக்கெட் லோஞ்சர்களுக்கும் என்ன தொடர்பு?

தொடர்பு உள்ளது. அத்துடன் அந்த MBRLகள் எப்படி 'ஒருவித அதிஷ்டமாக' இலவசமாகவே இலங்கைக்கு கிடைத்தன என்ற சுவாரசியமான விஷயமும் உள்ளது.

இறுதி யுத்தத்தில் புலிகளுக்கு மிகப் பெரிய அழிவைக் கொடுத்த MBRL விவகாரம் பற்றி முழுமையாகத் தெரிய வேண்டுமென்றால், அதற்கு இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இருந்து சற்றே பின்னோக்கிப் போகவேண்டும். அந்த விவகாரத்தை ஒரு தனிக் கட்டுரையாகத் தரலாம் என்றே முதலில் நினைத்திருந்தோம். ஆனால், இந்தத் தொடரில் அந்த விபரங்களையும் எழுதினால்தான் புரிவது சுலபமாக இருக்கும் என்பதால், இந்தத் தொடருடன் இணைத்துள்ளோம்.

இந்த MBRLகள் ராணுவத்துக்கு இரு முக்கிய சந்தர்ப்பங்களில் கிடைத்தன. முதல் தடவை இலங்கை ராணுவத்துக்கு MBRLகள் கொடுக்கப்பட்ட போது, மற்றொரு நாட்டின் உளவுத்துறை, 'புகுந்து விளையாடிய கதை' ஒன்றும் உள்ளது. இலங்கை ராணுவத்துக்குக் கிடைத்த MBRL எனப்படும் பல்குழல் ராக்கெட் லோஞ்சர்கள் உரிய நேரத்தில் இலங்கை வரை வந்து சேராமல் தடுப்பதற்கு அந்த வெளிநாட்டு உளவுத்துறை ஒரு காரியத்தைச் செய்தது.

அந்த வெளிநாட்டு உளவுத்துறை பற்றித் தமிழ் ஊடகங்களில் யாரும் எழுதியதாக ஞாபகமில்லை.

நாம் குறிப்பிடும் அந்த உளவுத்துறையின் பெயர், Etterretningstjenesten. சுருக்கமாக, E-tjenesten என்று அழைப்பார்கள். ஆங்கிலத்தில் NIS என்பார்கள். அது தான், நோர்வேயின் ராணுவ உளவுத்துறை!

அந்த விவகாரம் பற்றியும் சுருக்கமாக இப்போது கூறிவிடலாம். தொடரின் வேறு அத்தியாயம் ஒன்றில் அதை விரிவாகப் பார்க்கலாம்.

இது நடைபெற்றது இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் அல்ல. சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன், 2000ம் ஆண்டு, இலங்கை ராணுவத்துக்கு MBRLகள் அவசரமாகத் தேவைப்பட்டன. ஒரு 'ஏற்பாட்டால்' அவை இலங்கைக்குக் கிடைத்தன.

அவற்றை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட விமானம், இலங்கை வரை வந்து சேரவே இல்லை. வேறு எங்கோ கொண்டுபோய் இறக்கிவிட்டுப் போய்விட்டது!

ஆயுதங்கள் எங்கே என்று தேடத் தொடங்கி விசாரித்தபோதுதான், விமானத்தைத் திசை திருப்பிய கைங்காரியத்தைச் செய்தது நோர்வே நாட்டு உளவுத்துறை E-tjenesten என்று தெரியவந்தது. கொழும்புக்கு வரவேண்டிய MBRLகள் கொண்டு போய் இறக்கப்பட்ட நாடு எது தெரியுமா? அஸபாய்ஜான்!

பின்னர் ராஜதந்திர முயற்சிகள் செய்யப்பட்டு அந்த ஆயுதங்கள் கொழும்பு வந்து சேர்ந்தன. யுத்தத்தில் ராணுவத்தால் பயன்படுத்தப்பட்டன.

கொஞ்சம் குழப்பமான அந்த விபரங்களுக்குள் போவதற்குமுன், நாம் குறிப்பிட்ட 'பெரிய நாடு' இலங்கைக்கு செக் குடியரசின் பக்கமாகக் கையைக் காட்டி விட்டதையடுத்து, செக் குடியரசுடன் இது தொடர்பாகப் பேசும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

2000ம் ஆண்டு ஏப்ரல் 12ம் திகதி, இலங்கை ராணுவத்தின் மேஜர் ஜெனரல் ஏ.கே. சூரியபண்டார (இவர்தான் அப்போது ராணுவத்தின் ஆயுதக் கையிருப்பு மற்றும் ஆயுதச் சேகரிப்புக்குப் பொறுப்பான AMGO - Army's Master General Ordnance- பதவியில் இருந்தவர்) டில்லியில் உள்ள செக் குடியரசின் தூதரகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பினார்.

இலங்கையில் செக் குடியரசுக்குத் தூதரகம் இல்லாத காரணத்தால், இலங்கைக்கு அருகில் உள்ள நாடான இந்தியாவில் உள்ள செக் குடியரசின் தூதரகத்துக்கு ஆயுதங்கள் தொடர்பான அந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தக் கடிதம் புதுடில்லி சென்றதையடுத்து, புது டில்லி செக் குடியரசுத் தூதரகத்தில் இருந்து இரு உயரதிகாரிகள் கொழும்பு வந்து இறங்கினார்கள்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த நிலையில், செக் குடியரசின் தூதரக உயரதிகாரிகள் இருவர் டில்லியில் இருந்து கொழும்புக்குச் சென்றதைக் கவனித்த இந்திய உளவுத்துறை 'றோ', "ஆஹா... மர்மமாக ஏதோ நடக்கிறது" என்பதைப் புரிந்து கொண்டது. உடனே, விபரங்களை அறிய தமது உளவாளிகளைக் களத்தில் இறக்கி விட்டது.

செக் குடியரசு தூதரக அதிகாரிகள் கொழும்பில் முதல்கட்டப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு மீண்டும் புதுடில்லி திரும்பிய நிலையில், இலங்கை ராணுவத்தின் அப்போதைய பிரதான தளபதி லெப்டினெண்ட் ஜெனரல் லால் வீரசூரிய, ராணுவத்தின் சார்பில் தமது நம்பிகைக்குரிய ஒருவரை செக் குடியரசுக்கு அனுப்பி, ஆயுதங்களைப் பரிசோதிக்கவும், அவற்றை இயக்குவதற்கான பயிற்சிகளை செக் குடியரசு நாட்டிலேயே ஏற்பாடு செய்யவும் அரசிடம் அனுமதி கோரினார்.

அனுமதி கிடைத்தது. செக் குடியரசுக்கு அனுப்புவதற்காக லெப்டினெண்ட் ஜெனரல் லால் வீரசூரியவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், பிரிகேடியர் சனத் கருணாரட்ன. இவர் அப்போது கொழும்பிலுள்ள ராணுவத் தலைமையகத்தில் பயிற்சிகளுக்கான இயக்குனர் என்ற பதவியில் இருந்தார்.

இவரது தலைமையில் ராணுவத்தின் ஆட்டிலரிப் பிரிவைச் சேர்ந்த (லெப்டினெண்ட் ஜெனரல் லால் வீரசூரிய, நாட்டின் ராணுவத் தளபதியாவதற்கு முன் ஆட்டிலரிப் பிரிவில்தான் பணிபுரிந்தார்) மூன்று ராணுவ அதிகாரிகள் செக் குடியரசு நாட்டின் பிராக் நகரில் போய் இறங்கியதை, இந்திய உளவுத்துறை 'றோ' கவனித்துக் கொண்டிருந்தது.

இந்தியர்களுக்கு விஷயம் புரிந்து விட்டது.

அதன்பின் இந்தியா ஒரு தந்திரமான காரியத்தைச் செய்தது. இந்த MBRLகளை இலங்கை எப்படி இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற தந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தது டில்லி. அதை இந்தத் தொடரின் அடுத்த பாகத்தில் படியுங்கள்... **(தொடரும்)**

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!



# பாரத் ஏக்.. தோ..

## (இந்தியா: ஒன்று.. இரண்டு)

இந்தியாவின் மகா மெகா செல்வந்தர்கள் வசிக்கும் பகுதிகள் இருப்பது மும்பாய் நகரின் வடக்குப் பகுதியில். அவர்கள் அனைவரையும் தூக்கிச் சாப்பிட்டுவிடக்கூடிய பெரிய பணக்காரர் ஒருவர் வசிப்பது, மும்பை நகரின் தெற்குப் பகுதியில். அவர் வசிப்பது வீடு அல்ல, மாளிகை. பிரிட்டனின் பக்ஹிங்காம் அரன்மனைக்கு அடுத்த இடத்தில் இந்த மாளிகையின் மதிப்பு உள்ளதாகப் புள்ளிவிபரம் சொல்கிறது.

இந்த மாளிகையில் நடைபெற்றது ஒரு விருந்து. விருந்துக்கான ஏற்பாடுகள் ஏகத் தடபுடலில் நடந்திருப்பதன் காரணம், விருந்து கொடுப்பவர் இந்தியாவின் பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் முகேஷ் அம்பானி!

விருந்தில் பிரதான உணவுக்குமுன், அப்பிடைசராகப் பரிமாறப்பட்டது ஒரு சராசரி இந்தியனுக்கு இது என்ன பொருள் என்றே தெரிந்திராத விலையுயர்ந்த Caviar (ஒரு வகை மீன் சினை).

அதைவிடஇத்தாலிய வைன், பிரெஞ்ச் கொனியாக், மூன்று கோஸ் மெயின் டிஷ் என்று பொறிபறந்து கொண்டிருந்த அந்த விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தவர்கள் இந்தியாவின் அதியுயர் மட்டம்!

விருந்தை இப்போதைக்கு விட்டுவிடுவோம். இந்தத் தெற்கு மும்பையிலிருந்து 200· கிலோ மீட்டர் நீங்கள் பயணம் செய்தால், பாட்டீல்படா என்ற கிராமத்தை அடையலாம். மும்பாயின் பணக்காரர்கள் வசிக்கும் பகுதிகளின் பளபள வனப்புக்கு எதிரான காட்சிகளை இந்தக் கிராமத்தில் திரும்பிய இடமெல்லாம் காணலாம். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஒரு குழந்தை, வற்றிய வயிற்றுடனும், குச்சியான காலுடனும் இருக்கிறது.

கிராமத்துப் பள்ளி ஆசிரியர் தேவிதாஸ், "இந்த ஆண்டு இதுவரை இந்த ஏரியாவைச் சேர்ந்த ஏழு குழந்தைகள் பட்டினியால் இறந்து விட்டனர்" என்கிறார்.

அருகில் உள்ள மற்றொரு பகுதியில் 30 குழந்தைகள் இவ்வாறு இறந்துள்ளனர்.

அதேபோல் ஜவஹர் பகுதி மருத்துவமனையில் நோயாளிகளின் சேர்க்கை குறித்த அறிவிப்பு கரும்பலகையில் எழுதியிருப்பதையும் பாருங்கள். அதில் எழுதியிருப்பதன்படி, இந்த மருத்துவமனைக்கு 23 குழந்தைகள் கிரேட்-3 ஊட்டச்சத்துடன் வந்துள்ளனர்.


மருத்துவப் பரிபாஷையில் 'கிரேட்-3' என்பதற்கு அர்த்தம் என்னவென்றால், அந்தக் குழந்தைகள், சாரசரி நிறையில் 50 முதல் 60 சதவீதம் வரைதான் இருக்கின்றன. மருத்துவமனையின் மற்றொரு ஆவணத்தில், 15 குழந்தைகள் சராசரி நிறைக்கு 50 சதவீதத்தைவிடவும் குறைவாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட ஒரு வருட காலப்பகுதியில் 9,245 குழந்தைகள், இந்தியாவின் பொருளாதார தலைநகரான மும்பையை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் இறந்துள்ளதாக அதிகாரபூர்வ புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் குழந்தைகள் யாரும் பட்டினியால் சாகவில்லை என மஹாராஷ்டிரா மாநில அரசாங்கம் மறுத்திருக்கிறது. ஆனால் மருத்துவர்கள் தனிப்பட்ட முறையில் கருத்து கூறும்போது, அதிகாரிகளின் நிர்பந்தம் காரணமாக இறப்பிற்கான காரணத்தை மாற்றி எழுத வேண்டியுள்ளது என்கின்றனர்.

பாட்டீல்படா கிராமத்துக்கு மீண்டும் போகலாம். இங்கு வசிக்கும் ஜேய் பாம்புரி என்பவருக்கு, ஒரு வயதில் இரட்டைக் குழந்தைகள் உண்டு.

"எனது இரட்டைக் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கூட கொடுக்க முடியவில்லை. இந்தக் குழந்தைகள் பாலை உறிஞ்சுவதற்குகூட சக்தியில்லாமல் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கின்றன. நாங்கள் குழந்தைகளை எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்றோம். மருத்துவமனையில் இதெல்லாம் பதிவானால் அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய சங்கடத்தைத் தவிர்க்க, அவர்கள் எங்களை விரட்டி விட்டனர்" என்கிறார் அவர்.

மருத்துவமனையில் உள்ள மருத்துவர் மாரட் ரேண்டாஸ், உள்ளூர் மக்கள் தொகையில் 15 சதவீதம் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையுடன் இருப்பதாக மதிப்பிடுகிறார். "நீங்கள் வசிக்கும் கிராமத்திலிருந்து அதிக தொலைவில் இல்லாத மும்பை நகரம், வேறுமாதிரியான உலகமாக இருக்கிறதே?" எனக் கேட்டால், "அதுதான்




இந்தியப் பணக்காரர்களுக்காக இயக்கப்படும் சொகுசு ரெயில் மகாராஜா எக்ஸ்பிரஸின் வெளிப்புறமும், உட்புறமும்.

அடுத்த பக்கம் பாருங்கள் →



இந்தியப் பாமர மக்களுக்கான சாதாரண ரெயிலின் வெளிப்புறம். மன்னிக்கவும் உட்புறத்தைப் படம் எடுக்க உள்ளே ஏற முடியவில்லை!

இந்தியா" என்கிறார். இந்தப் பெரிய வேறுபாடுதான், இந்தியாவை இருவேறு நாடுகளாகப் பிரிக்கிறது எனச் சிலர் எண்ணுகின்றனர்.

பேராசிரியர் வனாய்க், "ஏழ்மையின் பாலைவனத்தில் ஒரு மூலையில் செல்வம் கொழிப்பது, ஒழுக்கக் கேடானது மட்டுமல்ல, மக்களை ஆத்திரமூட்டும் காட்சியும்கூட" என இந்தியாவின் எதிர்காலம் பற்றிய கவலையுடன் கூறுகிறார்.

இந்தக் கிராமமும், இதற்கு முன் நாம் பார்த்த மும்பை நகரமும் இருக்கும் மகாராஷ்டிர மாநிலத்தில் ஆட்சி மாறியதற்குக் காரணமே இதுதான்.

மகாராஷ்டிர மாநிலத்தைக் கடந்த காலத்தில் ஆட்சிசெய்த காங்கிரஸ் கட்சியின் அரசை மக்கள் தோற்கடிக்கக் காரணம் என்ன தெரியுமா? அதன் சட்டசபை உறுப்பினர்கள் மட்டும் செல்வத்தில் கொழித்ததுதான். அதனால், ஏற்பட்ட ஆத்திரத்திலேயே மக்கள் அந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பினார்கள் என ஊடகங்கள் தெரிவிப்பதை வனாய்க்கும் ஆமோதிக்கிறார்.

மராத்தி மொழி பேசும் அந்த மாநிலத்தில் இப்போது நடப்பது, பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான ஆட்சி.

அதீத ஏழ்மை ஒருபுறம், அதிகப்படியான செல்வம் மறுபுறம் என்று இருக்கும் இரண்டு இந்தியாவிற்கும் இடையேயான இடைவெளியைக் குறைப்பதுதான், தங்களின் உயர் முன்னுரிமை என பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையிலான மத்திய அரசின் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

நல்ல நோக்கம்தான். ஆனால் அது நடைமுறையில் எவ்வளவுக்குச் சாத்தியமாகியுள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள, பாட்டீல்படா போன்ற சில கிராமங்களுக்குத்தான் செல்லவேண்டும்.

அதுவும், மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கட்சி (பாரதீய ஜனதா) ஆட்சி புரியும் நிலையில், மாற்றம் ஏற்படுவதில் தாமதம் ஏன்?

வளம் கொழிக்கும் மற்றும் வறுமையில் வாடும் இரண்டு இந்தியாக்களிடையே இருக்கும் வித்தியாசங்கள் கிராம மக்களிடையே கோபத்தை அதிகரிக்க வைக்கும் போதுதான், கிராம அளவில் தீவிரவாதம் செல்வாக்குப் பெறுகின்றது. இந்தியாவில் நக்சலைட் இயக்கத்தினர் உருவாகுவதும் இப்படித்தான்.

தீவிரவாதம் பேசும் நக்சலைட் இயக்கத்தினரின் கொள்கைகளில் ஒன்று, நகரமயமாக்கல் மற்றும் நகர வளர்ச்சிக்கு எதிராக, மத்திய கிராமப்புற இந்தியாவில் தனி ராஜ்ஜியம் அமைப்பது!

தற்போது இந்தியாவில் 10,000 நக்சலைட்கள் அல்லது தீவிர ஆதரவாளர்கள் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. "இவர்கள் வலிமையான தீவிரவாதிகளாக உருவாகியிருப்பதே இரு இந்தியாக்களிடையே அதிகரித்து வரும் அதிருப்திக்கு ஒரு உதாரணம்" என வனாய்க் குறிப்பிடுகிறார்.

கிராமப்பகுதிகளில் அதிருப்தி அதிகரித்து வருகிறது. இளைஞர்கள் மத்தியில் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. வெளியேயுள்ள செல்வச் செழிப்பைப் பார்க்கும் அவர்கள், அது போன்ற வாழ்க்கையை அடைய வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால், அதற்காக முயற்சிகளைச் செய்யும் போதுதான் இந்தச் செழுமை தங்களுக்கு கிடைக்கப்போவதில்லை என்பதை உணர்ந்து கொள்கின்றனர்.

உடனே நிலைமை தலைகீழாகி கோபம் வெடித்துக் கிளம்புகிறது. தீவிரவாதிகள் உருவாகிறார்கள்.

இந்தியாவின் முதலிட பணக்காரர் முகேஷ் அம்பானியும், இதை ஒப்புக் கொள்கிறார். "இந்தியாவின் புதிய பணக்காரர்கள், செல்வத்தை எப்படி பரவலாக்கலாம் என்பதை உணர்ந்து கொண்டால், இது போன்ற குழப்பங்கள் முடிவுக்கு வரும்" என்று அவராகவே ஒப்புக்கொள்கிறார்;

"இந்தியாவில் கூட்டு நலன் என்று எதுவும் இல்லை. சுயநலன்கள் மட்டுமே இருக்கின்றன" என்பதும் அவரது கூற்றுத்தான்!

இதில் ஒரு சிலர் விதிவிலக்காகவும் இருக்கின்றனர்.

உதாரணமாக, பாலிவுட் நடிகர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்களில் சிலர் தமது வருமானத்தில் சிறு பகுதியை ஏழைகளுக்கான திட்டங்களில் செலவு செய்கின்றனர். இவை விளம்பர நோக்கத்துக்காகச் செய்யப்படும் காரியம் என்று ஒரு குற்றச்சாட்டு இருந்தாலும், சில உதவிகள் ஏழைகளைச் சென்றடைகின்றன. இவர்களைப் பார்த்து வேறு சிலரும் உதவி செய்ய முன்வருகின்றனர்.

ஆனால் இரண்டு இந்தியாவுக்கும் இடையிலுள்ள மிகப்பெரிய பாதாளத்துக்கு, இப்படியான சிறிய உதவிகளால் மாத்திரம் பாலம் கட்ட முடியாது. அதற்குத் தேசிய அளவில் விழிப்புணர்வு தேவை.



மும்பையில் முகேஷ் அம்பானியின் வீடு (வலது புறமுள்ள பெரிய பில்டிங் முழுவதும் ஒரே வீடு!)

இந்தியாவின் உண்மையான தேசிய வருவாயில் கிட்டத்தட்ட பாதியளவு பணம் வரி ஏய்ப்புச் செய்யப்படுவதாக வரித்துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

வரிப்பணத்தை வைத்துத்தான் எந்தவொரு அரசாங்கமும் அதன் ஏழை மக்களுக்கு தரமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறது.

இந்தியாவின் பணக்காரச் சமூகத்துக்கு இந்த இரட்டை இந்தியாவை மாற்றும் உண்மை நோக்கம் எந்தளவுக்கு இருக்கிறது?

ஆச்சரியகரமான ஒரு தரவைப் பாருங்கள். இந்தியாவில் ஏழைகளுக்கான நலத்திட்டங்களுக்குப் பெருமளவில் நன்கொடை அளிப்பதில், கோடீஸ்வர இந்தியர்களைவிட அமெரிக்காவின் பில் கேட்ஸ்தான் முன்னணியில் இருக்கிறார்.

ஏழைகளுக்கு கொடுப்பது என்பது, அவர்களுக்கு பணம் மட்டும் கொடுப்பது என்று அர்த்தமல்ல. செல்வந்தர்களாக இருப்பதைவிட, அந்தச் செல்வத்தை எப்படிச் செலவிட வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருந்தார் என்று முன்பு ஒருவரைக் குறிப்பிட்டார்கள்.

அவரது பெயர், சுப்ரதா ராய். இவர் யார்?

1978ம் ஆண்டு வெறும் 2500 ரூபா முதலீட்டில் ஒரு சேமிப்புத்

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

திட்டத்தை ராய் தொடங்கினார். அதன்பின் அவருடைய சஹாரா நிறுவனத்தின் சொத்து மதிப்பு 11 பில்லியன் டொலர் என்று மாறியது.

இவரும் பணக்காரர்களுக்கே உரித்தான ஆடம்பர வாழ்க்கைதான் வாழ்ந்தார். லக்னோவில் உள்ள ஆடம்பரமான அரண்மனையில்தான் ராய் வசித்தார். செயற்கையான நீர்வீழ்ச்சிகள், மற்றும் 10 ஆயிரம் லீட்டர் மீன் குளம் என்பன அவரது மாளிகையில் இருந்தன.

ஆடம்பரமாக வாழ்ந்தாலும், இந்தியாவில் 7 லட்சம் பேருக்கு ராய் வேலை கொடுத்ததைப் பாராட்டினார்கள். இந்தியாவின் ரயில்வே இலாகாவுக்கு அடுத்தபடியாக, அதிகம் பேருக்கு வேலையளித்த நபர் அவர்தான் என்று புகழ்ந்தார்கள்.

மொத்தத்தில், சஹாரா நிறுவனத்தின் சுப்ரதா ராய், புதிய இந்தியாவை உருவாக்குகிறார் என்றார்கள்.

சரி. சுப்ரதா ராய் இப்போது எங்கே? சிறையில் இருக்கிறார். அவர்மீது மோசடிக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன. அவரது மெகா நிறுவனத்தில் பங்குகளை வாங்கிய சாதாரண இந்தியர்களின் பணத்தை மோசடி செய்தார் என்பதே, அவர் மீதான குற்றச்சாட்டு.

மற்றொரு இந்தியக் கோடீஸ்வரர் கிங்ஃபிஷர் விஜய் மல்லையா, இந்தியாவின் தேசிய வங்கிகளுக்கு பல ஆயிரம் கோடி ரூபா நாமம் போட்டுவிட்டு, பிரிட்டனில் வசிக்கிறார். இவரை இந்தியாவுக்குக் கொண்டுவர, இதுவரை இந்திய அரசால் முடியவில்லை!



விஜய் மல்லையாவின் கிங்ஃபிஷர் ஏர்லைன்ஸ்

விஜய் மல்லையாவை கடந்த மாதம் 3ம் திகதி பொருளாதாரக் குற்றங்களுக்காக பிரிட்டனில் கைது செய்தார்கள். "ஆஹா... பார்த்தீர்களா இந்திய அரசின் சாமர்த்தியத்தை? ராஜதந்திர அழுத்தம் கொடுத்து பிரிட்டனிலேயே அவரைக் கைது செய்ய வைத்துவிட்டது இந்திய அரசு" என்று வியந்தார்கள்.

கைது செய்யப்பட்ட உடனேயே பிணையில் விடப்பட்டார் விஜய் மல்லையா. பொருளாதாரக் குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் உள்ள ஒருவரை நாடு கடத்த முடியாது என்கிறது, பிரிட்டிஷ் சட்டம். இப்போது இந்திய அரசு மல்லையாவை இந்தியாவுக்குக் கொண்டுபோக முடியாமல், கையைப் பிசைகிறது!

இரட்டை இந்தியாவில், பணக்கார இந்தியாவின் ஷொப்பிங் மோல்களில், வாரத்தின் அனைத்து நாட்களிலும் மக்கள் கூட்டம் அலைமோதுவதை காணலாம். பெரும்பாலான தகவல்தொழில்நுட்ப ஊழியர்கள், தங்களின் பெற்றோர்களுக்காக கார்கள் வாங்குகின்றனர். இவர்களைப் பார்க்கும் மற்றவர்கள், அப்படியான ஆடம்பர வாழ்க்கையைத் தாங்களும் அடைவதை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்கிறார்களா?


இந்தியாவில் இருந்தபோது ஆஹா, ஓஹோ விஜய் மல்லையா

ஆம் என்கிறார் கார்வால். "பணக்காரர்களால் தற்போது இந்தியாவில் புதிதாக ஒரு ஆக்கபூர்வமான மாற்றம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது," என்று கூறும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் கார்வால், 'ஒன்று கூடுமிடம்' என்ற தனது தொலைக்காட்சி நிகழ்ச்சியின் விருந்தினர்களாக கோடீஸ்வரர்கள் கலந்து கொண்டதால், பார்வையாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்து விட்டது என்கிறார்.

"இந்த நிகழ்ச்சி, சாதிக்க வேண்டும் என்பவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறது" என்று அவர் கூறுகிறார். "வெற்றிகரமான மனிதர்கள் எப்படி சாதித்தனர்? அவர்கள் எவ்வாறு உள்ளனர்? என்பதை அறிய பலர் ஆர்வமாக இருக்கின்றனர். இதுதான் வாழ்க்கையில் அவர்கள் உயர்வதற்கான ஆரம்பம்" என்று அவர் கூறுவதிலும் விஷயம் இருக்கத்தான் செய்கிறது.

கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட விருந்துக்கு மீண்டும் போகலாம். நடாத்திய அந்த விருந்தில் கலந்து கொண்ட துன்சி வாடியா இந்தக் கருத்தையே வேறு விதமாகக் கூறுகிறார்.

வால்டர் தாம்சன் விளம்பர ஏஜென்சியின் எக்ஸிகியூட்டிவ்வான 43 வயதான துன்சி வாடியா, முகேஷ் அம்பானியைப் 'புனிதர்' என்று கூறுகிறார். "எங்களுக்கு மேலும் பல முகேஷ் அம்பானிகள் தேவைப்படுகின்றனர். இந்தியாவில் கடந்த 50 ஆண்டுகளைவிட கடந்த 5 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மற்றவர்களை விட முகேஷ் அம்பானி அதிகம் சாதித்துள்ளார்" என அவர் கூறுகிறார்.

பெரும் பணக்காரர்கள், சாதாரண மக்களுக்கு திகைப்பை ஏற்படுத்துகின்றனர் என்பதை இந்தியா கண்டுகொண்டுள்ளது என்று இவர்கள் கூறுவதை வனாய்க் ஒப்புக்கொள்கிறார். "இத்தகைய பணக்காரர்கள் மக்களின் பார்வையில் இந்தியாவின் ரோல் மாடல்களாக மாறி வருகின்றனர்" என அவர் கூறுகிறார்.

பத்திரிகையாளர் தாஸ் குப்தா, "இந்தியாவின் புதிய கோடீஸ்வரர்கள் மத்தியில் நிலவும் 'தன்னம்பிக்கை', தேசிய பெருமையை மீட்டெடுக்க உதவுகிறது" என்கிறார்.

"இருபது ஆண்டுகளுக்கு முன், இந்தியாவை விட்டு வெளியேறுவது மிக முக்கியமானதாக கருதப்பட்டது. ஆனால் இன்று? மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களுக்கான தேசிய சங்கத்தின் அறிக்கையில், கடந்த மூன்று ஆண்டுகளில் அமெரிக்காவிலிருந்து 35,000 இந்தியத் தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் நாடு திரும்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நம்மால் புதிய இந்தியாவை உருவாக்க முடியும் என்ற கருத்து இளைஞர் மத்தியில் வலுப்பெற்றுள்ளது" என்பது அவரது கருத்து.

இவரது இந்தக் கருத்தும், இந்தியாவின் கிராமப்பகுதிகளில் இன்னமும் புதிதாக நக்சலைட்கள் உருவாகும் சூழ்நிலையும், நாட்டுக்குள் ஒரு நாடாக இரண்டு இந்தியாக்கள் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

இந்தியாவின் மக்களில் பெரும்பான்மை பணக்காரர்கள் அல்ல, ஏழைகள்தான். இந்தியா என்ற பெரிய நாடு இவர்களது வீடுதான். அந்தப் பெரிய வீட்டுக்குள் இருக்கும் மிகச் சிறிய வீடாகப் பணக்காரர்கள் இருக்கிறார்கள். ஆனால் சின்னவீடு, பெரிய வீட்டை ஆட்டிப்படைக்கும் அதிசயம்தான் அங்கேயுள்ள விசித்திர நடைமுறை.

இந்தியா போன்ற நாடுகளில் பெரும் பணக்காரர்கள் எப்போதும் கதாநாயகர்களாக மதிக்கப்படுவது வழக்கம். அவர்கள் தும்மினாலும் அது ஒரு ஸ்டைலாகப் பார்க்கப்படும். அவர்கள் பேசும் ஒவ்வொரு சொல்லுக்கும் அர்த்தம் கற்பிக்கப்படும்.

கிங்ஃபிஷர் விஜய் மல்லையாவைப் பாருங்கள். இந்தியாவில் இருந்தபோது, கிங்ஃபிஷர் பியர் தயாரிப்பாளர், அதே பெயரில் விமான நிறுவனத்தையும் தொடங்கினார். பெண்களோடு நின்று போஸ் கொடுத்து அந்தப் போட்டோக்களை மீடியாக்களில் வர வைப்பதில் அலாதி விருப்பம். அவரது முக்கிய ஈடுபாடுகளில் ஒன்று குதிரைப் பந்தயம். இந்தியாவின் முக்கிய நகரங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களில் அவரது குதிரைகள் ஓடின.

அப்படியொரு குதிரைப் பந்தயத்தில் தனது குதிரைகளில் ஒன்றான ஃபேன்டா புலவ்ஸ் கிங் என்ற பெயருடைய குதிரை எப்படி வெற்றிகளை குவித்து வருகிறது என்பது பற்றி முன்பு அவர் இந்தியா டுடே சஞ்சிகைக்கு பேட்டி கொடுத்திருந்தார்.

"அவனை (குதிரை), சுதந்திரமாக ஓட விட வேண்டும். எதை அடைய வேண்டுமோ, அதை சரியாக அடைந்து விடுவான். அவனைத் தன்பாட்டில் ஓட விட்டால், தன்னால் என்னதான் பண்ண முடியும் என்பதையும் உங்களிடம் காட்டிவிடுவான்" என அந்தப் பேட்டியில் மல்லையா குறிப்பிட்டார்.

தன்னுடைய தேசத்தைப் பற்றியும்கூட அவர் அவ்வாறு ஊகித்துக் கூறியிருந்திருக்கலாம்... இல்லையா?

ஏனென்றால், அவரது கூற்றையே எடுத்துக் கொண்டால், "அவன் (தனது தேசம்), தன்னால் என்ன பண்ண முடியும் என்பதை உங்களிடம் காட்டி விடுவான்" வாக்கியம் அருமை! அதுதான் பிரிட்டனில் இந்திய அரசு காட்டிவிட்டதே!

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

சர்வதேச புலனாய்வு

# இவர் ராணுவ ரகசியம் கடத்த வரவில்லை!

## விஷயம் அதைவிடப் பெரியது

கடந்த வாரம் ரஷ்யாவில் இஸ்ரேலிய உளவாளியொருவர் அகப்பட்டார் என்று செய்திகளில் அடிபட்டதை நீங்கள் கவனித் திருக்கலாம். மாஸ்கோவில் வைத்து உளவாளி என்று கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப் பட்டவர், தமது உளவாளியல்ல என்று உடனேயே இஸ்ரேல் மறுப்புத் தெரிவித்தது.

ஆனால் அவர் நிச்சயமாக இஸ்ரேலிய உளவாளிதான் என்று அடித்துக் கூறியது ரஷ்யா! இப்போதும் அப்படித்தான் கூறுகிறது.

இவர்கள் குறிப்பிடும் நபர் மாஸ்கோவிலுள்ள இஸ்ரேலியத் தூதரகத்தில் பணிபுரிந்தவர். தூதரகத்தில் பணிபுரிந்துகொண்டு, அதேநேரத்தில் உளவாளியாகச் செயற்பட்டு ராணுவ ரகசியங்களைக் கடத்தினார் என்பது ரஷ்யாவின் குற்றச்சாட்டு.

தனது தூதரகத் தொடர்புகளை வைத்துக்கொண்டு, ரஷ்ய ராணுவ வட்டாரங்களில் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார் என்கிறது ரஷ்யா. ராணுவத் தொடர்புகளின் ஊடாகக் கிடைக்கும் தகவல்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தார் என்றும் கூறுகின்றது.

இவர்மீது சந்தேகப்பட்டு இவரைக் கண்காணித்ததில், இவரது உளவு வேலைகளை தாம் அறிந்து கொண்டதாக ரஷ்ய உளவுத்துறை தெரிவித்திருக்கின்றது.

அதையடுத்து, இவர் இரவு உணவு அருந்திக்கொண்டிருக்கையில் ரஷ்ய உளவுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். சானல்-2 தொலைக்காட்சி, இந்த நபரின் பெயரின் பெயரை வெளியிட்டிருக்கின்றது.

யாடிம் லெய்டரோஷ்கி என்பது தொலைக்காட்சி கூறும் பெயர். (பெயர் ரஷ்யப் பெயர் போல இருக்கிறது. ஆனால், இஸ்ரேலிய உளவாளி என்கிறார்கள். ஒரு வேளை இஸ்ரேலில் குடியேறிய ரஷ்ய யூதராக இருக்கலாம்)

இதுபற்றி பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள இஸ்ரேல், குறிப்பிட்ட நபர் தமது உளவாளி அல்ல என்று கூறியிருக்கின்றது. அவரிடமிருந்து எந்த ராணுவ ரகசியங்களையும் தாம் பெற்றிருக்கவில்லை என இஸ்ரேலிய ராணுவமும் அறிவித்துள்ளது.

இதெல்லாம் கடந்த வாரம் நடந்தபோது, இதிலுள்ள உள்விவகாரம் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. இப்போதுதான் உள்விவகாரம் உளவு வட்டாரங்களில் மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளது. விஷயம் கொஞ்சம் பெரியதுதான்.

அது ஆயுத டீல் ஒன்றைப் பற்றியது.

ரஷ்யா ஏன் இவ்வளவு விடாப்பிடியாக இந்த நபர்மீது குற்றம்சாட்டியது என்ற விஷயம் இப்போதுமிக நன்றாகவே புரிகின்றது.

அதே நேரத்தில், இவரைப்பற்றி, இஸ்ரேலிய ராணுவம் கூறியதும் உண்மைதான். காரணம், இவர் உண்மையில் ரஷ்ய ராணுவ ரகசியங்களை இஸ்ரேலிய ராணுவத்துக்காக உளவுத் தகவல்களைச் சேரிக்க அனுப்பப்பட்ட ஆளல்ல என்றே தெரிகிறது.

ஆனால், ரஷ்யாவின் ஆயுத விற்பனை ஒன்றைப்பற்றி மாஸ்கோவில் தகவல் திரட்டிக் கொண்டிருந்தார் என்று தெரியவருகிறது.

இந்த ஆயுத விற்பனையில், வாங்கும் பார்ட்டி ஈரான்!

S-300 ஏவுகணைகளின் விற்பனைதான் இதிலுள்ள டீல். மொத்த மதிப்பு 700 மில்லியன் டொலர். மொத்தம் 5 ஏவுகணைகளை விற்பதாக ரஷ்யா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தது.

அந்த நேரத்தில்தான் ஐ.நா.வின் பாதுகாப்புக் கவுன்சிலில் இந்த டீல் தொடர்பாக உறுப்பு நாடு ஒன்று புகார் செய்ததாகத் தெரிவித்த ஐ.நா., ஈரான் மீதான ஆயுத விற்பனைத் தடை அமலில் இருக்கிறது என்பதை ரஷ்யாவுக்குச் சுட்டிக்காட்டியது. (புகார் தெரிவித்த உறுப்பு நாடு எது என்று ஐ.நா. தெரிவிக்கவில்லை. அந்த நாடு அமெரிக்காதான் என்பதே ஊகம்)

ரஷ்யாவும் உடனே நல்ல பிள்ளையாக, ஆயுத விற்பனை கான்சல் என்று அறிவித்து விட்டது. ஆனால், கதை அத்துடன் முடியவில்லை.

முதலில் பேசப்பட்ட டீலுடன் மேலதிகமாக 150 மில்லியன் டொலரைச் சேர்த்து, மொத்தம் 850 மில்லியன் டொலருக்கு ஏவுகணைகளை ரகசியமாக விற்க முன்வருகிறது ரஷ்யா என்ற தகவல், இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத்துக்குக் கிடைத்ததாகக் கூறப்படுகின்றது.

இதுபற்றிய உளவுத் தகவல்களைப் பெற மொசாத், தமது உளவாளி ஒருவரை மாஸ்கோவுக்கு அனுப்பி வைத்தது. அப்படி அனுப்பப்பட்ட நபரே, ரஷ்யர்களால் கைது செய்யப்பட்ட யாடிம் லெய்டரோஷ்கி என்ற பெயரில் குறிப்பிடப்படும் நபர்! (இந்தப் பெயர் அநேகமாக அவரது நிஜப் பெயராக இருக்காது).

இதுதான் தற்போது வெளிவந்துள்ள தகவல்.

யாடிம் லெய்டரோஷ்கி, மாஸ்கோவில் வைத்துக் கைது செய்யப்பட்டு, இரண்டு நாட்களின்பின் நாடுகடத்தப்பட்டார். அவரைத் தொடர்ந்தும் ரஷ்யாவில் தடுத்து வைத்திருக்க முடியாத காரணம், அவர் தூதரகத்தில் பணியாற்றியதுதான். அதாவது அவர், ராஜதந்திரப் போர்வைக்குள் வந்து, தப்பிக்கொண்டார்.

நாடுகடத்தப்பட்டு இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்ட அவர், இந்த விற்பனை டீல் பற்றிய ரகசியங்களைத் தெரிந்துகொண்டு சென்றாரா என்பதுதான் தெரியவில்லை.

அவசரப் படாதீர்கள். சில நாட்களில் அந்த விஷயமும் வெளிவந்துவிடும்.



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் சந்தடிமிக்க பிரதான வீதியில் அமைந்துள்ள பிரபல உணவகம் ஒன்றின் முன்னால் தென்பட்ட காட்சிதான் மேலே குறிப்பிடப்பட்ட காட்சி. உடலை ஒட்டிய ஜீன்ஸ் மற்றும் கறுப்பு நிற ஜாக்கட் அணிந்து பாக்தாத் நகரில் உள்ள அந்த உணவகத்தின் நுழைவாயிலில் காவலர்கள் தயாராக நிற்கின்றனர். பாதுகாப்பு தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்ள அவர்களின் கையில் வோக்கி டோக்கி இருக்கிறது.

பத்து அடி தொலைவில் குண்டு வெடித்தால் நோ ப்ராப்ளம்!

# நீங்கள் உணவைச் சுவைத்து உண்ணலாம்!!

நீங்கள் எவ்வளவுதான் காச்சுமூச்சென்று கத்தினாலும், அந்த உணவகத்தின் கதவுக்கு வெளியே நடக்கும் சோதனையில் இருந்து நீங்கள் தப்பவே முடியாது. உங்களிடம் துப்பாக்கி இருக்கிறதா என்று பார்ப்பதுதான் அங்கு நடத்தப்படும் சோதனை!

நீங்கள் எவ்வளவு பெரிய புள்ளியாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போங்கள் பரவாயில்லை... ஆனால் அந்த உணவகத்தின் கதவுக்கு வெளியே நடத்தப்படும் சோதனைக்கு நீங்கள் அவசியம் உள்ளாக வேண்டும். (ஒருவேளை உங்களிடம் துப்பாக்கி இருந்தால், அதனைப் பெற்றுக்கொண்டு அதற்கு ஒரு பற்றுச்சீட்டு அங்கு வழங்கப்படும். திரும்பிச் செல்லும்போது அதைக்காட்டி உங்கள் துப்பாக்கியை எடுத்துச் செல்லலாம்)

இலங்கையைப் போலவே நீண்டகாலமாக யுத்தம் ஒன்று நடைபெற்று, அவ்வப்போது வீதியோர வெடிகுண்டுகளும் வெடித்துக்கொண்டிருந்த ஒரு நகரின் இயல்பு வாழ்க்கை, யுத்தம் முடிந்தபின் இப்போது எப்படியிருக்கிறது' என்று அறிய ஆவலா? அதற்கு நீங்கள் அவசியம் வரவேண்டிய இடம் இதுதான்! வாருங்கள் போகலாம், பாக்தாத் நகருக்கு!

சந்தேகத்துக்குரிய எந்தவொரு சிறிய அசைவும் அந்த வோக்கி டோக்கிகள் மூலமாக கன்ட்ரோல் ரூம் ஒன்றுக்குத் தெரியப்படுத்தப்பட, அடுத்த சில நிமிடங்களில் மேலதிக காவலர்கள் மோப்ப நாய்கள் சகிதம் வந்து சேர்கின்றனர். காவலர்கள் அனைவரது கைகளிலும் லோட் செய்யப்பட்ட யந்திரத் துப்பாக்கிகள் இருக்கின்றன. எந்த நேரமும் உஷாராக இருக்கிறார்கள்.

இந்த உணவகத்தில் உணவருந்த வரும் செல்வாக்குள்ள பிரபலமானவர்கள் கூட அங்கு வீதி முனையிலேயே காரிலிருந்து இறங்கிவிட வேண்டும். அங்கிருந்து உணவகத்தின் வாயில்வரை நடந்துதான் வர வேண்டும். அவர்களது காரும் வெடிகுண்டுச் சோதனையில் இருந்து தப்புவதில்லை.

அந்த உணவகத்துக்கு வெளியே, ஈராக்கில் போருக்குப் பிந்திய இரவு வாழ்க்கையைக் கொண்டு வருவதற்காக, படையினர் தங்களது எதிர்காலம், சிரிப்பு என அனைத்தையும் உதறிவிட்டு, ஆபத்தை எதிர்கொள்ளத் தயாராகக் காத்திருக்கின்றனர்.

தற்போது பாக்தாத் நகரின் மையப் பகுதியில் வெடிகுண்டுகள் வெடிப்பதில்லை என்றாலும் பாதுகாப்புப் பரபரப்புக்கள் எதுவும் குறையவில்லை. துப்பாக்கி சகிதம் சுற்றிக்கொண்டிருக்கும் படையினரை எங்கும் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால், பாக்தாத் நகருக்கு வெளியே இப்போதும் குண்டுகள் வெடிக்கின்றன.

இதோ, கடந்த வாரம் அங்கு நடந்தவற்றைப் பாருங்கள். நவம்பர் 21ம் திகதி, பாக் தாத் நகரில் இருந்து 180 கி.மீ. வடக்கேயுள்ள துஸ் கொர்மாடோ நகரில் உள்ள சந்தையில் மனித வெடிகுண்டு வெடித்ததில், 32 பேர் கொல்லப்பட்டார்கள், 85 பேர் காயமடைந்தார்கள். கொல்லப்பட்டவர்களில் ஈராக்கியப் பாதுகாப்புப் படை யினர் ஏழு பேரும் அடக்கம். பாக்தாத் நகருக்கு வெளியே ஜிஸ்ர் தியாலா என்ற இடத்தில் வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில், இருவர் கொல்லப்பட்டனர், ஏழு பேர் காயமடைந்தனர். இது நடந்தது, நவம்பர் 24ம் திகதி.

தினமும் வெளியாகும் இப்படியான செய்திகள் பற்றி பாக்தாத் நகரில் வசிக்கும் யாருமே கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

"போரா? இங்கு எங்கே போர் நடக்கிறது? இன்றைய பாக்தாத்தின் இரவு வாழ்க்கையில் வெளிநாட்டில் வசிக்கும் ஈராக்கிய மக்களின் பணமல்லவா தண்ணீர் போலப் பாய்கிறது" என்று அன்டோனி அல்ஹக் கூறுகிறார்.

இவர் யுத்தம் முடிவடைந்தபின் வெளிநாடு ஒன்றிலிருந்து தாயகத்துக்கு உல்லாசப் பயணியாக வந்துள்ள ஒரு முன்னாள் ஈராக்கியப் பிரஜை.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡





இவரது கூற்றுப்படி யுத்த காலத்தில் ஈராக்கைவிட்டு வெளியேறி வெளிநாட்டில் வசிக்கும் ஏராளமான ஈராக்கியர்கள் தற்போது வெளிநாடுகளில் சம்பாதித்த பணத்துடன் பாக்தாத் நகர வீதிகளில் நடமாடுகிறார்கள். உள்நாட்டு ஈராக்கியர்கள் தினாரில் (ஈராக்கிய நாணயம்) செலவுசெய்யும் திறனைவிட, வெளிநாட்டில் வசிக்கும் ஈராக்கியர்களிடமுள்ள டொலர் மற்றும் யூரோவுக்கு வாங்கும் சக்தி அதிகம்.

நான்கு வருடங்களுக்கு முன் நான் பார்த்த பாக்தாத்திலிருந்து இன்றைய பாக்தாத் பெரியளவில் மாறிவிட்டது. இந்த ஆண்டில் புதிய உணவகங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பாக்தாத் மக்கள் இழந்திருந்த இரவு நேர உற்சாகம் அவர்களுக்கு மீண்டும் கிடைத்திருக்கிறது.

இவை பாக்தாத் நகரில் இயல்புநிலை நிலவுவதற்கான சூழ்நிலையாகத் தென்பட்டாலும், அங்கு முன்பு குண்டுவெடிப்பு நடந்த இடங்களைச் சுற்றிலும் தொடர்ந்து தடுப்புக்களும், முள்வேலிகளும் காணப்படுகின்றன. பிரபலமான உணவகங்கள் முழுவதும் குண்டுகளால் தகர்க்கமுடியாத அடர்த்தியான கண்ணாடிச் சுவர்கள் காணப்படுகின்றன.

சில உணவகங்கள் பற்றிய விளம்பரங்கள் பாக்தாத்தின் உள்ளூர் நாளிதழ்களில் வெளிவரும்போது, "நீங்கள் உணவு உண்ணும் இடத்திலிருந்து 10 அடி தொலை வில் குண்டு வெடித்தாலும் நீங்கள் அதிர்ச்சியடையாமல் உணவைச் சுவைக்கும் அளவில் எமது உணவகம் பாதுகாப்பானது" என்று விளம்பரப் படுத்தப்படுகின்றன.

இவ்வளவு இருந்தாலும், இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட புதிய உணவகம் பற்றித்தான் நகரெங்கும் பேச்சாக இருக்கின்றது. காரணம் சமீபத்தில் திறக்கப்பட்ட புதிய உணவகம் அது. "லெபனான் நாட்டவர் ஒருவரால் நடாத்தப்படும் அந்தக் கிளப்பை (உணவகத்தை கிளப் என்றுதான் ஈராக்கில் அழைக்கிறார்கள்) நீங்கள் உள்ளே சென்று பார்த்துவிட்டீர்களா?" பாக்தாத் நகரில் சமீப காலமாகப் பரபரப்பாகப் பேசப்படும் விஷயம் இதுதான்.

லெபனான் நாட்டவரால் தொடங்கப்பட்டுள்ள அந்தக் கிளப்பில் பெய்ரூட், துபாய், மயாமி போன்ற இரவு வாழ்க்கைக்குப் பெயர்போன நகர உணவகங்களில் உள்ளது போன்ற நவீன கழிவறைகள் இருக்கின்றன... ஆனால், அந்த இடங்களில் உள்ளதைப் போன்று இங்கு கழிவறைக்குள் மூடிய கதவுகளுக்குப் பின்னால் கொகெய்ன் பயன்படுத்தப்படுவதில்லை. (கொகெய்ன் என்றால் என்னவென்று தெரியாதவர்கள் அருகிலுள்ள நைட் கிளப் ஒன்றுக்குச் சென்று விசாரிக்கவும்).

"இது உயர்தரமான இடம்" என்று அன்டோனி அல்ஹக் கூறினார். அவர் கூறுவது சரிதான். அளவு, அமைப்பு ஆகியவற்றைப் பார்க்கையில் இந்தக் கிளப்புக்கு இணையான கிளப் ஏதும் பாக்தாத் நகரில் தற்போது இல்லை.

சிவப்பு, தங்கம், பழுப்பு நிறத்தில் காணப்படும் தோல், கண்ணாடி, முதலைத் தோல் ஆகியவை கிளப்பின் தூண்களை அலங்கரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சலவைக்கற்கள் லெபனானில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளன. மரத் தளத்துக்கான மரங்கள் துபாயில் இருந்தும், மேசை, நாற்காலிகள் இந்தோனேஷியாவில் இருந்தும் வரவழைக்கப்பட்டுள்ளன.

பெரிய திரையைக் கொண்ட டீவிக்களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரண்டு அடுக்கு ஜன்னல்கள் கொண்ட கியூபிக்கிள் அறைகளில் இருந்து கண்டு களிக்கலாம். இந்த உணவகத்துக்கு அடிக்கடி வரும் வாடிக்கையாளர்களுக்கு விசேட கியூபிக்கிள் அறைகள் ஒதுக்கப்படுகின்றன. அதில் என்ன விசேஷமென்றால் டிக்ரிஸ் நதியைப் பார்க்கும் வகையில் அமைந்த கியூபிக்கிள் அறைகள் அவை.

உணவருந்தும் மேசையில் இருந்தே டிக்ரிஸ் நதியைப் பார்க்கும் வசதி, முன்பு சதாம் ஹுசேனின் மனைவி மற்றும் மைத்துனியின் அரண்மனையில் மட்டுமே இருந்தது என்கிறார், இந்தக் கிளப்பின் உரிமையாளர் அல் ஜுலேனி ஹேக்.

அதாவது, இதெல்லாம் ஒரு காலத்தில் ராஜபோகங்களில் ஒன்று!

இரவு நேரத்தில், கிளப்புக்கு வருபவர்கள் மற்றும் இங்கு நண்பர்களை அழைத்து விருந்து கொடுப்பவர்களுடன் ஹேக்கும் இணைந்துவிடுகிறார். "பிரெஞ்ச் மொழியில் பேசுவதுதான் எனக்கு விருப்பம்" என்று அவர் நகைச்சுவையாக கூறினார்.

வர்த்தக நோக்கத்துக்காக லெபனானிலிருந்து, ஈராக்வரை வந்து, உணவகம் ஒன்றை அமைத்துள்ள லெபனான் பிரஜையான ஹேக்குக்கு 'ஷதாரா' என்ற சொல்மீது விருப்பம் அதிகம். இவர் விரும்பும் அளவுக்கு அந்தச் சொல்லின் அர்த்தம்தான் என்ன?

ஷதாரா என்ற அரபு மொழி வார்த்தையின் குத்துமதிப்பான மொழிபெயர்ப்பு "சூழ்ச்சித்திறன், அல்லது துன்புறுத்தாமல் மோசடி செய்வது" என்பதுதான்!

ஒரு தலைசிறந்த வர்த்தகர் என்றால் அவர் 'ஷதாரா'வில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும் என்பது லெபனானில் பரவலாகக் கூறப்படுவது வழக்கம். அதாவது, சூழ்ச்சித்திறனுடன் மோசடி செய்வதாலேயே வியாபாரத்தில் உயரமுடியும், அதை மற்றையவர்களைத் துன்புறுத்தாமல் செய்யவேண்டும்!

உதாரணத்துக்கு பெய்ரூட்டில் ஒருமுறை ஷதாரா பற்றி காதில் விழுந்த வரிகள்: "நான் உங்களை ஏமாற்றமாட்டேன்" என்று வீட்டுக்குச் சொந்தக்காரர், அங்கு வாடகைக்கு இருப்பவரிடம் கூறினால், "நான் உங்களை ஏமாற்றப்போகிறேன், ஆனால், நாளைக்கும் எனது வீட்டைத்தான் நீங்கள் வாடகைக்கு எடுக்க வரவேண்டும் என்ற வகையில் 'நியாயமாக' ஏமாற்றுவேன்" என்பது அவர் கூறியதில் மறைந்துள்ள அர்த்தம்.

தான் தனது தாய்நாடான லெபனானில் மாத்திரமல்ல, அதற்கு வெளியே எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கு பணம் சம்பாதிப்பதில் தனித்திறமை பெற்றவர் ஹேக். பதட்டம் சூழ்ந்த ஈராக்வரை வந்து உணவகம் ஒன்றை அவர் உருவாக்க எண்ணியபோது, அந்த வர்த்தகத்தில் தனது கூட்டாளிகளாக சில உள்ளூர் ஈராக்கியர்களையும் இணைத்துக்கொண்டார்.

"வெளிநாட்டில் வசிக்கும் ஈராக்கியர்கள் ஈராக்குக்குள் வந்து செலவிடும் பணத்தை நம்பியே ஈராக்கின் பொருளாதார முன்னேற்றம் இருக்கின்றது. ஆனால், தாயகம் திரும்பும் ஈராக்கியர்களைத் தற்போதைய ஈராக்கிய அரசு மற்றைய வெளிநாட்டுப் பிரஜைகளைப் போலவே நடத்துகின்றது. இது தவறானது. தாயகம் திரும்பும் மக்களுக்கு மற்றைய வெளிநாட்டவர்களைவிட அதிக சலுகைகள் மற்றும் வசதிகள் செய்து தரப்படவேண்டும்" என்று கூறும் அவர், ஈராக்கைவிட்டு வெளியேறும் விசா (எக்ஸிட் விசா) பெறுவதில் உள்ள இடையூறுகள் குறித்து புகார் கூறுகிறார்.

ஈராக்கைவிட்டு வெளியேறும் பயணி, அவர் யாராக இருந்தாலும் அவருக்கு இத்தகைய எக்ஸிட் விசா அத்தியாவசியம். ஈராக்கில் பிறக்காத வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு இந்த விசாவைப் பெறுவது வெறும் ஒரு மணிநேர அலுவல். ஆனால், ஈராக்கில் பிறந்து வெளிநாட்டில் வசிக்கும் முன்னாள் ஈராக்கியர்களுக்கு நாட்டைவிட்டு வெளியேறும் விசாவைப் பெற அதிக காலம் எடுக்கும்.

காரணம் என்னவென்றால், ஈராக்கில் பிறந்த அந்த வெளிநாட்டுப் பிரஜைக்கு சதாம் ஹுசேன் அரசாங்கத்துடன் ஏதாவது தொடர்பு இருந்ததா என ஆராய்ந்த பின்னரே நாட்டைவிட்டு வெளியேற அனுமதி வழங்குகின்றது தற்போதைய ஈராக்கிய அரசு!

தற்போது வெளிப் பார்வைக்குப் பார்க்கும்போது பாக்தாத் நகரம் பிரச்சினைகளில் இருந்து மீண்டு வருவது போலத்தான் தோன்றுகிறது. மக்கள் நடமாட்டம் மிகுந்த வீதிகளில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களில் பறக்கின்றனர். உணவகங்கள் நள்ளிரவு வரை திறந்திருக்கின்றன. ஒரு நீரூற்றில் இருந்து மற்றொன்றுக்கு மீன்கள் துள்ளிக் குதிக்கின்றன.

இந்தக் கிளப்புக்கு வெளியே தனியாகப் பாதுகாப்புடன் கூடிய ஒரு பார்க்கிங் இருக்கிறது. அங்கு பாக்தாத் நகரம் 30 ஆண்டுகளாகக் கண்டிராத சொகுசு கார்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த உணவகம் திறக்கப்பட்ட பின்னர், இங்கு பிரான்ஸ் மற்றும் லெபனான் நாட்டு ராஜதந்திரிகள் அடிக்கடி வந்து உணவருந்தியுள்ளனர்.

அரசுச் செய்தித் தொடர்பாளர், அரசில் உள்ள தோழமைக் கட்சியினரை அகற்றும் அதிகாரம் கொண்ட குழுவுக்குத் தலைமை வகிக்கும் பாக்தாத் ஆளுனர், தேசியப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரும் இங்கு உணவருந்தியவர்களில் அடங்குவர்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

ஆச்சரியம் என்னவென்றால், இவர்களில் அநேகர் மெய்க்காப்பாளர்களுக்குத் தனி அறை கொண்ட வி.ஐ.பி. அறைக்குள் சென்று உணவருந்துவதைத் தவிர்த்துவிட்டு, வாடிக்கையாளர்களுடன் சேர்ந்து சாப்பிட்டுள்ளனர்.

“பாக்தாத் மாறிவிட்டது என்பதையே இது குறிக்கின்றது. பாதுகாப்பு நிலைமை உண்மையிலேயே மேம்பட்டுவிட்டது. பொதுமக்களுடன் கைகுலுக்க நெருங்கினால்கூட அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு மனித வெடிகுண்டு வெடித்தாலும் வெடிக்கலாம் என்று எந்தவொரு வி.ஐ.பி.யும் மக்கள் மத்தியில் வந்திராத நகரமாக ஒருகாலத்தில் இருந்த நகரம் இந்த பாக்தாத். இப்போது இப்படி மாறியிருக்கிறது” என்கிறார் இந்த உணவகத்தின் ஒரு மேசையில் அமர்ந்தபடி உணவுக்காகக் காத்திருக்கும் நேரத்தில் படம் வரைந்து கொண்டிருந்த அமீர் ரசாக்.

“மனித வெடிகுண்டு வெடித்தால் கொல்லப்படுவது வி.ஐ.பி.க்கள் மாத்திரமல்ல. அந்த ஏரியாவில் நின்றிருந்த நாங்களுமல்லவா இறக்க வேண்டும்” என்கிறார் அவர்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பாக்தாத் வீதிகளில் எந்த இடத்திலும் வெடிகுண்டு வெடிக்கலாம். வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த எந்தக் காரும் வெடித்துச் சிதறலாம்.

பாக்தாத் மக்கள் ரொட்டி வாங்க வேண்டுமென்றாலும், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, சுற்றும் முற்றும் பயப் பார்வை பார்த்தபடிதான், கடைக்குச் சென்ற நாட்களும் இருந்தன.

ஆனால் இன்று, அமெரிக்க விரைவு உணவுச் செயின் உணவகங்களின் நியோன் விளக்கு விளம்பரங்களில், தொலைபேசி இலக்கங்கள் மின்னுகின்றன. ஒரு போன் அழைப்புடன் அமெரிக்க விரைவு உணவு வீடு தேடி வருகிறது.

யுத்த காலத்தில் கடைக்கு ரொட்டி வாங்கச் சென்ற ஒருவர், திரும்பி வந்தால்தான், அவர் குண்டு வெடிப்பில் சிக்கவில்லை என்று அர்த்தம்!

இலங்கையில் யுத்த காலத்தின் பின் உள்ள சூழ்நிலைக்கும், ஈராக்கில் யுத்த காலத்தின் பின் உள்ள சூழ்நிலைக்கும் உள்ளமிகப் பெரிய வேறுபாடு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது! பாக்தாத்தில் கேட்டால், யுத்தமா? எங்கே நடக்கிறது?” என்று கேட்கிறார்கள்.

ஈராக்கின் சலிஹெறதீன் மாகாணத்தின் சினியா என்ற நகரில், ஈராக்கிய ராணுவத்தின், 'ஹசெட் அல் ஷாபி' என்று அழைக்கப்படும் விசேட அதிரடிப் படையினர் இன்னமும் ரொக்கெட் தாக்குதல்களை நடத்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள். வெளிநாட்டவர்கள் சலிஹெறதீன் மாகாணத்துக்குச் செல்வதற்கு, பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி வாங்க வேண்டும்.

அங்கு ஈராக்கியப் பாதுகாப்புப் படைகளின் தளபதியாக உள்ள ஜெனரல் அப்தெலமிர் யாரல்லாவிடம் கேட்டபோது, ஈராக்கின் மேற்குப் பிராந்தியத்தில் டைகிரிஸ் ஆற்றுக்கும், யூப்ரேட்ஸ் ஆற்றுக்கும் இடையிலுள்ள பகுதியில் இருந்து ISIS இயக்கத்தினரின் எஞ்சியுள்ள இறுதிக் குழுவினரைச் 'சுத்தப்படுத்தும்' தாக்குதல்களின் இறுதிப் பகுதியில் உள்ளோம்” என்கிறார்.

கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவில் இருந்து ஒளிபரப்பாகும் அல் ஜசீரா தொலைக்காட்சி சேவை, ஈராக்கில் யுத்தம் நடைபெறும் பகுதிகளை 'லைவ்'வாகக் காட்டுகிறது. ஆனால், பாக்தாத்தில் இருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சிச் சேவையில் தமது சொந்த நாட்டில் நடைபெறும் யுத்தம் பற்றி ஓரிரு வாக்கியங்களுடன் முடித்துக் கொள்கிறார்கள்.

பல ஆண்டுகள் நடைபெற்ற யுத்தம் காரணமாக களைத்துப் போன மக்களை பாக்தாத் நகரிலாவது சந்தோஷமாக வைத்திருப்போமே என்று ஈராக்கிய அரசு கருதுகிறதோ, என்னவோ!

பாக்தாத் நகரில் இரவு 12 மணிக்கும் வீதியில் நடமாட்டமும் உள்ளது. கிளப்க்ளின் வாயில்களில் 'வெடிக்காத' கார்களும் உள்ளன.


ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், வெளிநாட்டு வாழ் ஈராக்கியர்களும் எந்தப் பதட்டமும் இன்றி, நள்ளிரவிலும் வாகனப் போக்குவரத்து உள்ள வீதிகளில் சிக்னல் விழும்போது, கடந்து, நடந்து செல்கிறார்கள்.

பாக்தாத் நகரில் வசிப்பவர்களுக்கு, தாம் வசிக்கும் நகரில் இருந்து 180 கி.மீ. வடக்கேயுள்ள துஸ் கொர்மாடோ என்ற நகரில் வெடித்த மனித வெடிகுண்டு பற்றியும்...

சலிஹெறதீன் மாகாணத்தில் ஜெனரல் அப்தெலமிர் யாரல்லாவின் 'ஹசெட் அல் ஷாபி' படைப்பிரிவு செய்யும் 'சுத்தப்படுத்தல்' பற்றியும்...

**உண்மையிலேயே தெரியாதா? அல்லது தெரிந்து கொள்ள விரும்பவில்லையா?**

## Baghdad Today 2017



பாக்தாத் நகர வீதியில் இரவு நேரப் போக்குவரத்து!